# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

புரட்டாசி : 2024



# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

புரட்டாசி - 2024

படைப்புக்கள் அனுப்ப :
mullaiamuthan1954@gmail.com
mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு
ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :

R.Mahendran,
34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk

- சந்தா : 12 இதழ்களுக்கு 10 பவுண்ட்
- R.Mahendran,

A/C No: 90759821
Sort.Code: 20-67-88,
SWIFTBIC BUKBGB22
IBAN GB80 BUKB 2067 8890 7598 21
BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

*யாவரும் நலமா?*

*காற்றுவெளி மின்னிதழின்(2024) புரட்டாதி மாத இதழ் தங்களின் பார்வைக்கு வருகிறது.காற்றுவெளி பரவலாக பலரையும் சென்றடைகிறது என நம்புகிறோம்.எனினும் இன்னும் கணினி வசதியில்லாத படைப்பாளர்களையும் சென்றடையவேண்டும் என்பதே எமது பெருவிருப்பம்.அதற்கு அச்சிலும் வரவேண்டுமாதலால் அதற்கான முயற்சியிலும் மீளவும் முயல்கிறோம்.சந்தா,விளம்பரங்களின்றி கலை இலக்கிய இதழாக வரும் ஒரு இதழ்.*

*ஈழத்து மறைந்த இலக்கிய ஆழுமைகளை மறந்துவிடுதல் கூடாது என்பதால் அவ்வப்போது அவர்களின் நினைவாக சிறப்பிதழ்களை கொண்டுவந்துள்ளோம்..எஸ்.பொ,அன்புமணி,நந்தினி சேவியர்,சி.வி.வேலுப்பிள்ளை,தெளிவத்தை ஜோசெப்,சாரல்நாடன்,சசி பாரதி,கே.ஜி.மகாதேவா,தேவன் -யாழ்ப்பாணம்,அப்பச்சி மகாலிங்கம்,ஞானரதன்,வ ரதர்,கந்தவனம்,அம்பி,செங்கை ஆழியான் எனப் பலர் நினைவுகூரப்படவேண்டியவர்கள்.காற்றுவெளி என்றும் நினைத்திருக்கும்.*

*தொடர்ந்து காற்றுவெளி இதழுக்கு படைப்புகள் அனுப்பி உதவும் அனைத்துப் படைப்பாளர்களுக்கும் எமது நன்றி.*

*சந்தா அனுப்பவிரும்புபவர்கள் இதழில் விபரங்கள் உண்டு.நூலின் அறிமுகத்திற்கு ஒரு பிரதியாவது அனுப்புதல்வேண்டும்.*

*இங்கிலாந்து படைப்பாளர்களின் படைப்புக்கள் அடங்கிய சிறப்பிதழ் தயாராகிறது.காத்திருங்கள்.*

*நம்பிக்கையுடன் பயணிப்போம்.*

*அன்புடன்,*

**சோபா**

*01/09/2024*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்**

1. ஏகத்துவன்
2. ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்
3. அ.சீனிவாசன்
4. கி.கவியரசன்
5. கண்ணன் விஸ்வகாந்தி
6. முல்லைக் கமல்
7. விவேக்
8. மாரிமுத்து சிவகுமார்.
9. புதுகை ஆதீரா.
10. லதா கந்தையா(இலங்கை)
11. ஜி.சிவகுமார்
12. நேசன் மகதி
13. தங்கேஸ்
14. பா.சிவகுமார்
15. இரா.வெங்கடேஸ் குமார்
16. வி.அபிவர்ணா
17. மலர் மகள்
18. ஆ.கார்த்திக்
19. கவிஜி
20. மல்லை .மு .இராமநாதன்
21. சா. கா. பாரதி ராஜா
22. இளையவன் சிவா
23. மு.முபாரக்
24. மலர் மகள்
25. கிரேஸி மேரி.அ
26. கவிஞர். R.S.பாலகுமார் M A
27. அருணோதயா
28. சோழன்
29. கோவை ஆனந்தன்
30. சி முத்தரசன் அரியலூர்
31. த. ரவீந்திரன்
32. திக்குவல்லை கமால் ( இலங்கை )
33. க. புனிதன்
34. முஷ்தாக் அஹ்மத் (அக்குறணை)
35. DR. ஜலீலா முஸம்மில்(ஏறாவூர்)

**சிறுகதைகள்**


1. ஜூனியர் தேஜ்
2. சுந்தரிமணியன், புதூர்.
3. ஆர்னிகா நாசர்
4. ச. சத்தியபானு
5. ரகுநாத் வ-மதுரை
6. நௌஷாத் கான் .லி
7. கமலினி கதிர்(சுவிஸ்)
8. சை.கிங்ஸ்லி கோமஸ்
9. கந்தர்மடம் அ.அஜந்தன்

**கட்டுரைகள்**

1. திரு.சமயக்கண்ணு, மதுரை
2. கவிஞர் ராணி கணேஷ்(நியூசிலாந்து)


**ஏகத்துவன்**

# கோப்பி நீரில் ததும்பும் அந்நியம்



சிறு குவளையில் ஆறிக் கொண்டிருக்கும்
கோப்பி நீரில் மிதந்தலைகிறது
ஒரு சோடிக் கண்கள்.
குளிரில் நடுங்கும் இதயம்
காமத்தின் சொட்டு இச்சையுள்
நத்தையின் முதுகில் அமர்கிறது.
கொள்கைகள் மறந்த நினைவு,
பறவையின் சாயலில்
அருகம்புல் நிழலில் வளர்கிறது.
கனவுகளின் தோற்கடிப்பில்
வற்றிப் போன ஒரு கடலின் அலை.
திராட்சைச் செடியின்
கொடியிலிருந்து போதையுற்று.
கனவு என்பதும்,
நினைவு என்பதும்,
வாழ்வு என்பதும்
நூலுந்த பட்டம் என்பதே?
அந்நியம்,
கோப்பிப் பாலில் ததும்பும்
சக்கரையில்லா நுரைத்துகள்கள்.
நிலைவுறும் காலத்தில்
நீந்தும் பிரிவுகள்
கண்ணீர் சொட்டு பிசிறும் உணர்வலை.

நன்றி:முகநூல்



# அனிச்சம்

ஜூனியர் தேஜ்

தனக்கு இப்படியொரு நிலை வருமெனக் கனவிலும் நினைத்தவரில்லை குருசாமி.

இரவு, சயனத்துக்குப் போகும்போது கூட திடமாகத்தானிருந்தார்; வழக்கம்போலப் படுக்கையில் வஜ்ராசனத்தில் அமர்ந்து, கண்மூடி, கவனம் குவித்து மனம் ஒருமுகப்படுத்திக்கொண்டுதான் படுத்தார்.

விடிகாலை துயிலெழுந்தபோதே, தலைச்சுற்றல் தடுமாற்றம் ஏற்படுத்த, சுதாரிப்பதற்குள் தாறுமாறாய் சுவற்றில் சாய்ந்துவிட்டார்;

சற்றே சுதாரித்து, சுவற்றைத் தாங்கி எழுந்து நிற்க முயன்றபோது, மீண்டும் தலைக் கிறுகிறுக்க, கைகள் துவள, வேரற்ற மரம்போல, எக்குத்தப்பாய்ச் சாய்ந்து தரையில் விழுந்து விட்டார். சாயும்போது, இரும்புக் கட்டிலின் விளிம்பில் கொசு வலையைக் கோர்க்கப் பொருத்தப் பட்ட தகரக்குழல் பின்மண்டையைத் தாக்கிவிட்டது.

ரத்தக் கசிவு கண்டதும், பயந்து அடித்துக் கொண்டு, ஏற்பாடு செய்த 108ல் கொண்டுபோன குருசாமியை, அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தார்கள்.

சில பல 'டெஸ்ட்டு'களின் ரிசல்ட் பார்த்து "ஸ்ட்ரோக்" என, உறுதிப்படுத்தினார் மருத்துவர்.

ஒருவாரம் மருத்துவமனைச் கண்காணிப்பில் வைத்திருந்து, நேற்றிரவுதான் வீட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

❍ ❍ ❍

ஊசி-மருந்தில், செடேஷன் கலந்திருந்ததால் அயர்ந்துத் தூங்கிவிட்டார் குருசாமி. கண்விழித்தபோதுக் காலை மணி எட்டு; எழ முயன்றார், முடியவில்லை; உடம்பு அழுத்தியது. தன் உடம்பே தனக்கு பாரமாக இருந்தது.

மகன் குமாரும், மருமகள் செல்வியும் அலுவலகம் புறப்படும் நேரம்;

அலுவலகச் சீருடை அணிந்திருந்த குமார், அறையைத் திறந்துப் பார்த்தான்;

"அப்பா கண் விழிச்சிட்டாங்க…!"- கதவை திறந்து பிடித்த நிலையிலேயே நின்று, என்று மனைவிக்குத் தகவல் தந்தான்.

எதிர்வினையேதுமாற்றாமல் அமைதி காத்தாள் செல்வி.

❍ ❍ ❍

'தான் மருத்துவமனைச் சிகிச்சையிலிருந்த ஒரு வாரக் காலத்தில், வீட்டு நடைமுறைகளில் ஏற்பட்டத் தலைகீழ் மாற்றங்களையும், அலுவலக நெருக்கடிகளையும் சமாளித்துச் சமாளித்துத் தளர்வுற்றுத் தவிக்கிறாள் மருமகள் செல்வி…!' என்று நினைத்துக் கொண்டார் குருசாமி.

இருந்தாலும், "மாமா…! கண்ணு முழிச்சிட்டியளா…?"- என்று ஆர்வமாய் ஓடிவந்து, அன்பாய் விசாரிக்கும் மனப்பான்மை உள்ள மருமகள், அமைதியாய் ஒளிந்துகொள்வது வருத்தமளித்தது அவருக்கு.

'எதிர்காலத்தை, எப்படிச் சமாளிக்கப் போகிறோம்…?' - என்கிற மன உளைச்சலில் தவிக்கும் மருமகளின் நிலையையும் உணரமுடிந்தது குருசாமியால்.

துள்ளலோடு எழுந்து, ஆர்வத்தோடு அருகே வந்து, என்ன? ஏது? – என விசாரித்துப் பணிவிடை செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை குருசாமி.

'தேறி வந்துட்டியளா மாமா.. ரொம்பச் சந்தோஷம்…!" என்று சொல்லி முகத்தில் ஒரு சின்னச் சந்தோஷ ரேகையைப் படறவிட முடியாத அளவுக்கு சோர்ந்துவிட்டாளே செல்வி…?' மனசு மருகிற்று குருசாமிக்கு.

“நான் ஆபீஸ் புறப்படறேன்ம்ப்பா...!”- அப்பாவின் முகத்தைக்கூடப் பார்க்காமல், கைக்கடிகாரத்தைப் பார்த்தபடியே உத்தரவு வாங்கிக்கொண்டு, அரைகுறையாய்த் திறந்தபடிப் பிடித்திருந்தக் கதவை விட, அது மெதுவாகச் சார்த்திக் கொண்டது.

“நீ லீவு போட்டுக்கச் செல்வி...வேற வழியில்ல !”- என்று குமார் சுரத்தின்றிச் சொன்னதும் மூடிய கதவைக் கடந்து உள்ளே புகுந்து குருசாமியின் காதில் புகுந்தது.

❍ ❍ ❍

ரெவின்யூத் துறையில், 36 வருடங்கள் பணிபுரிந்தவர் குருசாமி.

பல நிலைகளில் நேர்மையாகப் பணியாற்றிப், படிப்படியாகப் பதவி உயர்வுப் பெற்று, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராகப் பணி ஓய்வு பெற்றவர்.

‘எந்த நாளும் காப்போம்...!’ - என்ற வைராக்கத்தோடு இனி ஒரு விதி செய்யும் கர்மயோகி அவர்.

ஓய்வு பெறுவதற்கு ஆறு மாதம் முன்பு ‘மாசிவ் அட்டாக்’கில் மனைவியை இழந்தபின். யதார்த்தம் உணர்ந்து, மகனையும் மருமகளையும் சார்ந்து வாழத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டார்.

மாவட்ட நிர்வாகத்தையேத் திறம்பட நிர்வாகித்த குருசாமிக்குச் சில பிரத்யேகமான உயர்-குணங்கள் ரத்தத்திலேயே ஊறியிருந்தன.

சரியானத் திட்டமிடுதலுக்குத் தேவையான உளவுறுதியும், நுண்ணறிவும், கருத்துருத் திறனும், பட்டனுபவமும் உள்ள குருசாமி,. தன் சுயத்துக்குக் குந்தகம் வராத வகையில் திட்டங்களை வகுத்தார்.

❍ ❍ ❍

‘முதுமை என்பது காலம் அனைவருக்கும் கொடுக்கும் தீர்ப்பு, அதைப் பரிசாய் எண்ணி மகிழ்ந்து ஏற்றலும், தண்டணையாய் எண்ணி வருந்தி நிராகரித்தலும் தனி மனிதனின் மனோபாவத்தைப் பொறுத்தது..’ என்பது அவர் கருத்து.

பணி ஓய்வுக்குப் பின் வந்தப் பணப்பலன்களை மகன் குமார் பெயரிலும், மருமகள் செல்வி பெயரிலும், வங்கியில் நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தினார்.

மரியாதையென்பது , பணத்தாலோ, பதவியாலோ, பொருட்களாலோ வருவதல்ல, அது நடத்தையால் வருவது.

‘பாஸிடிவ் சைக்காலஜி’ சொல்வதைப் போல மற்றவருக்குப் பயனுள்ள வகையில், *(Meaningful life)* ‘பொருள் பொதிந்த வாழ்க்கை’ வாழவேண்டும் என்ற வைராக்யத்துடன் வாழ்ந்தார் குருசாமி.

மகன் மற்றும் மருமகளின் ‘பிரைவசி’க்கு எந்த வகையிலும் இடையூராகிவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்தார்.

❍ ❍ ❍

“ரெண்டு பேரும் ஒரு பத்து நிமிஷம் எனக்காக நேரம் ஒதுக்க முடியுமா?” பணி ஓய்வு பெற்று ஒரு வாரம் கடந்து, ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று, மகன், மருமகளிடமும் ஒரு சேரக் கேட்டுக் கொண்டார்.

“வான்னா வரோம்? ஏன் மாமா ஃபார்மலாப் பேசறீங்க?” - என்றாள் செல்வி.

“சிலபல விஷயங்களைச் சொல்றேன் கவனமாக் கேட்டுக்கோங்க...?” – என்றுத் தொடங்கினார் குருசாமி.

“நீங்க ‘ஃப்ரீயா’ இருங்க மாமா? எதையாவது மனசுல போட்டுக் குழப்பிக்காதீங்க மாமா?”- வார்த்தைக்கு வார்த்தை ‘மாமா’ என விளித்துக் கரிசனமாகத்தான் பேசினாள் செல்வி.

‘இந்த அன்பு நிரந்தரமாக இருக்கவேண்டும் என்றால் வெளிப்படையாகப் பேசித்தான் ஆகவேண்டும்...!’ முடிவெடுத்தார் குருசாமி.

“ஃப்ரீயாத்தான் இருக்கேன்ம்மா...! என்னோட எதிர்கால நடைமுறைகளை உங்களுக்குத் தெளிவாச் சொல்லப் போறேன்மா.”

“ஓ கே மாமா...! உங்கத் திருப்திக்காகக் கேட்டுக்கறோம். சொல்லுங்க...!”

சொன்னார்...! சொன்னதோடு நிறுத்தவில்லை. செயல் வீரராகத்தான் இத்தனைக் காலமும் நடந்து கொண்டார் .

❍ ❍ ❍

காலை 5 மணிக்குத் துயிலெழுவார் குருசாமி. காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, சமையலரையில்

நுழைந்து, 'ஃபில்டரில்' காப்பித்தூள் போட்டு, கொதிநீர் விடுவார்.

ஹால் மேசையில் செல்வி வைத்திருக்கும் காய்கறி 'லிஸ்ட்'டையும் 'பர்ஸை'யும் எடுத்துக் கொண்டு, மார்கெட்டிலிருந்து பால், காய்கறிகள் வாங்கிவருவார். வந்தபிறகு மீண்டும் காபிஃ பில்டரில் இன்னொரு முறை கொதிநீர் ஊற்றுவார்.

பால் காய்ச்சிக், காபித் தயாரித்து அருந்துவார்.

ஆறரைக்கு மகனும் மருமகளும் படுக்கையறையிருந்து வெளியே வரும் முன் முதல்நாளே தீர்மானித்து வைத்த மெனுப்படிக் 'காய் கறிகளை அரிந்தும், கீரை ஆய்ந்தும், புளிக் கரைத்தும், தேங்காய்த் துருவியும் வைத்து மூடிவிட்டு, மாடியேறிவிடுவார்.

மொட்டை மாடியில், தொட்டிகளில் வளர்ந்திருக்கும் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுதல், களையெடுத்தல், பழுத்து உதிர்ந்த இலைகளைக் கூட்டிச் சுத்தம் செய்தல் என்று 'பிஸி'யாக இருப்பார்.

❍ ❍ ❍

ஷெட்யூல்படி, "நாங்க ஆபீஸ் புறப்படறோம் மாமா...!" என்ற மருமகளின் குரல் எட்டு மணிக்கு வரும். மகனும் மருமகளும் அலுவலகத்திற்குக் கிளம்பிச் சென்றபின், வாசல் 'கிரில்' கதவைச் சார்த்தி உள்ளேப் பூட்டிக்கொண்டு வீட்டுக்குள் வருவார்.

சமையலறை 'ஸிங்க்'கில் கிடக்கும் பாத்திரங்களைத் தேய்த்துத் கவிழ்ப்பார்.

துவைத்தும் பிழிந்தும் தன் கடமையைச் செய்துவிட்டு நின்றுபோன 'வாஷிங்மிஷினின் வயிற்றிலிருந்துத் துணிகளை எடுத்து உதறி பிளாஸ்டிக் வாளியில் போட்டு, மொட்டைமாடிக் கொடிக் கம்பியில் உதறி உதறிக் காயவைத்துக் 'க்ளிப்' போடுவார்.

மறுபடியும் சமையல் கட்டில் நுழைந்துத் தேய்த்து வைத்தப் பாத்திரங்களை, அதற்கென ஒதுக்கப்பட்டத் தேங்காய்ப்பூத் துவாலையால் துடைத்து, அதனதன் இடத்தில் நேர்த்தியாய்க் கவிழ்ப்பார்.

மாலை நான்கு மணிக்கெல்லாம் காய்ந்த துணிகளை நேர்த்தியாக மடித்து பீரோவுக்கு முன் வைத்துவிடுவார்.

நித்தியப்படி வேலைகள் தவிர, 'ஹவுஸ் கீப்பிங் மெயிண்டனன்ஸ் வேலைகளையும் சீராகச் செய்வார் அவர்.

'வீட்டில் எந்த மூலை முடுக்கிலும் ஒரு சிறு ஒட்டடை பார்க்க முடியாது. ஜன்னல்கள், மின்விசிறிகள், பல்புகள் என ஒரு நாளைக்கு ஒன்றாகத் துடைத்துப் பளிச் என வைத்திருப்பார்.

பார்த்துப் பார்த்து வீட்டை தூய்மையாக வைத்திருப்பதில் குருசாமிக்கு நிகர் குருசாமிதான்.

❍ ❍ ❍

துணியைக் காயவைத்தலுக்கும், எடுத்து மடித்து வைத்தலுக்கும் நடுவே குளித்தல்; வீட்டை பூட்டிக்கொண்டு அருகாமை நூலகத்தில் செய்தித்தாள் வாசித்தல், அனுமன்கோவிலுக்கும், ராகவேந்திரர் மடத்திற்கும் சென்று வழிபட்டு வருதல்; சாப்பிடுதல் ; சாப்பிட்டபின் விழும் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவித் துடைத்து அதனதன் இடத்தில் கவிழ்த்து வைத்தல்; இப்படி எல்லாவற்றையும் நேர்த்தியாக செய்து முடிப்பார்.

மாலை ஐந்து மணிக்கெல்லாம் கிளம்பினால், ஏழு மணி வரை ஏரிக்கரையைச் சுற்றி நடைப் பயிற்சி. ஏழரைக்கு வந்துக் குளித்துவிட்டு, அரை மணி நேரம் தியானம்.

மருமகள் 'ஹாட்பேக்'ல் வைத்துள்ள 'டிஃபனை' உண்டபின், சற்று நேரம் மொட்டை மாடியில் காற்றோட்டமாக உலாத்துவார். ஒன்பது மணிக்கெல்லாம் படுத்துவிடுவார்.

❍ ❍ ❍

இந்த 'சிஸ்டமெல்லாம்' சில வருடங்கள், குருசாமிக்குப் பேரன் பிறக்கும் வரை நீடித்தன. பிறகு, பேரனைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வதிலும், திரும்ப அழைத்துவருவதிலும், அவனோடு உட்கார்ந்து பாடங்களை சொல்லித்தரும் பணியும் சேர்ந்துகொண்டன குருசாமிக்கு.

பேரன் நன்கு படித்தான். தாத்தாவின் பராமரிப்பால் நற்பண்புகளும், நல்லொழுக்கங்களும் பேரனுக்கு வசமாகின. பொதுத்தேர்வுகளில் மாவட்ட அளவில் முதலிடம் வந்தான். 'எம் ஈ' படித்தான். கேம்பஸில் தேர்வாகி, தற்போது 'யு எஸ்' ல் செட்டிலாகிவிட்டான்.

❍ ❍ ❍

பேரன் 'யு எஸ்' சென்றபின், பழைய நடைமுறைத் தொடங்கித் தொடர்ந்தது.

திடீரென 'ஸ்ட்ரோக்' வந்து குருசாமியின் நடைமுறை எல்லாவற்றையும் தாறுமாறாய்ப் புரட்டிப் போட்டுவிட்டது.

'பாவம்... செல்வி...! அலுவலகத்துக்கு விடுப்புச் சொல்லிவிட்டு, குடும்பத்தைச் சமாளிக்கிறாள். இந்தக் கஷ்டமெல்லாம் என்னால்தானே?' கழிவிரக்கத்தில் கலங்கினார்;

பாத்திரம் கழுவுறது..., துணி துவைச்சு, உலர்த்தி, மீண்டும் எடுத்து வந்து மடிச்சி வைக்கறது... இஸ்திரிப் போடக் கொடுத்து வாங்கறது...!' - இப்படி நான் செய்துக்கிட்டிருந்த எல்லா வேலைகளையும் இப்போ செல்வி மட்டுமே சமாளிக்கறதுன்னா கஷ்டம்தானே..?;

இத்தனை வேலைகளையும் மாங்கு மாங்குனு முடிச்சிட்டு, அரக்கப் பரக்க ஆபீஸுக்கும் போய் உழைச்சிட்டும் வரணுமே...!';

வீட்டிலே சர்வெண்ட் மெய்டும் இல்லாம, ஒண்டியா கிடந்து திண்டாடறாளே...!, செல்விக்கும் வயசு கொஞ்சமாவா ஆகுது...?" - மருமகள் செல்விமேல் பச்சாத்தாபப்பட்டார் குருசாமி.

❍ ❍ ❍

மருந்து மாத்திரைகளின் வீரியத்தாலும், சுயப் பச்சாத்தாபத்தாலும், பசியாலும் குருசாமியின், வயிற்றில் அமிலம் சுரந்து எரிச்சலெடுத்தது.

எதிர்ச் சுவற்றில் வாடிக் காய்ந்துத் தொங்கும் நிர்மால்ய நீள் வளையத்தின் நடுவே அவர் மனையின் புகைப்படம் மங்கலாகத் தெரிந்தது. பஞ்சடைத்துப் போனக் குருசாமியின் கண்களிலிருந்து உருண்டு வழிந்த கண்ணீர் தலையணையை நனைத்தது.

❍ ❍ ❍

அலுவலகத்துக்கு ஃபோன் செய்து, தற்செயல் விடுப்புச் சொன்னாள் செல்வி. மாமனாருக்குப் புழுங்கலரிச் கஞ்சிக் காய்ச்சினாள். நன்கு வெந்ததற்கான வாசனை ஆவியோடு சேர்ந்து வந்தவுடன், கரண்டியால், ஒரு கிளறுக் கிளறிவிட்டு அடுப்பை அமர்த்தி, டப்' என மூடிவைத்துவிட்டுச் சில நிமிடங்கள் கடத்தினாள்.

இப்போது, நன்கு பக்குவமடைந்தக் கஞ்சியை இரண்டுத் தட்டுக்களில் கொட்டி, மின்விசியின் அடியில் வைத்து ஆற வைத்தாள். ஆறுவதற்குள் ஒரு டம்ளர் ஹார்லிக்ஸ் கலந்து குடித்தாள். கொஞ்சம் தெம்பு வந்தது செல்விக்கு.

ஆள்காட்டி விரலை முக்கி 'கஞ்சி ஆறிவிட்டதா...?' என்றுப் பார்த்தாள்.

❍ ❍ ❍

'இன்னும் எத்தனை நாள் இப்படிச் செய்யணுமோ? தாவு அறப்போவுது...!' – முதல் முதலாகச் செல்வியின் உள் மனசுக் கூவியது.

ரசம், மோர் கலந்த கஞ்சியை இரண்டு லோட்டாக்களில் தனித்தனியாக எடுத்துக் கொண்டு குருசாமியின் அறையைத் திறந்தாள்.

பஞ்சடைத்த கண்கள் அவளைப் பார்த்தன.

"கஞ்சி எடுத்துக்கங்க...!" – குரலில் மருமகள் என்ற உரிமையோ பாசமோ இல்லை.

குருசாமியின் கண்கள் மூடிக்கொண்டன.

"கஞ்சி குடிச்சி, மாத்திரை முழுங்கிட்டுக் கண்ணை மூடுங்க...!" - செவிலியின் அந்நியத்தன்மையோடு அதட்டலாய்ச் சொன்னாள் செல்வி.

அதைத் தொடர்ந்து, நெற்றியில் கை வைத்துத் திருப்ப, தொய்ந்து ஒடிந்து திரும்பியது தலை.

❍ ❍ ❍

"எப்பவும் 'சுறு-சுறு'னு செயலா இருந்த நீங்க, இப்படிப் நிமிஷமாப் போயிட்டீங்களே மாமா...! எப்படி எல்லாத்தையும் சமாளிச்சி உங்களைக் கரையேத்தப்போறேனோ'ங்கற என் கவலைய முகத்துலப் பாத்துட்டுத்தான் நீங்க போய்ச் சேந்துட்டீங்களோ மாமா...! கடைசீயா என் கையால ஒரு வாய் கஞ்சிக் கூட முளுங்காம போயிட்டீங்களே....!" - கதறினாள் செல்வி.

கணவனுக்குச் சேதி சொல்லச் 'செல்'லை எடுத்தாள். "க்ளிங்... க்ளிங்..." வாட்ஸப் மெசேஜ் வந்தது.

அய்யன் வாட்ஸ்ஸப் குழுமத்தில் வழக்கம்போல, அன்றைய திருக்குறளும், அதற்கான சிறு பொழிப்புரையும், வந்திருந்தது.,

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து.

ரா.சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்

# என் ஞாபக அடுக்குகளில் எல்லாம் நீ!

நிறைமாத கர்ப்பிணி ஒருத்தி என்னை
கடந்து
செல்லுகிறாள்
அனிசையாய் வந்து போகிறது
வளர்ச்சி குறைபாட்டால்
கலைக்கப்பட்ட என் முதல் கரு!

எங்கேனும் குழந்தை அழும்
சத்தம் கேட்கையில் நினைத்து
கொள்கிறேன்
என் குழந்தையின் அழுகையும்
எப்படி இருக்கும்மென!

பூங்காவில் விளையாடும் குழந்தை
ஒன்று தவறி விழுகிறது
தாங்கிபிடிக்கையில் எட்டிப்பார்கிறது
என் குழந்தையின் நினைவு!

உறவுகளின் புறம்பேசல்களை கேட்க
நேர்கையில்
கண்ணீரோடு கலந்து வருகிறது
கலைந்துபோன என் கரு!

கூடல் முடிந்து ஆடை திருத்தும்
நேரம் எல்லாம் தங்கிவிடுமா !
என்ற ஏக்கத்தோடு முடிகிறது அந்த
ஏகாந்த பொழுது!

வளர்ச்சியில்லை என்று கலைக்கப்பட்ட
கரு இன்று
வளர்ந்து விட்டது என் ஞாபக
அடுக்குகளில்!

அ.சீனிவாசன்

நுனியிலிருந்து
அடிக்கரும்பு நோக்கித்தான்
வாழ்க்கைப் பயணம்
என்றொரு சமாதானம்.

கணு கணுவாய்
தாண்டி
அடியெட்டுமுன்
கொட்டிவிடுகிறதே
பற்கள் அனைத்தும்!



# கி.கவியரசன் கவிதைகள்



அனைத்து குட்டிகளுக்கும்
ஒரே நேரத்தில்
பாலூட்டும்
தாய் பன்றிக்கு
எப்படியோ தெரிகிறது
ஒவ்வொன்றுக்குமான
பசியின் அளவு!!!

❍

யாருமற்ற வகுப்பறையில்
கிறுக்கல்களையும்
ஓவியங்களையும்
வெட்டு காயங்களையும்
காம்பஸ் தழும்புகளையும்
சுமந்து கொண்டிருந்த மேஜையின்
அருகில் அமர்ந்து
காலங்களை பின்னோக்கி
இழுக்க முயன்றேன்
முற்றிலும் துடைக்கப் பட்டு
வெறுமையை வீசிக் கொண்டிருந்தது
கரும்பலகை அதில்
நேற்று நடத்திய பாடங்கள் எல்லாம்
சாக்பீஸ் துகள்களாக
வகுப்பறை எங்கும் படிந்திருந்தது
நான் வகுப்பறை முழுவதும்
படிந்து கிடந்த
நினைவுகளை எடுத்து
கரும்பலகையில் எழுதத் தொடங்கினேன்!!!

❍

தரையோடு ஒட்டிக் கொண்ட நான்
ஆசை ஆசையாய்
சோப்புக் குமிழிகளை ஊதி விட்டு
அதனோடு சேர்ந்து
பறக்க முயல்கிறேன்
தன் சிறகுகளால் அவைகளை
உடைத்து உடைத்து
நான் பிடிக்க இயலாத உயரத்திற்கு
இன்னும் இன்னும்
மேலெழும்புகிறார்கள்
எப்போதும்
பறந்து கொண்டேயிருக்கும்
இந்த குழந்தைகள்!!!



# குளியலறை விபத்துகள்

**சுந்தரிமணியன், புதூர்**

"ஐயோ ஆபத்து. நம்மிடத்தில் அந்நியர்கள் வந்ததுபோல் தெரிகிறது" என்றலறினாள் சிவப்பி. அதைக் கேட்டவுடன் வீட்டிலிருந்த அவள் குழந்தைகளும்,

"ஆ! காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்"

என்று அலறினர். சிவப்பி தனது குழந்தைகளின் அழுகுரல் கேட்டவுடன் இன்னமும் கலங்கி, அந்நியரைத் தாக்கும் நோக்கத்துடன் பலமாகத் தாக்குவதற்கு ஆயத்தமாகி, விர் விர்றென தனது கைகளை விரித்துக் கொண்டு சென்று தாக்குவதாக நினைத்துச் சுவற்றில் மோதி ஒரு வழியாக நிலைதடுமாறி எழுந்தாள். தாய் தடுமாறியதைக் கண்டதும் வீட்டிலிருந்த குழந்தைகள்

எல்லாம் அமளிதுமளிப் பட்டனர். மீண்டும் தாக்க முயன்ற சிவப்பியைப் பலமான போர்வை ஒன்று தாக்க, அடிபட்டு விடுமோ என்ற பயத்தில் அஞ்சிய அவள் ஜன்னல் வழியே வெளியேறிப் போனாள். குழந்தைகள் எல்லாம் பயத்தில் "அம்மா" என்று அலறினர். கன்னங்களில் கண்ணீர்த்துளிகள் பெருக்கெடுக்க சிவப்பிக்குக் குழந்தைகளின் அழுகுரல் அவள் காதுகளில் ரீங்காரமிட்டது.

சூரியனின் வெளிச்சம் மஞ்சளாகத் தங்கம்போல் தகித்துக்கொண்டிருந்தது. பரிமளா சமையலறையில் மும்முரமாகச் சமைத்துக்கொண்டிருந்தாள். திடீரெனக் குளியலறையின் உள்ளிருந்து "அம்மா" என்று வந்த அலறலில் திடுக்கிட்டுப் போனாள் பரிமளா.

"ஏண்டி இப்படிக் கத்துற. பயந்து போனேன். என்னாச்சு"

"அம்மா பாத்ரூம்ல குளவி ஒன்னு என்னையே சுத்தி சுத்தி வருதும்மா. ரொம்ப பயம்மாயிருக்கு" என்றாள் வான்மதி.

"நீ ரொம்ப அழகாயிருக்கன்னு உன்னையே சுத்துதோ என்னமோ"

"ஜோக்கடிக்கிற நேரமாயிது. கொன்றுவேன் உன்னைய. அத வெரட்டுறதுக்கு வழி சொல்லு" என்றாள் வான்மதி.

"சும்மா துணிய வச்சு வெரட்டு போயிரும்" என்ற பரிமளாவின் பதிலுக்குச் "சரி" என்று சொல்லி சற்று நேரம் கழித்துக் குளியலறைக் கதவைத் திறந்து கொண்டு வந்த வான்மதிக்கு இருபத்தொன்பது வயதுதான் ஆகிறது. திருமணமாகி நான்கு ஆண்டுகள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை. கரப்பான்பூச்சியைக் கண்டாலே பயப்படும் வான்மதிக்குக் குளவியைப் பார்த்ததும் குலைநடுங்கிப் போயிற்று.

"அம்மா இந்தக் குளவி பாத்ரூம்ல மேல கூடு கட்டியிருக்கு போல. அதான் வாயில எதையோ எடுத்துட்டு வருது"

"எனக்கு ரெண்டு நாளைக்கு முன்னாடியே தெரியும்டீ. சொல்ல மறந்துட்டேன்"

"நான் பயப்படுவேன்னு தெரிஞ்சும் சொல்லாம இருந்திருக்க. முதல்ல அந்தக் கூட்ட கலைச்சு வெளிய தூக்கிப் போடனும். இல்லாட்டி நிம்மதியா குளிக்க முடியாது. இந்தக் குளவி வந்து தொல்லை பண்ணும். கொட்டிருமோன்னு பயம்மாயிருக்கு" என்றாள் மதி.

"குளவிக்கூட்ட கலைக்கக்கூடாதுன்னு சொல்லுவாங்க பெரியவங்க. குளவி கூடு கட்டுனா குழந்தை பிறக்கும்னு சொல்லுவாங்கடீ. எவ்வளவு அழகா ரெண்டு நாள்ல கூடு கட்டியிருக்கு. இப்ப உள்ள கொத்தனாரு கட்டுற வீடுகள் எப்ப இடியுமோன்னு பயமாயிருக்கு" என்ற பரிமளாவுக்கு,

"அம்மா என்னைய டென்சனாக்காத. அந்தக் காலத்து ஆளுங்க மாதிரி பேசுறம்மா. நான் அந்த செங்குளவி பெரிசா இருக்கு, கொட்டிருமோன்னு பயந்தா. நீ என்னடான்னா வீட்டப்பத்தி பேசிட்டுருக்க. விளக்குமாற்றை எடுத்துக் கூட்டைக்கலைச்சு எடுத்தாதான் நிம்மதி எனக்கு"

என்றவளை அவசரமாகத் தடுத்த பரிமளா,

"இருடீ அவசரப்படாதே. நாலு வருசமா குழந்தையில்லாம இருக்க. எனக்கென்னமோ இந்த வருசம் குழந்தை உண்டாயிருவன்னு தோணுது"

"இப்படி சொல்லி சொல்லியே நாலு வருசம் போச்சு. என் மாமியார் என்னவோ யார் மேல குறையிருக்குன்னு தெரியாமலே என்னை வர்றவங்க போறவங்க எல்லார்கிட்டயும் திட்டிட்டு இருக்காங்க. மகனுக்கு வேற கல்யாணம் பண்ணப்போறதா வேற மிரட்டுறாங்க. என் வீட்டுக்காரர் மாறமா இருந்தா சரிதான்"

என்று வேதனைப் பெருமூச்சு விட்டாள். வான்மதிக்கு எதைப் பற்றியும் கவலையில்லை, தனக்கென்று குழந்தைபாக்கியம் இல்லாமல் போய்விடுமோ என்ற ஒரு குறையைத் தவிர, நன்றாகப் படித்து, கைநிறையச் சம்பாதிக்கிறாள். வீட்டுக்காரன் அவ்வப்போது அம்மாவின் பேச்சைக் கேட்டு படுத்துவான். அவ்வப்போது அவனுக்குப் பதிலடி கொடுப்பாள்.

"ஆஸ்பிடல் வாங்க யாருக்குக் குறையிருக்குன்னு செக் பண்ணிப் பார்ப்போம். எப்பவும் அம்மாவும் மகனும் என்னைத்தானே குறை சொல்றீங்க" என்றவுடன் கப்சிப்பென்று வாயை மூடிவிடுவான். மருத்துவமனைக்குச் சென்று பார்ப்போம் என்றால் மனபயத்திலேயே வரமாட்டான். எங்கே தனக்குக் குறையிருக்கிறதென்று டாக்டர் சொல்லிவிட்டாள் வெறுத்துவிடுவாளோ என்று உள்ளுக்குள் குமைந்தான்.

வான்மதி தனது கணவன் தன்னை விரட்டினாலும் தான் சம்பாதிக்கிறோம் இவர்கள் துணையில்லாது வாழமுடியும் என்ற தன்னம்பிக்கையை மனதில் சுமந்திருந்தாள். ரொம்ப போர் அடிக்கிறதென்று விடுமுறை நாளில் அம்மா வீட்டிற்கு வந்திருந்தாள். ஆனால் வந்ததிலிருந்து உடம்பு என்னமோ செய்தது. மாலை சாப்பிட்டது ஒத்துக்கொள்ளாமல் ஒரே வாந்தியெடுத்தாள். மறுநாள் காலை ஒரே தலைசுற்றலாக இருந்தது. தனது கணவன் முகிலனுக்குப் போன் பண்ணிச் சொன்னபோது,

"அம்மா வீட்ல ரெண்டு நாள் இருக்கணும்கிறதுக்காகப்

பொய் சொல்லாத" என்றான். இவனை என்ன சொல்லித்தான் புரியவைப்பது. உண்மையில் உடம்பில் புதிதாக நோய் எதுவும் வந்திருக்குமோ, கடவுளே ஏற்கனவே எனக்கு இருக்கிற பிரச்சினைகள் போதாதா? என மனதிற்குள் மறுகினாள் வான்மதி.

"அம்மா எனக்கு உடம்பு ரெண்டு நாளாவே என்னவோ பண்ணுது. பயமாயிருக்கு" என்றாள் வான்மதி.

"நாள் எதுவும் தள்ளிப்போயிருச்சாடீ" என்றாள் பரிமளா.

அம்மா சொன்னபிறகுதான் யோசித்தாள் வான்மதி. ஆமாம் குளித்து நாற்பது நாட்களுக்கு மேலாகிவிட்டது. ஒரு வேளை அம்மா சொன்னது போல என் வயித்தில் குழந்தை உண்டாயிருக்குமோ? நினைக்கவே ஆனந்தமாயிருக்கே,

"ஆமாம்மா. குளிச்சு நாற்பது நாளைக்கு மேலாயிருச்சு" என்றாள் மகிழ்ச்சியோடு,

"அப்ப கிளம்பு. இன்னிக்கு மாலையே போய் டாக்டர பார்த்துட்டு வரலாம்" என்றாள்.

"அவர்ட்ட சொல்ல வேணாமா?" என்றாள்.

"வேணாம். கன்பர்ம் பண்ணிட்டு சொல்லலாம். உன் வீட்டாளுங்க குழந்தை இல்லன்னா எகத்தாளம் பேசுவாங்க" என்றாள். அதுவும் சரிதான். போனதடவை நாள் தள்ளிப்போன போது குழந்தையில்லை என்றதும் மாமியார் ஜாடைமாடையாய்ப் பேசினாள். மாலையில் தாயோடு கடவுளை மனதார வேண்டிக்கொண்டு மருத்துவமனை சென்றாள். டாக்டர் செக்கப் செய்து ரிசல்ட் சொல்லும் வரை நிம்மதியின்றித் தவித்தாள். டாக்டர் குழந்தைதான் என உறுதிசெய்தபோது வான்மதிக்குக் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து, கன்னங்களில் வழிந்தோடியது. முகிலனுக்குப் போன் பண்ணிச் சொன்னபோது,

"உண்மையாவா சொல்ற. உண்மையாவா சொல்ற" என சந்தோசத்தில் துள்ளிக் குதித்தான். அன்று இரவே அம்மாளுடன் இனிப்போடு வீட்டிற்கு வந்து பார்த்தான். மாமியாரும் பழைய சுணக்கம் மறைந்து மருமகளை,

"உடம்ப பார்த்துக்கோ. ஒரு வாரம் இங்கேயே ரெஸ்ட் எடு. வீட்டுக்கு வரவேணாம். வேலைக்கும் லீவு போடு. ஒழுங்கா சாப்பிடு" என்று சொன்னபோது வான்மதிக்கு மகிழ்ச்சியில் தன் கண்களைத் தன்னாலேயே நம்பமுடியவில்லை. உண்மையில் அம்மா சொன்னது உண்மைதான் போல. குளவி கூடுகட்டினால் குழந்தை பிறக்கும் என்றாளே, அதை மூடநம்பிக்கை என்று நினைத்தேனே என ஆச்சரியப்பட்டாள். நம் முன்னோரின் நம்பிக்கைகள் உண்மைதான் போல என நினைத்துக்கொண்டாள்.

**கண்ணன் விஸ்வகாந்தி**

# தேவகணம்


சாலையில் நடக்கையில்
உற்சவரைப் பார்த்தவுடன்
காலணிகளைக் கழட்டிவிட்டுச்
சட்டென கன்னத்தில் போடுவதுபோல
காலையில் தரிசித்த
வளர்ந்தவர்களின் களங்கங்கள் தொடாத
குழந்தையொன்றின்
கையாட்டலே
கற்பூர ஆரத்தி
பனித்துளியின் தூய்மையுடன்
பறக்கும் முத்தமே
படியேறி நான் பற்றிய
பரமனின் காலடி ஸ்பரிசம்

○

ஸ்மார்ட் வாட்ச்
ஸ்மார்ட் போன்
ஸ்மார்ட் ஏசி
ஸ்மார்ட் பேன்
ஸ்மார்ட் டிவி
பன்னிரண்டாம் வாய்ப்பாடு தெரியுமா?
பன்னிரண்டுன்னா?
பெரியப்பா போன் நம்பர் சொல்லு
போனப்பார்த்தா தெரியும்
எந்திரங்களுக்கு தாரை வார்த்து விட்டு
மனுஷப்பயல்
மக்குப்பயலாகிவிட்டான்

முல்லைக் கமல்

# பூமரத்தை வருத்தாதீர்கள்



அப்பா - தனது
பூப்போன்ற ஒரு புன்னகையை
உதிர்ந்துவிட்டு - இப்படிச்
சொன்னபோது - மௌனம்
அந்த இடத்தில்
கடலின் அடியாழத்தில் போய்
உறைந்து இருந்ததை - இப்போதுதான்
அச்சொற்களோடு சேர்த்து
மீட்டுக்கொண்டு வந்தேன்..
அவர் ஓர் ஞானி.
எந்தத் துயரத்திலும் - அவரால் எப்படி
மௌனமாக இருந்து
புன்னகைக்க முடிந்தது!
கட்டிலில் படுத்துக்கொண்டோ
அல்லது
நெஞ்சக்கூட்டின்
மயிர்க் காட்டின்மேலே - கைகளை
வைத்துக்கொண்டோ - அவர்
அவற்றை உதிர்க்கவில்லை!
அவரொரு சாமானியர்.
நிலத்தில்,மரத்தடியில்- அல்லது
வீட்டு முற்றத்தில் வைத்து - எதையோ
பற்றிக்கொண்டு - அவற்றை
அவர்கள் உதிர்த்தார்கள்..
சட்டென்று - அவரது
வார்த்தைகளை
கடன் வாங்கி - உங்களிடம்
உதிர்க்கவும் வேண்டி வருமென்று - நான்
எள்ளுப்போலளவும் நினைக்கவில்லை!
உங்களிடம் - அவற்றைச்
சொன்னபோது - நீங்கள்
நமட்டுச் சிரிப்பும்,
புன்னகையும்,ஏளனமுமாக
கடப்பது குறித்து - எனக்கொன்றும்
வேடிக்கையில்லை!
நீங்கள் மனிதர்கள்..
பூமரத்தை வருத்தாதீர்கள்..- என்று
மட்டுந்தான் - உங்களுக்கு
சொல்லக் கிடைத்தது!
இப்படிச் சொல்லவும் - ஏன்
இந்த இரவு
தனது முகத்தை - கைகாளால்
மூடிக்கொண்டுள்ளதோ தெரியவில்லை!..

நன்றி:முகநூல்



விவேக்

# எங்களின் நாட்கள்

அஸ்தமனத்தை அறிவிக்கும் எங்கள்
அதிகாலைகள்
பூபாளத்திற்கு பதிலாக முகாரியையே
முன்வைக்கும்
பூமியில் கேட்கும் முழக்கங்களால்
மேகங்கள் மோதிக்கொள்வதை நிறுத்தி
வாய்பொத்தி நிற்கும்
துரத்திக்கொண்டுவரும் துப்பாக்கி
ரவைகளால்
தென்றல் காற்று கிழிபடும்.
'ஷெல்'லக்குழந்தைகள் மனித
பொம்மைகளின்
அங்கங்களை கழற்றி விளையாடும்
பொட்டிழந்த எங்கள் பெண்ணிலவுகளை
சோக மேகங்கள் ஆக்கிரமித்துக்கொள்ள
அமாவாசை அவர்களிடம் நிரந்தரமாகும்.
குருதியலைகள் மோதிப் பாய்ந்து
கீழ்வானை சிகப்பாக்கும்

'தடயங்கள்' கவிதைத் தொகுப்பிலிருந்து

மாரிமுத்து சிவகுமார்

# மலைகளையும் நதிகளையும் தாண்டும் ஆயுதம்.

நீண்டகாலமாய் நிழல் தருவதில் நூறு வீத
வெற்றியோடு மரமொன்று நிமிர்ந்திருக்கிறது.
மரத்தில் மலர்களும்
அரும்புகளும் கனிகளும் நிறையத்தொடங்கியது.
மரத்தின் வேர்களுக்கான உர மாணியங்கள்
அதற்கான போசனைகள் வழங்குவதில் அதிகாரம்
மிகுந்தவர்கள்
ஊழல்களையும் அடாவடிகளையும்
அடக்குமுறைகளையும் அவிழ்த்துவிட தொடங்கினர்.
தமக்கான நியாயங்களை பதாதைகளில் ஏந்திய
வண்ணம் மலைகளையும் நதிகளையும் தாண்டி
தலைமையின் வாசல் தேடியலைந்தது மரம்.
எங்கு தேடியும்
நுழைவதற்கான வாசல்கள் ஏதும்
திறந்திருக்கவில்லை.
பெரும் விரக்தியோடு மீண்டும் வேர்களின் மேல்
வந்தமர்ந்தது மரம்.
தன்னால் உருவான
அரும்புகளையும்
மலர்களையும்
கனிகளையும்
தடவியபடி
கூரிய ஆயுதமாக்கியது.
அங்கே
மலைகளையும் நதிகளையும் ஆயுதம் கடந்து
சென்றது.

நன்றி:அநாமிகா ரிஷி

புதுகை ஆதீரா

# சக்கரம்

சுழலும் சக்கரத்தில்
குழைந்த களிமண்ணால்
லாவகமாய் உருவேற்றம்
ஆற்றின் பேரிரைச்சல்
அவர்கள் செவிகளுக்கு
மட்டும் சன்னமாய்!

நீருக்கான தேடலில்
தேய்ந்து போன பாதங்கள்
நினைவுகளின் சுமையில்
பாத்திரங்கள் காத்திரமாய்
ஒன்றின் மேல்
ஒன்றாக உயர்ந்து கொண்டேயிருந்தது

கிராமத்தின் செழுமையை
கதைத்தபடி சுழலும்
சக்கரத்தின் சங்கீதம் இன்று
சற்று கூடுதல் சோகமாக!

கைகளில்
வித்தைகள் செய்து
மலையெனக் குவித்து
அடுக்கிய பானைகளில்
கூடவே சேர்த்து நிரப்பினர்
சோகமும் வறுமையும்!!

லதா கந்தையா (இலங்கை)

# உயிர்ப்பும்...பாவமும்

உயிர்த்தெழுந்த இயேசுவை
தேடிக்கொண்டிருந்தார்கள்.
அவரை காணவேயில்லை.

எல்லோரும் பாவச்சுமைகளை
கடவுளின் மேல் போட்டுவிட்டு
இளைப்பாறிக்கொண்டிருந்தனர்.

ஆணி துளைக்கப்பட்ட அங்கங்ளையும்
இரத்தவெடிலடித்த மேனியையும் இயேசு
கழுவிக்கொண்டார்.

பிறர் பாவங்களை தன்னுள் சுமப்பதாக
கூறிய வார்த்தைகளுக்காக நொந்துகொண்டார்.


சிலுவையை இறக்கியபின்புதான்
ஞானம் அவருக்கும் பெருக்கெடுத்ததோ?

பாடுகள் பட்டு உயிர்த்தபின்பும்
பாவத்தை தன்மீதே கொட்ட நினைத்த
மானிட உலகம் அவருக்குப்பிடிக்கவில்லை.

மானிடரோ....
இன்றும் தங்கள் சுமைகளையும் பாவங்களையும்
கொட்டிக்கொள்வதற்காக
உயிர்த்தெழுந்த இயேசுவையே
தேடிக்கொண்டிக்கிறார்கள்.



# ஜி.சிவகுமார் கவிதைகள்



### 5ஜி நாட்களிலும் பட்டன் போன் உபயோகிப்பவர்கள்

நாம் கையாளத் தடுமாறும்,
உள்ளங்கையில் அமர்ந்திருக்கும்
சின்னஞ் சிறு பறவையான
பட்டன் போனை வைத்திருப்பவர்கள்,
தொடு திரையையல்ல
காண் திரை மட்டுமறிந்தவர்கள்
தொலைக்காட்சிகளிலும்,நாளிதழ்களிலும்
செய்திகளை அறிந்து கொள்கிறவர்கள்
பேஸ்புக்,வாட்ஸ்அப்,X தளம்,யூடியூப்,இன்ஸ்ட்டா
எதையும் அறிந்தவர்கள் இல்லை
அவர்கள் அறிந்த வைரல்,
காய்ச்சல் மட்டுந்தான்.
உணவகங்களில்,உறவினர் வீடுகளில்
பட்டைப் பின் சார்ஜர் கேட்பவர்களில்லை.
மின் வங்கியையும் சுமந்து திரிபவர்களில்லை
நம்மை விட
நேரமுள்ளவர்களாக,
உடல்,மன ஆரோக்கியமானவர்களாக,
நீண்ட நேரம் உறங்குபவர்களாக
ஆடையற்ற உடல்களின்
திடீர்த் தாக்குதல்களுக்கு ஆளாகாதவர்களாக
வங்கிப் பணத்தை
பேராசையில்,மோசடிகளில் இழக்காதவர்களாக
ஒரு செல்பிக்காக உயிரை இழக்காதவர்களாக
ஆரோக்கியமான பேட்டரிகளை
வைத்திருப்பவர்களாக,
குரல் வழித் தொடர்பை மட்டுமே
அறிந்த அவர்கள்
நம் நினைவுகளிலிருந்து
அழிந்து விட்ட பால்ய நண்பனைப் போன்ற
பட்டன் போனை
இன்னமும் வைத்திருக்கிறார்கள்.

❍

### ஒரு மீனின் பயணக் குறிப்பு

நாய்ப் பற்களிடையே அசைகிறது
தாழப் பறந்து
அசையும் அலைகளிலிருந்து
செம்பருந்து
கூர் விரல்களில் கவ்வி
வானிலிருந்து நழுவ விட்ட
கண்மாய் கெண்டை.



# நாலு குஞ்சு பூச்சாண்டி

**ஆர்னிகா நாசர்**

**எ**ங்கள் பேரனின் பெயர் முகமது அர்ஹான். அவனிடம் உன் பெயர் என்ன என்று கேட்டால் ‘அச்சேஷ்’ என கூறுவான்.அவனது பெற்றோர் அவனை செல்லமாக ‘அர்க்குட்டி’ என்று அழைப்பர்.

அர்ஹானுக்கு வயது இரண்டரை. முழுவதும் பேச்சு வரவில்லை. மழலையாய் சில வார்த்தைகள் மட்டும் மிழற்றுவான்.

மகனும் மருமகளும் மருத்துவர்கள். அவர்கள் கிளினிக் சென்று விட்டால் அர்ஹான் முழுக்கமுழுக்க எங்கள் கஸ்டடியில்தான் இருப்பான்.

போட்டிருக்கும் டவுசரை ஈரபடுத்தி விட்டால் வெறும் சட்டையுடன் தான் திரிவான். அவனுக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன் பிளாஸ்டிக் பெல் முறையில் சுன்னத் கல்யாணம் செய்யப்பட்டது.

எப்போதுமே என் கவனம் அவனது கவட்டையில்தான் பதிந்திருக்கும்

“குட்டிம்மா!”

“என்னப்பா?”

“டாக்டர் அர்ஹானுக்கு சுன்னத் செய்யும்போது குஞ்சை தேவைக்கு அதிகமாய் கட் பண்ணி விட்டாரோ?”

மனைவி முறைத்தாள். “நீங்க ஏன் அவன் புல்லாவையே பார்த்துக்கிட்டு இருக்கீங்க? போனதடவையே இது பற்றி லேடி டாக்டரிடம் கேட்டேன். பல்க்கி பாய் கொழுப்பு ‘அதை’ மறைச்சிருக்கு எல்லாம் நார்மலாத் தான் இருக்கு. பேரன் யூரின் பாஸ் பண்ணும் போது பாருங்க. முழு சைஸ்க்கு விரைப்பாய் தெரியும்னு சொல்லிருக்கார். கந்தன் புத்தி கவட்டுக்குள்ளன்னு சொல்லுவாங்க. உங்களுக்கு பேரன் புல்லாவை அளந்து பாக்றது தான் வேலையா?”

“அது சரியா இல்லைன்னா டானிக் குடிச்சு அத வளத்திடலாமேன்னு அய்டியா...”

“எட்டிப் போங்க... டெட்டால் போட்டு வாயைக் கழுவுங்க!”

தரைத்தளத்தில் மகனும் மருமகளும் இருப்பர் பேரனுடன். நானும் என் மனைவியும் முதல் தளத்தில். முதல் தளத்தில் இரு அறைகள். ஒன்று எங்கள் படுக்கையறை. இன்னொன்று நான் கதை எழுதும் அறை.

சரியாக நான் கதை எழுதும்போது எங்கள் பேரனுக்கு எப்படி மூக்கு வியர்க்குமோ? மாடிப்படியில் ஆம்ஸ்டாங் நடை நடந்து என் அறைக்கு வந்து விடுவான்.

நான் கதை எழுதும் கணக்குப்பிள்ளை பேடில் ஏறி அமர்வான்.

ரைட்டிங் பேடை எடுத்து ஒளித்து வைத்து விடுவேன்.

அதற்குள் என் மைக்ரோ டிப் பேனாக்களையும் மார்க்கர் பேனாக்களையும் கைநிறைய எடுத்துக் கொள்வான்.

ஒரு மாதிரி ராகம் பாடியபடி சுவற்றில் கிறுக்க ஆரம்பித்து விடுவான்.

“வகிதா! பிள்ளையை வந்து தூக்கு” கத்துவேன்.

வகிதாவின் கைகளில் சிக்காமல் வழுக்குவான். நான் படுக்கையறையில் அமர்ந்து போனை நோண்டிக் கொண்டிருக்கும் போது வந்துவிடுவான்.

டிவி ரிமோட்டை போட்டு உடைப்பான்.

ப்ளக்பாயின்ட்களில் கையை விடுவான்.

என் மருந்து டப்பாவை எடுத்து கவிழ்ப்பான். நான் குளிக்கும் போது பாத்ரூமுக்குள் புகுந்து குழாயை திறந்து விடுவான். பிளாஸ்டிக் மக் எடுத்து தண்ணீரை கோரி கோரி ஊற்றுவான்.

பால்கனிக்கு ஓடி மெயின் கரன்ட் லைனை எட்டி தொட பார்ப்பான்.

என்ன கத்தினாலும் பயப்படமாட்டான்.

“ஏன் கழுதைமாதிரி கத்றீங்க. நீங்க செய்றதெல்லாம் இமிடேட் செய்றான் உங்களை மாதிரி அவனும் பெரிய எழுத்தாளரா வருவானோ என்னவோ?”

“நான் கதை எழுதுறது அவனுக்கு பிடிக்கலையோ என்னமோ?”

“ப்ளேஸ்கூல்ல அவன் கலரிங் பண்றதை எல்லாம் பாத்தா இப்டி பேச மாட்டீங்க?”

“ஓஹோ!”

“நான் ஒரு அய்டியா சொல்றேன். நீங்க கதை எழுத போறதுக்கு முன்னாடி கதவை உட்புறமாக பூட்டிக்கங்க!”

“பூட்டினா அறை காற்றோட்டம் போய்டாது?”

“நைட்ல மாடில எந்த ரூம்ல இருந்தாலும் லைட்டை ஆப் பண்ணிட்டு இருட்ல இருங்க.... இருட்டுக்கு பயந்துக்கிட்டு வர மாட்டான்!”

“அன்னைக்கு முழு இருட்ல பதுங்கி பதுங்கி வந்து என்னை கட்டிப் பிடிச்சான்!”

யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன்.

கண்களை அகட்டி நாக்கை துருத்தி இரு கைவிரல்களையும் முகத்துக்கு இணையாக விரித்து பயமுறுத்தும் குரலில், “அர்ஹான்! மாடிக்கு போகாதே. மாடில நாலு குஞ்சு பூச்சாண்டி இருக்கான். நறுக்குன்னு கடிச்சிருவான்!”

வகிதா நெற்றி சுருக்கினாள்.

“என்னது நாலு குஞ்சு பூச்சாண்டியா?”

“ஆமா.. அந்த பூச்சாண்டிக்கு நாலு குஞ்சு. ஒரு குஞ்சு ப்ளூ கலர்ல இருக்கும். ஒரு குஞ்சு சிவப்பு நிறத்தில் இருக்கும். ஒரு குஞ்சு பச்சைநிறத்தில் இருக்கும். ஒரு குஞ்சு மஞ்சள் நிறத்தில் இருக்கும்!”

“அடப்பாவி மனுஷா... பேரன்கிட்ட இப்படி அசிங்கமா பேசலாமா?” மருமகள் காதுல விழுந்துச்சு உங்களை ஒரு பைசாவுக்கும் மதிக்கமாட்டா!”

“குஞ்சுன்னா உனக்கு கேவலமா போச்சுதா? ஆண் குறியைதான் லிங்கமாக வழிபடுகிறார்கள். ஆண்குறியும் யோனியும் இல்லாவிட்டால் மனித தலைமுறையின் தொடர்ச்சி ஏது?”

“ஒரு நாளைய 24 மணி நேரமும் உங்களுக்கு

குஞ்சை பத்திதான் நினைப்பா? உங்களுக்கு கொஞ்சம் சபை நாகரிகம் தேவை?"

"குஞ்சு என்கிற வார்த்தைக்கு பதில் 'புல்லா' எனவா அல்லது 'டிங்டாங் பெல்' எனவா, அல்லது 'டுபுக்கு' எனவா அல்லது 'பென்ச குச்சி' எனவா?"

"அபிஷ்டு. வார்த்தைகளில் எவ்வளவு வக்கிரம்?"

"உலகத்ல எல்லாருக்கும் இருக்றதைதானே சொல்றேன்!"

"டிண்குவை பம்சிக்பம் என்கிறீர்கள். பாம் பாம் என்கிறீர்கள். முலாம்பழம் என்கிறீர்கள். மாசத்ல ஒரு நா திண்டுக்கல்ல நீங்க கேலி பண்ணின டிண்டு ஆட்டி அனிபா பத்தி சொல்லி சிரிக்காம இருக்க மாட்டீங்க!"

"டிண்டு இறைவன் படைப்பில் அற்புதமான விஷயம்!"

"எல்லாம் சரி அர்ஹானை பயமுறுத்றப்ப வெறும் பூச்சாண்டி வரான்னு சொல்லி பயமுறுத்துங்க!"

"வெறும் பூச்சாண்டிக்கு உன் பேரன் பயப்பட மாட்டான். இன்றைய தொழில்நுட்பக் குழந்தைகளுக்கு எந்த உணர்வை சொல்ல வந்தாலும் இரண்டு மூன்று பெயரைகளை சேர்க்க வேண்டி இருக்கிறது!"

"நீங்க ஏடாகூடமா வார்த்தைகளை உபயோகிச்சா அது பிரபலம் ஆய்டுது. சிதம்பரம் யுனிவர்சிடி குடியிருப்புல நாம வசிக்கும் போது ஆட்களுக்கு பட்டப் பெயர் வச்சீங்க. ஒருத்தருக்கு 'ஆனந்த விகடன் அட்டை படம்'. ஒருத்தருக்கு 'ப்ராபாய்'. ஒருத்தனுக்கு 'குயிலான்'. ஒருத்தருக்கு 'ஹலவ்'. கொஞ்சநாள்ல அவங்க சொந்தபெயர் மறந்து போய் பட்டப்பெயர் நிலைச்சு போச்சு..."

"அதுக்கு என்ன பண்றது?"

"நாலு குஞ்சு பூச்சாண்டின்றதுக்கு பதிலா நாலு கொம்பு பூச்சாண்டின்னு பயமுறுத்துங்க..."

"அட யாருடி இவ... குஞ்சு என்கிற வார்த்தை மேல எனக்கு தனி கிறுக்கம் உண்டு. உன் அண்ணன் மகனுக்கு 'குஞ்சு பாண்டி'ன்னு பேர் வச்சேன். மிஸ்டர் குஞ்சாக்கோ. குஞ்சூஸ், குஞ்சுமோன், குஞ்சுகுட்டி இப்படி நிறைய வார்த்தைகள் குஞ்சை இணைத்து சொல்லலாம். குஞ்சு புல் மேயப் போன6 கதையை சின்னக் குழந்தைகளுக்கு சொல்லி சிரிக்க வச்சிருக்கேன்'

"இன்னும் ஆறுமாசத்ல உங்க பேரனுக்கு முழுசும் பேச்சு வந்திடும். 'ஏய்யா கிழவா... நாலு குஞ்சு பூச்சாண்டின்னு ஆபாசமா பயமுறுத்ற... உனக்கு கொஞ்சமும் லஜ்ஜை இல்லையா'ன்னு கேட்பான்"

மகனும் மருமகளும் கிளினிக்கிலிருந்து திரும்பினர்.

மகன், "என்னம்மா உங்க ரெண்டு பேருக்குள்ள வாக்குவாதம்?"

"உன் பய்யனை நாலு குஞ்சு பூச்சாண்டி வரான்னு பயமுறுத்ரார்டா உங்கத்தா..."

அவன் திரும்பி என்னை முறைந்தான். "இந்த எழுத்தாளர்களுக்கெல்லாம் தினம் நூறு கெட்ட வார்த்தை வாய் நிறைய சொன்னாதான் அல்லது கதைகள்ல எழுதினாதான் தூக்கம் வரும் சாப்பாடு இறங்கும் விடும்மா. அவரை அவர் போக்குல..."

'அப்பாடா.. வாக்குவாதம் நமக்கு சாதகமாக முடிந்தது'. ஆசுவாசித்தேன்.

மாடிப்படி ஏறும் அர்ஹானை மிரட்ட கத்தினேன். "அச்சேஷ்! மாடில நாலுகுஞ்சு பூச்சாண்டி இருக்கான். மீறி போனன்னா அந்த பூச்சாண்டி உன் குஞ்சை பிடிச்சு கடிச்சு வச்சிடுவான்.. உஸ்.. செம வலிவலிக்கும்!"

அர்ஹான் பயந்தான். பம்மினான். மாடிப்படிகள் ஏறுவதை நிறுத்திவிட்டு இறங்க ஆரம்பித்தான். கடைசி படியில் இறங்கி என்னை வந்து கட்டிக் கொண்டேன்.

"நா.. நா... கு.. கு.. பூ... பூச்சு..."

"பேசாம கீழ உக்கார்ந்து டியான் டியான் பாரு!"

இணங்கினான் சிறுவன். வெற்றி சிரிப்பை வெடித்தேன்.

-ஒரு வாரம் கழித்து...

வெளியில் போயிருந்த நான் ஸ்கூட்டி பெப்பை ஸ்டாண்டிட்டு நிறுத்தி விட்டு வீட்டு உள்வாசலில் பிரவேசித்தேன்.


"அர்க்! ஒழுங்கா வந்து பாலைக்குடி... இல்ல நாலு குஞ்சு பூச்சாண்டி வந்து உன் குஞ்சை கடிச்சிருவான்!"

என்னை பார்த்ததும் நாக்கை கடித்து கொண்டாள் வகிதா.

இரண்டு வாரங்கள் கழித்து-

எதிர்வீட்டு பெண் தன் மகனை மிரட்டிக் கொண்டிருந்தாள். " ஒழுங்கா மாத்திரை சாப்பிடல... நாலுகுஞ்சு பூச்சாண்டி உன் குஞ்சை வந்து கடிச்சிருவான்!"

அட இந்த நாலுகுஞ்சு பூச்சாண்டிக்கு நாம காப்பிரைட் வாங்கணும் போல!



# மணியோசை

ச. சத்தியபானு

வீடேங்கும் சாரை சாரையாய் எறும்புகள் போரெடுத்து நின்றாலும் வீட்டில் சிறிதளவு சக்கரைக்கூட இல்லை அப்புறம் எப்படி இவ்வளவு எறும்பு வந்துச்சு ஒன்று புரியாது போல தலையைச் சொரிந்தால் சுமதி...!

இது எங்கிருந்து வருதுன்னு பார்ப்போம். என்று மெது மெதுவாக நடந்து எறும்பின் வரிசைகளின் பின்னால் சென்று பார்த்தால் பக்க வீட்டிலிருந்து போட்ட குப்பை ஒன்றில் மீதமிருந்த வெள்ளத்தின் துகள் கட்டிகள் சில சிந்தி கிடந்தது....! ஓகோ இதிலிருந்து தான் வருதா அந்த எறும்புகள் என்று அந்த குப்பைகளை முறைக்கும் பார்த்து நின்றுக் கொண்டிருந்தாள்....! தெரு முனையில் சுமதி சுமதி என்ற ஒரு சத்தம் கேட்டதும் விழுந்தடித்து கொண்டு ஓடினால் சுமதி..!

என்ன பாக்யா அக்கா என்றாள்....! வேலைக்கு கிளம்பிட்டையா இல்ல இனிமேல் தான் கிளம்பி வரனுங்கா.

உனக்கு இதே பொழப்பா போச்சு இல்ல அது வந்து என்று சொல்லிக் கொண்டு சுமதி தொண்டையில் எச்சில் முழுங்கி முழுங்கி கைகளில் சீலையை கசக்கி கசக்கி ஏதும் பேச்சால் திகைத்து திகைத்துப் பார்த்தாள் பாக்யாவை....

பாக்யா கடுமையான வார்த்தைகளை வாரி தூத்தினாள்.

சரி சரி சீக்கரம் கிளம்பி வா வேலைக்கு போகலாம் என்றாள் பாக்யா.

அக்கா அது வந்து என்னானக்கா என் மகனுக்கு ஒரே காய்ச்சலா இருக்குக்கா ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போயிட்டு வரேன் அக்கா.

இந்த வேலை தான் நமக்கு ஆகாது. பிறகு சற்று நேரம் யோசித்தால் பாக்யா அந்த மேஸ்திரி வேற நாய் மாதிரி வல்லுன்னு விழுவான் யார் சொன்னாலும் கேட்க மாட்டான். சரி போ பார்த்துக்கலாம்.

நீயே புருஷன் இல்லாமல் ஒரு வேளை சோத்து இவ்வளவு கஷ்டபடுற இதுலா உன் மகனுக்கு வேற அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போயிடுது.

இதுலா வேற படிக்க வைச்சு என்ன பண்ண போற அவனை வேலைக்கு கூட்டி வரலமுலா.

நெற்றி புருவத்தினை உயர்த்தி அக்கா அப்படி மட்டும் சொல்லாதீங்க நான் படிக்காத அதனால தான் இவ்வளவு கஷ்டப்படுறேன் அவனது நல்லபடியாக படிக்கட்டும்.

என் உடம்புலா உயிர் இருக்குற வரைக்கும் என் மகனை நல்லபடியாக வைப்பேன் அக்கா. மகனை ஏதாச்சும் சொன்ன உனக்கு கோபம் போத்துக்கிட்டு வந்துரும் சரி சுமதி நீ ஆஸ்பத்திரிக்கு போ.

நான் வேலைக்கு போரேன் நேரம் அதிகமாக ஆச்சு...

வீட்டிற்கு வந்த சுமதி டேய் கண்ணா எந்திரி ஆஸ்பத்திரிக்கு போவோம்.

அம்மா நான் வரலா என கூறி கிழிந்த அந்த கோரை பாய்களுக்கு நடுவே இணை பாலமாய் உருண்டு ஒரே அடியாக அழுதுக் கொண்டிருந்தான் கண்ணன்.

இப்ப நீ மட்டும் வரலா? என்று கண்டிப்புடன் அவனை முறைத்து பார்த்தாள் சுமதி. வாய் ஏதும் பேசாமல் அம்மாவின் முந்தானையை கைகளில் பிடித்து நடந்தான். சாலையில் வலதுபுறம் செல்லவதற்காக இடது கைகளை நீட்டிக் கொண்டே வலது கையில் தன் மகனைப் பிடித்து நடந்தாள் சுமதி.

அம்மா சீக்கிரமாக டாக்டரா பார்த்து போகனும்மா ஏன்னா இன்னைக்கு என் பள்ளியிலா பொங்கல் விழா கொண்டடுறாங்கம்மா. பள்ளியில் மணி அடிப்பதற்கு முன்னால் நான் பள்ளிக்கு போக வேண்டும்மா.

அப்படியா கண்ணனா? சரி சரி வா வேக வேகமாக நடந்து ஆஸ்பத்திரிக்கு சென்றனர். சுமதியும், கண்ணனும் நுழைவாயில் டேக்கானை பெற்று 24 வது அறைக்கு வெளியில் அமர்ந்தனர்.

கூட்ட அலை மோதியது பிறகு இவரும் அனைவரும் மாஸ் அணிந்து இருப்பதை கண்டு இவர்களும் தங்கள் மாஸ்கை அணிந்தனர்.

எதிரில் இருந்த வாசகம் ஒன்றில் ‘‘தனிமனித இடைவெளி அவசியமான ஒன்று’’ என்று இருந்தது.

பிறகு டாக்டரிடம் கண்ணனைக் காட்டினால் அவரும் காய்ச்சலுக்கு ஊசி போட்டால் நல்லதும்மா இல்லேன்னா மாத்திரை மட்டும் தரட்டும்மா என கேட்டார் அதற்கு சுமதி ஊசி போடுங்க டாக்டர் விட்டுவிட்டு காய்ச்சல் வந்துக்கிட்டே தான் இருக்கு இவனுக்கு.

பள்ளியில் ஏதேனும் தவறு செய்தால் பிரம்பை ஆசிரியர் கைகளில் கண்டதும் பதுங்கி பதுங்கி ஓடி ஒளிவது போல திருதிருவென முழித்துக் கொண்டு அம்மாவின் கைகளை எடுத்து விட்டு ஓட தொடங்கினான்.

இழுத்து பிடித்து சுமதி போடுங்க டாக்டர் ஊசியை என்று சொல்ல இடுப்பில் இரண்டு புறமும் சுருக் சுருக் என்ற வலியுடன் ஒரு கையினால் இடுப்பை தேய்த்துக் கொண்டும் மற்றொரு கையால் கண்ணீரை துடைத்து கொண்டும் வெளியில் வந்தான்.

சுமதி மாத்திரை வாங்கிட்டு போயிட்டு வரேன் டாக்டர் என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டு வீட்டுக்கு திரும்பினர்.

சுமதியும், கண்ணனும் வீட்டிற்கு வந்தனர். உடனே அடுப்பங்கரைக்கு சென்ற சுமதி நேற்று மீதமிருந்த பழையச்சோற்றை கண்ணனுக்கு சூடுச் செய்து கொடுத்தாள் சுமதி.

இருவரும் சாப்பிட்டு முடித்ததும். கண்ணன் தனது மஞ்சப்பை எடுத்துக் கொண்டு பள்ளிக்கும், சுமதி கையில் ஒரு துண்டை எடுத்துக் கொண்டு வேலைக்கும் புறப்பட்டனர்.

கண்ணன் வழியெங்கும் முயல் போல தாவி தாவிக் குதித்து கொண்டே பள்ளிக்கு சென்றான்.

எங்கு பார்த்தாலும் தோரணங்களும், வண்ணக்கோலங்களும், பள்ளியில் அங்காங்கே

மாணவர்களும், மாணவிகளும் ஆடலும், பாடலும் நிகழ்ச்சிக்கு தயராகிக் கொண்டிருந்தனர். பிறகு ஒரு மூலையில் அமர்ந்து அனைத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

அதன் வழியாக வந்த கண்ணனின் நண்பன் சோமு வா கண்ணா இப்ப தான் வீட்டுலிருந்து வந்தாயா? வா நம் போய் விளையாடுவோம் என அழைத்தான் சோமு. பிறகு கண்ணனின் கைகளைப் பிடித்து இழுத்தான் சோமு மகிழ்ச்சியில் கால்கள் துள்ளிக்குதித்து மானைப் போன்று ஓடினாலும் உடல் என்னவோ சற்று தொய்வாக இருந்தது கண்ணனுக்கு.

டேய் இன்னைக்கு மதியம் என்ன சோறுன்னு தெரியுமா கண்ணா. என்ன சோறுடா சோமு

முந்திரி, கிஸ்மிஸ், சக்கரையெல்லாம் போட்ட பொங்கல் சோறு கண்ணா அது மட்டுமா கரும்பு, சக்லேட் எல்லாம் தருவாங்க கண்ணா அப்படியா மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தான் கண்ணன்.

அவன் சோமுவிடம் வருடம் ஒருமுறை தான் நான் இது போன்று சாப்பிடுவேன்.

என் அம்மா பாவம் நான் பிறந்ததிலிருந்து ஒருமுறைக் கூட இந்த மாதிரி பொங்கலா சாப்பிட்டதா நான் பார்த்தே இல்ல. இந்த முறையாவது எங்கள் அம்மாவுக்கு இந்த பொங்கலை கொண்டு போய் கொடுக்கனுடா சோமு.

என்று அவனிடம் சொல்லிக் கொண்டே விளையாடிக் கொண்டிருந்தான் கண்ணன்.

பிறகு பள்ளியில் பொங்கல் வைத்தும் அனைவரும் சாமி கும்பிட வாருங்கள் என மெல்லிய குரலில் அழைத்தனர் தலைமையசிரியர் அனைவரும் வரிசையாக நின்று சாமிக் கும்பிட்டனர்.

கண்ணனும் ஒரு வரிசையில் ஓரமாக நின்று கும்பிட்டான்.

பிறகு அனைவரும் பொங்கல் வாங்க வரிசையாக வாருங்கள் என அழைத்தார்.

சத்துணவு வழங்கும் கமலா பாட்டி.

ஒரே வரிசையாக நின்று பொங்கலை ஒவ்வொரு மாணவர்களும் வழங்கினார்.

கமலா பாட்டியை பார்த்தும் கண்ணன் எப்போதும் தனக்கேயுரிய ஒரு கிழிந்த சேலையைத் தவிர்த்து வேறு எதையும் காட்டாது கமலா பாட்டியா இது? புது சேலையில் நல்ல எங்க வீட்டு அருகே இருக்கும் வாத்தியாரின் அம்மாவை போல மிடுக்காக இருக்கு கமலா பாட்டி.

கண்ணன் அதை வேடிக்கை பார்த்த படியே வரிசையில் நின்றிருந்தான்.

பிறகு கண்ணுக்கும் பொங்கல், கரும்பு, இனிப்பு, சாக்லேட் கிடைத்தது.

அதில் பாதியை எடுத்து அவன் அம்மாவிற்கு ஒரு பனையோலையில் சுருட்டி வைத்து விட்டு மீதமுள்ள பொங்கலை அறுசுவை உணவில் அமிழ்தமாய் கிடைத்த பொங்கலை மெதுவாக எடுத்து வாயில் வைத்து சாப்பிட ஆரம்பித்தான். அது தொண்டைக் குழியில் அல்வாவை போல வழுக்கிக்கொண்டு போனது.

பொங்கலை ரசித்து ருசித்து சாப்பிட்டான். நான்கு வாயிற்கு மேல் இல்லை பொங்கல். மீதம் ஒட்டிருக்கும் பொங்கலை கைகளில் சுரண்டி பின்பு விரல்களில் ஒட்டிருந்தை சப்பி சப்பி சாப்பிட்டான்.

என்ன பள்ளியில் ஒரு ஓரத்தில் காக்காவுக்கு வைத்த பொங்கலை ஒரு காக்கா சாப்பிட்டு பசி தீர்ந்ததும் அடுத்தடுத்து காக்காக்களுக்கு தூது விட்டது.

ஆனால் கண்ணனோ அதைப் பார்த்துக்கொண்டே நின்றுக் கொண்டிருந்தான். அவனது வயிறோ கட முட என்று பசியால் அவனுக்கு தூது விட்டது.

பசி ஒருபுறம் இருந்தாலும் எப்படா மணியை அடிப்பாங்க என்ற யோசனை தலைக்கு மேல் ஓடியது அவனுக்கு.

பிறகு ஆடலும்,பாடலும் நிகழ்ச்சி இனிதே ஆரம்பம் ஆச்சு.

பள்ளி மேடையில் ஒருவர் பின்னால் ஒருவராக நின்று சாமி பாட்டிற்கு ஆட அனைவரும் ஆராவாரத்துடன் கைகளைத் தட்டி உற்சாகப்படுத்தினார். ஆனால் முதல் இரண்டு பாட்டிற்கு தன்னையே மறந்து கண்ணன் ஆடிப்பாடி மகிழ்ந்தாலும் மனதிற்குள் எப்போதும் இந்த மணியை எப்ப அடிப்பாங்க என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. அடுத்தப்படியாக பொங்கலுக்கான கவிதையை ஒரு அண்ணன் வாசித்தார்.

பிறகு ஒரு அக்கா பாரத நாட்டியம் ஆடினால் இப்படி வரிசையாக ஒவ்வொரு நிகழ்வும் சிறப்பாக ஓடிக் கொண்டிருந்தது. கண்ணனுக்கோ இந்த மணியை சீக்கிரமாக அடிச்ச என்ன என்று சோமு விடம் புலம்பி தவித்தான்.

என்னாச்சு கண்ணனா விழா சிறப்பாக தானா இருக்கு அற்புதம் என்ன கண்ணா. இல்லாடா சோமு எனக்கு காய்ச்சல் வர மாதிரி இருக்குடா அதான்டா.

அப்படியா கண்ணா இன்னும் கொஞ்ச நேரத்தில் விட்டு வாங்கடா. கவலைப்படாத கண்ணா. சரி சரி

வாடா இன்னைக்கு தான் நம்ம சந்தோஷமாக இருக்க முடியும்

பொங்கல் முடிந்ததும். அதா படி இதா படி சொல்லி நம்மலா கொன்னு எப்பாங்கடா கண்ணா.

ஆமாம்டா சோமு. வாடா கைகளைத் தட்டி பாட்டை ரசிப்போம்.

சரிடா மேடையை நோக்கி ஒரே சத்தமாக இருந்தது ஆசிரியர் அமைதியா உட்கார்ந்து நிகழ்ச்சியை பாருங்கள் என்று அனைவருக்கும் கட்டளை இட்டார்.

பிறகு அமைதியாக அனைவரும் நிகழ்ச்சியை ஆரவாரத்துடன் பார்த்து மகிழ்ந்தனர்.

மேடையில் இருந்து மைக்கில் இன்னும் சிறிது நேரத்தில் இந்த நிகழ்ச்சி முடிவடைய போகிறது மாணவர்களே.

கம்பீரமான குரலில் தெரிவித்தார் எங்கள் தமிழ் வாத்தியார். கண்ணனின் கரவொலியோடு அவனது நண்பர்களின் கரவொலியும் கூடிய அடுத்தாக இறுதி பாடலும் ஒலித்தது.

பிறகு அனைவரையும் பார்த்து தனக்குரிய மென்மையான குரலில் தலைமையாசிரியர் அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள் மாணவ, மாணவிகளே என்றார். மாணவர்களும் மாணவிகளும் பதிலுக்கு ஆசிரியருக்கு பொங்கல் வாழ்த்து கூறினார்.

யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் ஒலித்தது மணியோசை கண்ணனும் அனைவரின் தலைகளில் ஒரு தலையாய முண்டியடித்து பள்ளியின் நுழைவாயிலுக்கு வெளியில் சென்றான்.

ஆற்று வெள்ளம் போல் ஒரு ஓட்டமாக ஓடி தன் வீட்டை அடைந்தான். வீடு பூட்டியிருந்தது. வீட்டை திறந்து மஞ்சப்பை வைத்து விட்டு பிறகு அம்மா வேலை செய்யும் இடத்திற்கே போனான்.

மேஸ்திரி வழியில் கையைப் பிடித்து இழுத்தார்.

யார்டா நீ?

நானா சுமதி மகன் கண்ணன். அப்படியா? இன்னும் அரைமணி நேரத்துலா வேலையை முடிச்சுட்டு வந்திடும் உங்கம்மா இங்கா உட்காரு.

மணலையும் சிமெண்ட்டையும், ஜல்லியில் கலப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டே அமைதியாக உட்கார்ந்து இருந்தேன் கண்ணன். என்னா சார் இன்னும் எங்கா வரலா என மேஸ்திரியிடம் கேட்டான். இந்த கலவையெல்லாம் காலி ஆனா தான் வரும் உங்க அம்மா...!

சுமதி பத்தாவது மடியிலிருந்து உடல் சோர்ந்து, கலைத்த குரலுடன் பாக்யாக்கு பதில் கூறிக்கொண்டே இறங்கி வந்தாள். கண்ணன் அவனது அம்மாவை கண்டதும் கட்டித் தழுவிக் கொண்டான். பிறகு என்னப்பா கண்ணா இங்க ஏன் வந்தா?

அம்மா நான் உனக்கு ஒன்னு கொண்டு வந்திருக்கிறேன் வாம்மா வீட்டுக்கு போவோம் என்று கண்ணன் அனத்தினான்.

இருடா சம்பளப் பணம் நானூறு வாங்கிட்டு போவோம். பிறகு பணத்தை பட்டுவாடா செய்தார் மேஸ்திரி.

அம்மாவும், மகனும் பேசிக்கொண்டே வீட்டிற்கு நடந்தனர்.

அம்மாவின் கைகளை காற்றுக்கூட நுழைய முடியாதளவுக்கு கையை இறுக்கமாக பிடித்து நடந்தான் கண்ணன்.

வீட்டின் அருகில் வந்தது அம்மா கண்ணா மூடும்மா உனக்கு நான் ஒன்னு கொண்டு வந்திருக்கிறேன்.

அது என்னன்னு கண்டுபிடி அம்மா அவளும் கண்களை மூடி அது என்னவாக இருக்கும் என்று யோசிக்க தொடங்கினாள். கண்ணன் மஞ்சைப்பைக்கு அருகில் சென்று பார்த்தான் அங்கு எறும்பு சாரை சாரை இருந்தது.

அதை எடுத்து தட்டி விட்டான் பிறகு சுமதி கண்ணை திறந்து பார்த்தால் கண்ணன் அழுதுகொண்டிருந்தான். என்னாச்சுடா எதற்கு அழுகிறா? என கேட்டால் அம்மா பள்ளியில் குடுத்த பொங்கலையும் உனக்காக கொண்டு வந்தேன் அம்மா.

இந்த பொங்கலா எறும்பு வந்திருச்சே என அழுதான். சரி அழுகா கண்ணா எறும்புக்கூட ஒரு சாமி தான் கண்ணா கோவில்களிலும், வீட்டிலும் சாமிக்கு படைக்கும் போது இது தான் முதலா சாப்பிடும் இது சாப்பிடா அந்த சார்வேஸ்வரனே சாப்பிட்டதற்கு சமம் கண்ணா. என்று சொல்லி மீதிருக்கும் பொங்கலை வாயிட்டால் சுமதியின் வாயில் அந்த பொங்கல் அல்வாவை போல வழுக்கிக்கொண்டு தொண்டைக் குழிக்குள் சென்றது.

பிறகு கொஞ்சத்தை எடுத்து கண்ணனுக்கு ஊட்டினாள். வீட்டிற்கு அருகிலிருந்த கோவிலிருந்து அடித்தது மணியோசை.

மலர்ந்தது கண்ணனின் முகம்.




# மூன்றாம் வகுப்பு ஏசி பிரிவு

ரகுநாத் வ, மதுரை

மதுரை இரயில்நிலையம்...

நிறைய நபர்களின் வாழ்வை அங்குமிங்கும் தூக்கிக்கொண்டோடிய உவகையினை முகப்பிலேந்தியவாறு சரியான நேரத்தில் நடைமேடை வந்தடைந்தது பாண்டியன் எக்ஸ்பிரஸ்.

நேரம் இரவு எட்டு முப்பது... தொடர்வண்டி புறப்படும் நேரம் ஒன்பது முப்பதைந்து. சிறிது நேரத்திற்குப்பிறகே பயணங்களின் கதவுகளும் சிலருக்கு வாழ்க்கையின் கதவுகளும்கூட நடைமேடையில் திறக்கக்கூடும்.

மதுரை இரயில்நிலைய நடைமேடைகளில் அவரவர் அவரவருக்கான கோச்சின் எதிரில் 'நகரும் உறக்கத்திற்காகத்' தவமிருக்கின்றனர். வண்டியின் கதவுகள் எப்பொழுது திறக்குமென சிலரும், திறந்ததும் எவ்வழியில் உள்நுழைதல் சரியாயிருக்குமென சிலரும் நிற்கா கால்களோடு திரிய...ஆங்காங்கு ஓடித்திரியும் பொடுசுகளின் களியாட்டத்தை ஏந்தி களித்திருக்கிறது நடைமேடை....

கோச்சிலேற எத்தனித்துக் கொண்ட சிலரோ கதவினருகில் தங்களின் பைகளோடு சிவப்புநிற பெட்டி வண்டியினையே வெறித்தவாறு... நடைமேடையிலேயே அங்குமிங்குமாய் உலாத்திக் கொண்டிருப்பதெற்கெனவே சிலரிருக்க 'பெரிய சைஸ் கப்பலொன்றை மதகொன்று முந்திச்செல்வதைப்போல நிற்கும் இரயிலை தங்களது சக்கர வண்டிகளோடு முந்திக்கொண்டிருக்கின்றனர் சுமை தூக்குவோர்...

இன்னும் நடைமேடையில் அமர்ந்திருப்பது எதையும் கற்பிக்கவில்லை என்று நினைத்ததும் காலிக்கோப்பையினை ஏந்தி அமர்ந்திருக்கும் யாருமற்ற கல் இருக்கைகள் மட்டுமே...

தேவையானது கிடைத்துவிட்டால்கூட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மனோபாவங்களும் கூடுதல் தேவைகளோடு விதவிதமானக் கட்டுப்பாடுகளையும் கொண்டதுதான் வாழ்வின் நடைமேடை என்பது இக்காத்திருத்தல் புரியவைக்கிறது

கோச்சினுள் ஏறியதும் இடப்பக்கமாக திரும்பி அழுத்திப் பதிக்கப்பட்டிருக்கும் அந்தக் கதவு (பொதுவாக அன்ரிசர்வ்டில், சிலீப்பரில் இத்தகைய கதவுகள் இருப்பது கிடையாது) வாயிலேயே உணர்த்தியது இதற்குள் நுழைய 'ஏதோ ஒரு தெம்பு' அவசியம் என்பதை, அது பொருளாதாரமாகக்கூட இருக்கக்கூடும்...

இறுக்கிப்பிடித்து தள்ளி உள்ளே சென்றதும் கதவை விட்டுவிட்டால் பின்வருபவரின் மீது படக்கூடும் என்பது, வாழ்க்கையில் நாம் எடுக்கும் சில கடினமான முடிவுகள் யாரையோ பாதிக்கத்தான் செய்கிறது என்பதை உணர்த்தி உள்ளனுப்புகிறது...

அக்கதவினுள் நுழைந்ததும் பனிப்பிரதேசத்தினுள் நுழைந்த ஒரு சில்லிப்பு அனுபவம்... அதுவரை சுமந்து வந்த வெப்ப மேகங்கள் மெல்ல மழையாவதை தொடர்வண்டியின் உள்ளிருக்கும் வானம் உணர்த்துகிறது... கைப்பேசியோ ஆதாரோ எல்ஐசி பாலிசியோ கதவு எண்ணோ அல்லது தொடர்வண்டியோ நமக்கான இடமென்பது உலகியலில் எண்களாகவே மாறிவிட்டன அதைத்தேடியே மூவிருக்கைகளையும் ஈரிருக்கைகளையும் மேல்கீழாகத் துழாவத் தொடங்குகிறேன்.

எனக்கான இடம் 'அப்பர்பெர்த்' என்பதால் சிறிது நேரம் கீழிருக்கையில் அமர வேண்டியிருந்தது... சரியாக 9.30க்கு கிளம்பினான் பாண்டியன்...

சில பேச்சுச்சத்தங்கள் தெறிக்க, வயதானவர்கள் லோயர் பெர்த்தை கேட்பதும் அதை விட்டுக்கொடுப்பதுமாயும் நன்றியுரைப்பதுமாயும் சில நிகழ்வுகள் அடுத்தடுத்து நடந்தேறின...

'டிடிஆர் வரும்வரை

அமைதியாகவே

கடந்து கொண்டிருந்த வண்டியில்'

யாரோ ஒருவரின் முதற்கட்ட செய்கையில் படுத்துறங்க வேண்டும் என்பது அங்கிருந்த எட்டு நபர்களுக்கும் உணரலாயிற்று..விறுவிறுவென மிடில் பெர்த்தை கீழிறக்கவும் அதற்கான பிரத்யேகமான, அதிகம் பரிச்சயமற்ற கொண்டியினைத் தாளிடுதலென இரயிலின் வேகத்தோடு பிறந்தது படுக்கை வசத்தில் ஒரு நடுவறை...

எனக்கான அப்பர் பெர்த்தில் ஏறியமரும் முன் இறுக்கமான கருப்பு கம்பளி, காக்கிப்பையில் சுற்றப்பட இரண்டு வெள்ளை பெட்ஷீட், ஒரு குட்டி துண்டு

மற்றும் பொசு பொசுவென குட்டித் தலையணையென படுக்கையறை வசதிகளையும் வழங்கியது இந்த மூன்றாம் வகுப்பு ஏசி பிரிவு

அதை எந்தவரிசையில் எப்படி அமைப்பது என்று தெரியாமல் நான், கிடைத்த வாக்கில் விரித்துக் கொள்ள, எதிரிலிருந்த முதியவர் ஒன்றன்பின் ஒன்றாக விரித்து போர்த்திக்கொண்ட விதம் மௌனக் கற்பித்தல் எனும் அனுபவ வகுப்பெடுத்தது.

இவைகளெல்லாம் ஒருபுறமிருக்க ஏசியிலிருந்து குளிர் அருவிகளை ஊற்றிக்கொண்டிருந்தது ஏதோ ஒரு விஞ்ஞான மூளை...

வண்டி சில நிறுத்தங்களைக் கடந்து கொண்டிருக்கையில், யாரோ ஒருவர் திருச்சியினைத் தாண்டிவிட்டதாக மொபைலில் பேசியதாக நினைவு...

'விழித்தால் சேட்பேட் ஸ்டேஷனை நெருங்கியிருந்தார் பாண்டியர்'

அந்த வயதானவர் உட்பட எட்டில் இப்பொழுது நால்வர் தான் மீதமிருந்தோம்

அக்குடிலில் சில உறவும் சில பிரிவும் அதற்குள்ளாக நடந்தேறியிருந்தது....

மெதுவாக வண்டி எக்மோரினுள் நுழைய மறுபடியும் தள்ளு கதவினை நோக்கி வரிசையாய் அவரவர்கள்... படுக்கைகளிலெல்லாம் வெள்ளை நிற யானைகளாய் போர்வைகள் குமிந்திருக்க கீழே சிதறியிருந்த காக்கி நிறக்காகிதப்பைகளென வாழ்க்கையின் ஒருவழிப் பயன்பாட்டினை உணர்த்தியது...

கீழிறங்கி நடைமேடையில் இறங்குகையில் குளிர்விட்டுப்போன உணர்வுடன் நானும் சிலரும்...

'நேரம் கடைபிடித்தலை கற்பித்து தேவைகளின் மனோபாவத்தில் விழுந்தெழுந்து கடின முடிவுகளின் பாதிப்புகளை உணர்த்திய இரயிலின் எண்ம வாழ்வு, விட்டுக்கொடுத்தல் செய்கை மொழி, மறைமுக வகுப்பென இறுதியில் கசங்கிய காகிதப்பையே வாழ்வு' என மூன்றாம் வகுப்பில் பல்கலைக்கழகமாக காட்சியளித்தது பாண்டியன் எக்ஸ்பிரஸ்...

நேரம் சரியாக அதிகாலை 05.25... நடைமேடையினைக் கடந்து உவகையோடு வெளியேறுகையில் வகுப்புகளும் பாடங்களும் முடிவில்லாதது என்பதை உணர்த்தியது அங்கிருந்த மற்றொரு காட்சி....

'அன்ரிசர்வ்டு கம்பார்ட்மென்ட்டினுள்' வெவ்வேறு மூலைகளில் சிலர் இன்னும்

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர்!

கிரேஸி மேரி.அ

# மென் மஞ்சள் சிறகு விளிம்பு மட்டும் கருப்பு

நின்று நிதானித்து
அங்கும் இங்கும் அலை மோதும்
காரணமென்ன?

பச்சை வண்ணப்
புல்லில் ஒளிந்து
ஒளிந்து
யார் கூட கண்ணாமூச்சி...

இறகை விரித்துப்
பறக்க பறக்க அழகு
சிறகு மூடித் திறப்பது
இன்னும் இன்னும் அழகு...

எவ்விடம்
எம்மணம்
எச்சுவை
அழைப்பு
விடுத்ததோ....!
தெரியவில்லையே - இவ்வளவு வேகம்?

ஓரிடம்
நில்லாமல்
மொழி
ஏதுமின்றி

யாரைத்
தேடிப் பறக்கிறது ...

இந்த
வண்ணத்துப்பூச்சி....



# தங்கேஸ் கவிதைகள்

புல்லிக் கிடந்தது
புடை பெயர்ந்தது
அவ்வளவில் அள்ளிக் கொண்டது
உன் நினைப்பு சகி !

நினைவு ஒன்று தானே
மரித்தாலும் உயிர்த்தெழுவது

சங்குப் பூனைக்கு வீசும்
ஒரு சிறிய ரொட்டித் துண்டைப் போல
நீ வீசி விட்டுப் போன நேசம்
இப்போது உடைக்க முடியாத
பாறாங்கல்லாய் இருக்கிறது

நினைவுகளைச் சுமக்க முடியாத மனிதர்களுக்கு
இரண்டு நெஞ்சங்கள் வழங்கப்படவில்லையே
இன்னும்

புது மழைக்குப் பின்
சகலத்தையும் அடித்துச் செல்லும்
பேராறு போலத்தான்
இந்த நேசமும்

கடலில் கொண்டு போய் சேர்ப்பதற்குள்
எத்தனை அருவிகளில்
தலைகீழாய் குதிக்கச் சொல்கிறது
மனிதர்களை

மனதின் நினைவுகளை
மனதே அழிக்க வேண்டுமென்ற
விதியின் படி தோற்றுப் போய்
ஆலிலைச் சருகு போல்
அலைந்து கொண்டிருக்கும்
கோடியில் ஒரு மனது தான்
இந்தக் கவிதையை
உன்னிடம் சேர்ப்பது

❍

நேற்றின் நீட்சியாய் நாளையின் தொடர்ச்சியாய்
தகிக்கும் இன்று
எனக்கு உன் நினைவுகள்

சுவாசத்தை பிசையும் ஒரு பொழுதும்
மூச்சை நெரிக்கும் மறு பொழுதும்
துயர்கூட்ட

இடம் வலம் களிறுகளாய் புரளும்
ராட்சத முகில்களின் அடியில்
சிக்கித்திணறும் அந்த இளம் நிலவுக்கு
எவ்விதத்திலும் உதவமுடியாதவனாக
வெறித்துப்பார்த்துக்கொண்டிருக்கிறேன்
இவ்விரவோடு

கருங்குமிழ்களை உற்பத்தி செய்யும்
தோற்றவாய் அருகே
முகம் வைத்து காத்திருந்தும்
ஏனோ நானொரு குமிழுக்குள்
அடைபட இயலாமல் போக

என் கைகளில் மோதி
உடைந்து சிதறுகிறது
கருந்திரவம் காற்று வெளிகளில்

துயரத்திற்கு ஒப்பு கொடுக்கப்பட்ட தனிமையை
ஒரு மலைப்பாம்பு விழுங்கிக்கொண்டிருக்கையில்
உருட்டி விழித்துக்கொண்டிருக்கும்
அதன் கண்கள் சொல்லும் சேதி
என்றுமே சேராதோ இனி சேருமிடம்

தன்னைத்தானே சீறிப்பார்க்கும்
மீட்சிமையற்ற சர்ப்பத்திற்கும்
உதிரும் பொழுது ஒன்றிற்கே
விடைபெற காத்திருக்கும்
நடுங்கும் நட்சத்திரத்திற்கும்

பின் இரவின் கருமையை
நகத்தால் கீறிப்பார்க்கும் உனக்கும்
சேர்த்தே விசும்பிக்கொண்டிருக்கிறது
வெட்ட வெளியிலொரு
அடையாளமற்ற
அக்காகுருவி

❍

சன்னலைத் திறந்ததும்
நுழைந்து விடுகிறது
ஒரு கரிச்சான்
சிட்டுக்குருவி
ஒரு செம் போத்து
இவைகளைத் தழுவிய காற்று

நமது கழுத்தை
கட்டிக் கொண்டு
சுழலத் தான் பூனை போல்
நம்மை உரசிக் கொண்டே இருப்பது

இந்த விண்ணில் சிறகடிக்கும் அத்தனை
பறவைகளும்
நம் சொந்தம் தான்
சிறிது தானியங்களை மனதால்
தூவினால் போதும்
அல்லது சிறகுகள்
நேசத்தில் நெகிழ
ஒரு அன்பான கையசைப்பு கூட
போதுமானது

வா என் சகி
நான் உன் வண்ணத்துப்பூச்சி
ஒரு வண்ணத்துப் பூச்சி
நூறு கவிதைகளுக்கு சமம்
நூறு கவிதைகளும்
ஒரு வெண்புறாவுக்கு சமம்
உனது பெயரையும் எனது பெயரையும்
மாறி மாறி உச்சரிக்கும்
ஒரு கருவுற்ற இதயத்தின்
முதல் துடிப்போ
இந்த ஆகாயத்திற்கு சமம்.

❍

**நிழல்களின் விளையாட்டு**

நிழல்களின் வழியே
பாதை கண்டு பயணிப்பவன்
நான்

நிழல்களில் தான் பேதங்களில்லை
இனம் மதம் நிறம் பால் என
பாகுபாடுகள் இல்லை

சில நேரம் குதித்து குதித்து வரும்
நிழல்களை பார்க்கும் போது
மனதை பார்ப்பது போலவே இருக்கும்

நடனமிடும் சுடரின் நிழல்
நடராஜரின் அம்சம்

திரியின் நிழல்
பேசும் மௌனத்தின் நாவுகள்

பறக்கும் புறாவின் நிழலை பார்க்கையில்
தரையை முத்தமிடத் தோன்றும்

சிறகு விரித்த காக்கையின் நிழல்
இருளின் பேரண்டம் போல்
உருக் கொள்ளும்

மழையின் நிழலை
ஒரு முறையேனும் தரிசிக்க முடியாதவர்களாகிப்
போகிறோம் நாம்

ஏரியில் குதிக்கும் மழைத்துளியின் நிழல் தான்
ஒரு நீர் பூவாய் முகிழ்த்து மேலெழுவது

கர்ப்பக் கிரகத்தில்
மூலவரின் அசலை விடவும்
நிழல் தான் சுவரில்
துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கும்
விளக்கின் வெளிச்சத்தில்

அருள் பாலிக்கவில்லையென்றாலும்
பாவனை செய்யாது

நிழல்களையே பார்த்துப் பழகிய கண்களுக்கு
உலகமே ஒரு நிழலாட்டம் போலத்தான்
தோன்றும்

எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்
என்று கேட்ட மௌனியின் நிழல் தான்
இந்த கவிதையில் விழுந்திருப்பது

நினைவுகளின் நிழலை
தேடி அலைந்தவன் நான்
எனது நிழலைப் பார்த்த
நாளிலிருந்து தான்
கொஞ்சம்
அடக்கி வாசித்துக்
கொண்டிருக்கிறேன்

பா.சிவகுமார்

# நகரத்தில் மரணித்த மரணம்

நெருங்கிய உறவின்
மரணச் செய்தி
புலனக் குழுவில் கண்டதும்
தொற்றிக் கொண்டது பதற்றம்

அலுவலகத்தில் விடுமுறை
அனுமதி பெறவேண்டும்
பெண்ணை கல்லூரியிலிருந்து
'ஓலா'வில் வரச் சொல்ல வேண்டும்

தம்பிக்கு கூகுளில்
தற்போதைய இருப்பிடம்
தெரிவித்தாச்சு
தண்ணீர் தெளித்த
வாடிய மாலையை
அதிகவிலையென்று
தெரிந்தும் வாங்கியாச்சு
போக்குவரத்து நெரிசலில்
நசுங்கி பிதுங்கி எரிச்சலோடு
சாவு வீடு வந்து சேர்ந்தாச்சு
வாழ்வின் நிலையாமை
எண்ணி மனம் நொந்தாச்சு

உறவினர்களின் வருகையை
அறிவிக்கிறது
மெல்லிய விசும்பல்கள்
அழுகுரலாக மாறும் சத்தம்

'ஈ பிளாக்ல யாரோ
செத்துத்துடாங்கன்னு நினைக்கிறேன்'
அடுக்ககத்தில்
பேசிக் கொண்டு செல்வது
காதில் விழுகிறது

'சாயந்திரம் ஐந்து மணிக்கெல்லாம்
பாடியை எடுத்திடணும்'
அடுக்கக செயலாளரின்
கட்டளைக் குரல்
இடியாக இறங்குகிறது

'இறந்தவங்களுக்கு
கடைசி காணிக்கை
மனசு நெறைய செய்யுங்க'
ஈமச்சடங்கு செய்பவனின்
கடைசி கட்ட பிண அறுவடை

நல்லா தான் இருந்தாங்க
திடீர்னு எப்படி செத்தாங்க?
சாவு வீட்டில் என்றும்
மரணிக்காத கேள்வி

இத்தனைக்கும் மத்தியில்
மூச்சுத்திணறலுள்ள அத்தை
குளிரூட்டப்பட்ட பெட்டியில்
சாவகாசமாக
படுத்துக் கிடக்கிறார்

அத்தையை நினைத்து
கணநேரம் கண்கலங்கி
கண் திறக்கையில்
வீட்டைக் கடந்து
வீதியில் சென்று
கொண்டிருக்கிறார்
சிறு வேனில்.

# சுந்தரிமணியனின் ‘பீதி’ சிறுகதை - ஒரு விமர்சனப்பார்வை

திரு.சமயக்கண்ணு, மதுரை

சுந்தரிமணியன் எழுதிய பீதி என்ற சிறுகதையைப் படித்தேன். இச்சிறுகதையில் ஏழாம் வகுப்பு மாணவி மலரின் எண்ணச்சிதறல்கள் எப்படி இயல்பாய் உணர்வுப்பூர்வமாய் இருக்கிறது என்பதோடு வியந்து ரசிக்கும்படியாகவும் இருக்கிறது.

மலரை அம்மா அரிசிமாவு அரைக்கும்படி கேட்டபோது,“போமா என்னால் முடியாது. அண்ணனைப் போகச்சொல்” என்று மலர் கூறியதை நினைக்கும்போது, அவர்கள் அருகில் நாம் இருந்து கேட்பது போன்ற தத்ரூபக் காட்சியைக் கண்ணால் பார்க்கமுடிகிறது மட்டுமல்ல பிள்ளைகள் மறுப்புச் செயல்பாடுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

மேலும் வரலாற்று ஆசிரியர் கமலா பிள்ளைகள் வீட்டுப்பாடம் சரிவரச் செய்யவில்லை என்றால் அடிப்பவர் என்று படித்தபோது ஓர் ஆசிரியையின் அருமைக் கண்டிப்பைத் தெள்ளத் தெளிவாகக் காட்சிப்படுத்துகிறது. இப்போது அப்படி ஓர் நிலைக்கு பெற்றோர் எதிர்ப்புக் கூடிக்கொண்டே போவதால்தான், ஆசிரியப் பெருமக்களும் கண்டிப்பில் அதிக ஆர்வம் இல்லாது, ‘எனக்கென்ன, உனக்கென்ன’ என்று அமைதி ஆகிவிடுகின்றனர். அதன் விளைவு பிள்ளைகளுக்கு ஆசிரியர்மேல் ஒரு பய உணர்வு பட்டுப்போய் விடுவது மட்டுமல்ல, கல்வி வளத்திலும் கண் இருந்தும் மாலைக்கண் நோயாளியாய் இருக்கின்றனர்.

ஆசிரியரின் இந்தக் கருத்து கூர்ந்து நோக்கப்படுவதுடன் பெற்றோர்கள் பிள்ளைகள் மீது கண்மூடித்தனமான பாசத்தைக் கொட்டக்கூடாது என்றும், பிள்ளைகளைக் கண்டிக்கும் ஆசிரியர்களை என்றும் மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும் மறைமுகமாகச் சாடுகிறார் என்பது மிகவும் பாராட்டுக்குரியது அன்றோ?

மேலும் மாணவி மலர் ரைஸ்மில் சப்தம் கேட்டாலே போதும் அவள் அதில் ஒரு பயம் கலந்த பீதிக்கு உள்ளாவதைக் காணமுடிகிறது. இந்த உணர்வு மாணவி மலருக்கு மட்டுமல்ல, நிறையப் பேருக்கு ஒலி மற்றும் ஒளி வேகம் மற்றும் அதன் தாக்கம் பிடிக்காது என்பது முற்றிலும் உண்மை. ஒரு சிலருக்கு மழை பெய்யும் நேரம் வெளிப்படும் மின்னல் மற்றும் இடி முழக்கம் பிடிக்காதது மட்டுமல்ல ஒரு வித பயத்தால் ஏற்படும் ‘பீதி’யையும் மறக்கமுடியாது.

இன்றும் கிராமப்புறங்களில் இடி மற்றும் மின்னல் தரும் பயம்போக தத்தம் குழந்தைகளுக்கு ‘ஆத்தி பத்து அர்ச்சுனன் பத்து’ என்ற அனுபவ மந்திரச் சொல்லை உச்சரித்துப் பயம்போக்க வைப்பார்கள். அதாவது ஆத்திமரம் பெயரையோ அர்ச்சுனன் பெயரையோ இடி மின்னலின்போது உச்சரித்தால் பயமும் பீதியும் பத்தடிதூரம் பறந்து போய்விடும் என்பது ஐதீகம்.

எனவே ஆசிரியர் இச்சிறுகதைக்கு வைத்த ‘பீதி’ என்ற பெயர்ப் பொருத்தத்திற்காக அவரைப் பாராட்டுகிறேன். ஆசிரியரின் கற்பனை மின்னல்போல் போகாத இடத்திற்கும் போய் புகழ்பட ஜொலிப்பதைக் கண்டு பெருமைப்படுகிறேன். ஆசிரியர் சுந்தரிமணியன் அவர்களின் எழுத்தோவியம் எண்ணிறந்த இது போன்ற கதைகளைக் கொண்டு வந்து சமுதாயச் சீற்றங்களை மாற்றம் காணச்செய்யட்டும்.

வி.அபிவர்ணா, ஈழம் (முல்லைத்தீவு)

# கருப்பை

ஓய்ந்த போரில்
ஓயாத அலைகளாகி
கரைமோதிய தவிப்பில்
ஆழ்ந்த இரங்கல் தீபங்கள்.

என் வீட்டின்
கதவில் எழுதப்படாத
பதாகையாய் தொங்கிக் கிடக்கிறது
கல்யாண விளம்பரம்.

தெருக்கள் தோறும்
மூடப்படா கதவுகளில்
பிள்ளை பெற முடியாதவள்
என்றுதான்
நானும் என் வீடும்
முகவரியாக்கப் படுகிறோம்.

என்
சகோதர
சகோதரிகளே!

எறிகணை சிதறலில்
என்னில் இருந்து
உருவப்பட்ட கருப்பையை
எங்கே புதைத்தீர்களோ?
செந்தூரன் சிலையடியில்
சிந்திய குருதியை
இப்போதும் சிந்துகிறேன்.

இரா.வெங்கடேஸ் குமார்

# காதல் என்றால் தேடல்

முழு மனதில் தேடல் இல்லை நித்தம்
தேடல் நின்ற நேரம் காதல் இல்லை முற்றும்
முடிவில்லா ஆழியின் மீதான காதல் தொடக்கம்
அடைந்திடாத வளத்தின் ஞானம் மொத்தம்
அதில் வாழும் நீர் உயிரினங்கள் யாவிற்கும்
ஆழியின் புலவு நாற்றமும் மலரின் காந்தம்
நிகர் நின்றிடா உச்சி பறவை கூட்டம்
நிமிடம் நில்லாமல் இரை தேடி ஓடும்,
ஊர்வன யாவும் ஊர்முழுக்க ஊரியும்
தேடல் நில்லாது அதன் நினைவு உலகம்
நிறம் தெரியா நிலையில்லா உயிர்கள் தேடும்
நிகழ்வில் சலிப்புகள் குறையாது துளி சற்றும்
ஓடி திரிந்து, ஊர்ந்து, வளர்ந்து வாழும்
கரைந்து போகும் தேகம் கொண்ட உயிர்கள் யாவும்
கரைகள் இன்றி தேடியே ஓடும்
காதல் கடந்தும் முடிந்தும் காதல் தொடரும்
நிலை இல்லாமல் தேகம் எனும் ஓடம்
உயிர் எனும் காற்றின் வழி தேடல் நோக்கி ஓடும்
உதித்த நோக்கம் அறிந்து வாழ்கை நெடுக தேடும்.

ஆ,கார்த்திக்

# மஞ்சள் கயிறு

மனதை மாயம் செய்யும் மஞ்சள் கயிறு
ஆசைகளை அரங்கேற்றும் ஆனந்த கயிறு
உறவுகளை இணைக்கும் உண்மைக்கயிறு

மகளாக
பிறந்து மருமகளாக
மாற்றும் மங்கள கயிறு

கனவை நினைவாக்கும்
மோகக்கயிறு

தாம்பத்திய வாழ்வளிக்கும்
தங்க கயிறு

தைரியம் தன்மானம்
காக்கும் தாலிக்கயிறு

கலாச்சாரத்தை கட்டிக்காக்கும் கண்ணிய
கயிறு

உள்ளத்தையும்
உயிரையும் ஒன்றாக்கும்
உ ண்ணத கயிறு

மண்ணில் பிறந்த
மங்கையின் மறு உயிரு மஞ்சள் கயிறு.

கவிஜி

# ஊற்றெல்லாம் குருதி

ஆயிரம் காரணம் சொல்லி
ஆயிரத்தோராவது
வெடி குண்டையும்
வீசி விட்டாயா
சாகடிப்பதில் இருக்கும்
சாணக்கியம் பிடிக்கிறதோ
ரத்தம் சிந்த செய்யும் யுத்தம்
என்ன தருகிறது
அறிவாளிகளின் உச்சம்
மூடத்தனம் என்ற நிரூபணமா
அபகரிப்பின் அரிப்பு
துப்பாக்கி தூக்க சொல்கிறதோ
சக மனிதனை காவு வாங்கி
கைக்கொள்வது எதை
நின்று நிதானிக்க தெரியாத
உனக்கு
கொன்று போடுதல் சரி என்று
யார் சொன்னது
செத்தால்
செத்தோம் என்றாவது
தெரியுமா
வெடிகுண்டும் பீரங்கியுமா
மானுட தோட்ட மலர்கள்
நட்சத்திர கொள்ளிகளை
அள்ளி வீசென்றா
உன் கடவுள் சொல்கிறார்
சிறுபிள்ளையின் சித்திரம்
உடைபடுகின்ற ஊரில்
ஊற்றெல்லாம் குருதி
கேட்கிறதா
காற்றெங்கும் புலம்பல்...!

# அன்பு ஒன்றே அனாதையானது ...

## நௌஷாத் கான் .லி

**யோ**வ் .....ஒரு வாய் சாப்பிடுய்யா ...

கடைசி உருண்டை சாப்பிடாம விட்டா உடம்புல எதுவுமே ஒட்டாதாம் ...

என் கண்ணு இல்ல ஒரு வாய் சாப்பிடு என் தங்கமே ...

போதும் புள்ள ,என்னாலே சாப்பிட முடியலை

ப்ளீஸ் வயிறும் நிறைஞ்சிடுச்சு ,மனசும் நிறைஞ்சிடுச்சு புள்ள ,எனக்கு போதும் புள்ள ,நீ முதல்ல சாப்பிடு ...

எனக்கு போதும் புள்ள ,எனக்கு போதும் புள்ள

நீ எவ்வளோ சொன்னாலும் கேட்க மாட்டே ,கடைசி வாய் சோறுல தான் எல்லா சத்தும் நிறைஞ்சு கிடக்குன்னு சொல்லிட்டு அவள் கைகளால் அவனுக்கு வலுக்கட்டாயமாக அன்போடு ஊட்டி விட்டாள்அன்பரசி ...

என்ன புள்ள சொல்ல சொல்ல கேட்காம இப்படி சின்னப் புள்ளைக்கு ஊட்டி விடுற மாதிரி சோறு ஊட்டி விடுற ??

என் புருஷன் எப்போதும் எனக்கு சின்ன புள்ள தான் ,யோவ் எனக்கு குழந்தை பிறந்தாலும் நீ தான் எனக்கு முதல் குழந்தை அதை உன் ஞாபகத்துல வச்சுக்கோன்னு சொல்லிட்டு அவனருகே நெருங்கி வந்து உதடுகளை முத்தமிடுவது போல குவித்தாள்..

வேணாம் புள்ள பட்ட பகல்ல வேணாம் புள்ள ,ரூம் கதவு வேற சாத்தாமயே கிடக்கு ,யாராவது வந்தா அசிங்கமா போய்டும் புள்ள ??

நம்ம வீட்ல ,நம்ம ரூம்ல யாருய்யா வர போறாங்க ,சும்மா கிடய்யா-ன்னு சொல்லிட்டு அவன் இதழ்களை கைகளால் குவித்தாள்

வேணாம் புள்ள ,வேணாம் புள்ள ...ன்னு கத்தி கொண்டே கட்டிலில் இருந்து கீழே விழுந்தான் கோகுல் ...

கீழே விழுந்து அடிபட்டதும் தான் தெரிந்தது தான் இதுவரை கண்டது கனவு என்று ...அப்போது அன்பரசி பாத்ரூமிலிருந்து குளித்து முடித்து டவலை கட்டிக்கொண்டு அறைக்கு வந்தாள்..

ஹலோ மிஸ்டர் ரூமை விட்டு வெளியே போங்க ,நான் டிரஸ் பண்ணனும்னு சொன்னாள்..

நிச்சயம் ஒருநாள் தன் மனைவி பழைய காதலை மறந்து விட்டு மனதளவில் அவனை முழுமையாக கணவனாக ஏற்றுக்கொள்வாள் என்ற பேரன்பின் நம்பிக்கையோடும் ஒரு புன்னகையோடும் ,தானே வாடிய முகத்தோடு அந்த அறையை விட்டு வெளியேற மனமில்லாமல் வெளியேறினான் கோகுல்...

தான் கண்ட கனவு நிச்சயம் ஒருநாள் நிஜமாகும் என்ற நம்பிக்கையோடு அன்பரசியின் காதலுக்காக அனாதையாக அறையின் வெளியே நின்றது அவன் மனது !!



மல்லை .மு .இராமநாதன்

# கடற்கரை காணா கப்பல்

உன் கண்ணிலே காந்த கவர்ச்சி
எனை கட்டி இழுக்குதே
என் மனதிலே கோடி மகிழ்ச்சி
வான்தொட்டு நிற்குதே.

உன் வயிற்றில் கருவாய் வளர்ந்திட
வண்ண மலர்கள் துடிக்குதே.
உன் வாயிலே தமிழாய் வெளிவர
திருக்குறளும் ஏங்குதே.

உன் மூக்குத்தி வெளிச்சம் காணவே
முன் காலை விடிவெள்ளி நாணுதே.
உன் அதரச் சிவப்பை கடனாக
அடிவானச் சிவப்பும் கேட்குதே .

மழை வேண்டி நீ வலம் வந்தால்
காலம் - மாரிக் காலமாய் மாறிடுமே.
சிலையாய் வடிக்க நீ சிலையானால்
சிலை வடிக்கும் சிற்பி தோற்பானே.

ஓடும் நதியில் நீ நீராடினால்.- அது
ஆடும் கடலாய் ஆகிடுமே..

பாடும் தென்றல் பாவை உனைப் பார்த்து
தேடும் மலரை  மறந்திடுமே

உன் கண்கடலில் விழுந்த என் கண் கப்பல்.
கடற்கரை.காணாது' தவிக்கு தே

சா. கா. பாரதி ராஜா

# காதல்

நீ
குடை பிடித்து
செல்கிறாய்

நனைகிறேன்
நான்!

❍

தற்கொலை கூட
வரம் தான்...

உன் மேல்
விழுந்து உடையும்
மழைத்துளிகளுக்கு

❍

வெய்யிலில்
நீ
நடக்கையில்
மழையாக வருகிறேன்
நான்

நீயோ
ஒதுங்கிக் கொள்கிறாய்.

## இளையவன் சிவா

எனக்கெதற்குப் பிரச்சனை என்றேதான் ஒதுங்கிவிட்டு
கேட்பதற்கு யாருமில்லையென்றே புலம்புதலே மிக
அதிகம்
தனக்கான வசதிக்காய் மரத்தை வெட்டியபின்
தரணியிலே சூடேறிப் போனதாகத் தவிப்பதுவே
வேலையாகும்
யாரும் அறியாமல் கைநீட்டி காசு வாங்கியபின்
ஆட்சியிலே ஊழலென்றே பேசுவோரே மிகுதியாகும்
பொதுவிடத்தில் குப்பைகளைப் போட்டுவிட்டு
ஊரே நாறிப்போனதாய் ஒப்பாரிகளே எதிரொலிக்கும்
சாலையின் விதிகளிலே கவனத்தைத் தவறவிட்டு
விபத்துகள் நடக்குதென்றே வீண்பேச்சு தாராளம்.
பொது வரிசை முறையினிலே பொறுப்பாய்
நில்லாமல்
பெரும்புள்ளியைத் தெரியுமென்றே இடைநுழைந்தே
காரியத்தை
ஈடேற்றும் பதர்கள்தாம்
ஒழுங்குமுறை சரியில்லையென ஓதுவார்கள்
எப்போதும்.
தமக்குள்ளேயும் தமிழைப் பேசாது
தடுமாறும் தலைமுறையை விதைத்துவிட்டு
மொழியே தொலைந்துபோனதாய்
அழுகைகள் ஏராளம்
தன்னலத்தைப் பெரிதென்றே
வாழ்ந்திடும் சமூகத்தில்
பொதுநலத்தைப் பேணுகின்ற
புத்தி வளராமல்
முன்னேற்றமில்லையென்றே
முடங்கிடுவோம் நாமெல்லாம்.

❍

அலைபேசியைத் திறந்திட
மனதுக்குள் ஏறி நிற்கிறது எண்கள்
வங்கிப் பரிவர்த்தனைக்குள்
ஒளிந்து கிடக்கிறது
ரகசிய எண்களின் குறியீடு
தகவல் பரிமாறிட
மின்கடிதத்திற்கும்
எண்களே பிரதானம்.
எனக்கான உரிமை அட்டையை
சரிசெய்யவும் என்னையே
புதுப்பித்துக் கொள்ளவும்
தேவைப்படுகிறது எண்களின் அணிவகுப்பு.
எரிவாயு உருளை வாங்கவும்
சமையலறைச் சாதனங்கள் வாங்கவும்
ரேசனில் வரிசையில் நிற்கவும்
நினைவில் வைக்க வேண்டும்
நிறைய எண்களை.
மனங்களுக்குள் ரகசியக் குறியீடுகளும்
எண்களின் அட்டவணையும்
நிரம்பிக் கிடக்கையில்
காணும் எல்லோரையும்
கணக்கிட்டுப் பார்க்கிறது
எனக்குள் என்னை இயக்கும் எண்கள்.
தவறுதலான எண்களின் உள்ளீடுகள்
அன்றைய நாளின் தவறுகளை
அழைத்து வந்து விடுகின்றன.
காலை தொடங்கி படுக்கையறை வரை
துரத்தும் எண்களுக்குள்
புதையுண்ட பின்னே
இல்லத்துக்குள்ளும் எல்லோரிடமும்
எண்களையே தூதுவிடுகிறது மனம்.

மு.முபாரக்

சிறு வயதில் எனக்கு
முள் குத்தியது,
பூட்டு விழுந்து மண்டை
உடைந்தது,
கீழே விழுந்ததில்
ஏற்பட்ட சிராய்ப்பென
காயம்பட்ட
இடங்களையெல்லாம்
தொட்டுப்பார்த்து வருந்துவாள் அம்மா,
பெரியவனானப் பிறகும்,
மாடியிலிருந்து தவறிவிழுந்ததில்
காலொடிந்து வீட்டில் படுத்த படுக்கையாய்
கிடந்ததை
மறந்தும் ஒரு முறை
கூட சொல்லியதில்லை,
அம்மாக்களை கடவுளோடு
எதற்கு ஒப்பிடுகிறார்களென
இனி யாரிடமும் கேட்காதீர்கள்!



நேசன் மகதி

# முதல் புன்னகை!

இரத்தம் கொப்பளிக்கும்
கோபத்துடன்
முறைத்தாவாறே நிற்கும்
கருப்பரின் சுருள்மீசையை போன்று
யாரோ வரைந்துவிட்டதை தெருவில்
இளித்தாவாறு
மற்றவர்களிடம் சென்றுகாட்டிக்கொண்டு
விளையாடுகிறது ஒரு குழந்தை
வரலாற்றில் முதன்முறையாக
சிரித்துக்கிடந்தார் கருப்பண்ணசாமி..

சிறுகதை



# மதங்களுக்கு அப்பாற்பட்ட கடவுள்

கமலினி கதிர்(சுவிஸ்)

அமிர்தா வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.பனி காலம் முடிந்து மரங்கள் தளிர்க்கும் இளவேனிற்காலம் அது.குளிரை அள்ளிக்கொண்டு காற்று வீசியது.குளிர்ந்த காற்றுப் பட்டவுடன் தன்னிடமிருந்து சிறு தூறல்களை மெல்ல மெல்ல இறக்கியது சுவிஸ் முகில்கள். முகில்க ளிடமிருந்து விடுபட்ட தூறல்கள் சுதந்திரக் காற்றை உள்ளிழுத்த வாறே மெல்லென மண்ணைத் தொட்டன.இன்னும் பேரப்பிள்ளைகள் இருவரும் பள்ளியால் வரவில்லை.வருகிற நேரந்தான்.மழைக்குள் நனைந்து விடுவார்களோ என்ற அங்கலாய்ப்புடன் வாசலில் நின்று பார்த்தவண்ணமிருந்தாள் அமிர்தா. நேரத்துடன் வந்தால் கொஞ்ச நேரம் அவர்களுடன் பேசி மகிழ்ச்சியாக இருக்கலாம்.விழுந்த தூறல்கள் சட்டென நின்று மஞ்சள் வெயில் கீழே விழுந்த துமிகளில் தன் நிறத்தைப் பதித்து மினுங்கின.தூறல்கள் சட்டென நிற்கவும் அமிர்தா 'அப்பாடா.பிள்ளைகள் நனைய மாட்டினம்'ஆறுதலுடன் உள்ளே வந்தாள்.பத்து வயது பேரன் பெஞ்சமினும்,பேத்தி ஏஞ்சலும் அமிர்தா வின் செல்லங்கள்.மகள் வேலையால் வந்துவிட்டால் பேச விடாமல் கூட்டிச் சென்று விடுவாள்.மகள் கதரீனாவுக்கு தன் பெற்றோருடன் தன் பிள்ளைகளை நீண்ட நேரம் விடுவதில் உடன்பாடு இருப்பதில்லை. தான் வேலையிலிருக்கும் நேரங்களில் பள்ளியால் வரும் பிள்ளைக ளுக்கு உணவு கொடுத்து பார்த்துக் கொண்டிருந்தால் மட்டும் அவளு க்குப் போதுமானதாயிருந்தது.அடுத்த தெருவில் அவள் வாழ்வதால் அது வசதியாக இருந்தது. அத்தோடு தனக்கு தேவையான நேரங்களில் அம்மாவுக்கு போன் பண்ணி இரவுஉணவு தங்களுக்குமாக செய்வித்து விடும் சாமர்த்தியம் கதரீனாவுக்கு இருந்தது.தாயின் பாசத்தை தனக்கு தேவையான தருணங்களில் மட்டும் பயன்படுத்திக் கொள்வாள்.

அமிர்தாவும் அவள் கணவர் ஐங்கரனும் சுவிசுக்கு வரும்போது மகள் சுகிர்தா பத்து வயதும் மகன் சஞ்சீவன் எட்டு வயதுமாக இருந்தவர் கள்தான்.பிள்ளைகள் இங்கு படித்து இன்று நல்ல வேலையில் அமர் ந்து கொண்டார்கள்.அமிர்தாவும் கணவனுக்கு இணையாக வேலை பார்த்து பொருளாதாரச் சுமையை சுமந்தவள்தான். மகன் மேற்படிப்புக் காக லண்டன் சென்றவன் அங்கேயே ஒரு பெண்ணைக் காதலித்து மணந்து நிரந்தரமாகத் தங்கி விட்டான். சுகிர்தா படிக்கும் போதே ஒருவனைக் காதலித்து அவனை மணம் முடிப்பதில் தீவிரமாக இருந் தாள்.கப்ரீயல் குடும்பம் சைவசமயத்திலிருந்து யேகோவா விற்னசில் சேர்ந்தவர்கள்.அதனாலேயே அமிர்தாவும்,அவள் கணவனும் இதை விரும்பாமல் தடுப்பதில் கவனமாக இருந்தார்கள்.பிறப்பிலேயே கிறீஸ்த வனாக இருந்திருந்தால் அதை அவர்கள் பெரிதாக எடுத்திருக்க மாட்டார்கள்.ஆனால் ஏதேதோ காரணங்களுக்காக மதம் மாறிய ஒருவனுடன் மகள் தன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்வதைத் தான் அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.எத்தனையோ அன்பான வேண்டுதல்கள்,புத்திமதிகள்,வெருட்டல்கள், என்று எதுவுமே அவளிடம் பலிக்கவில்லை. 'நாங்கள் உம்மைச் சேர்க்கவே மாட்டம். எங்களை மறந்துவிட வேண்டியதுதான்.நாங்க செத்தாலும் வரக்கூடாது' என்ற உணர்ச்சி மிரட்டல்கள்; கூட அவளிடம் செல்லுபடியாகவில்லை.

தன்னிச்சையாக முடிவெடுத்து யாருக்கும் தெரியாமல் கப்ரீயலுடன் சென்று சேர்ச்சில் பெயர் மாற்றி கதரீனாவாக கப்ரீயலை கைப்பிடித் துக் கொண்டாள்.கொஞ்சநாள் பெற்றோரும் கோபித்துக் கொண்டிரு ந்து முதற் குழந்தை பெஞ்சமின் பிறந்ததுடன் மகளுடன் சேர்ந்து கொண்டார்கள். பேரனின் முகத்தைப் பார்த்த நேரத்திலிருந்து நேசத்தை மட்டுமே தம் பக்கத்தில் வைத்துக் கொண்டார்கள். என்னதான் கதரீனா வாக மாறினாலும் அவர்களுக்கு சுகிர்தாவாகவே இருந்தாள்.அதை சுகிர்தா விரும்பாவிட்டாலும் இவர்கள் மாறுவதாயில்லை.அமிர்தா மன முடைந்த வேளைகளில் அவள் கணவன் சொன்னார்'சமயம் என்றது மனிதனால் தோற்றுவிக்கப்பட்டது.அது உண்மையைத் தேடுவதாகும். நிலையான,உண்மையான ஆனந்தத்தை தேடி அடைவதுதான்.அதற்கு எந்த வழியைத் தேடினாலும் என்ன? மதங்கள் மனதைத் திருப்திப்ப டுத்துபவை. அறிவுக்குத் திருப்தி தர முடியாதவை என்று சுகிசிவம் அவர்கள் சொல்கிறார்.அவளுக்கு சமயம் முக்கியமாக இல்லை. காதலும் கணவனுந்தான் முக்கியமாக இருந்திருக்கு.நாங்க இதற்கு ஒன்றும் செய்ய முடியாது. பேரப்பிள்ளைகளும் அந்த வழியில் போறது கொஞ்சம் சங்கடமாய்த்தானிருக்கு.ஆனால் இந்தக் குழந்தைகள் அவர் களுக்குச் சொந்தமானவர்கள்.நாங்கள் தலையிட முடியாது. அவர்கள் சைவ சமயத்தை கைக்கொள்ள வேணுமென்று நாங்க வலியுறுத்த முடியாது.நல்லவர்களாக வளர்ந்தால் போதும்.சமயம் என்பது ஒரு முக்கியமான விடயமில்லை.ஒருத்தர் வாழ்வதற்கு ஒரு சமயத்தைப் பின்பற்ற வேண்டுமென்ற எந்த கட்டாயமும் இல்லை.' அது சரி போலத் தெரிந்தாலும் அமிர்தா நேரம் கிடைக்கும் போதெல்லாம் பிள்ளைகளு க்கு சைவசமயத்தின் சிறப்புகள் பற்றி சொல்லியே வருவாள்.தேவாரம் சொல்லிக் கொடுக்க பெரிதும் ஆசைப்பட்டு கணவனின் தலையீட்டால் அதனைக் கைவிட்டாள். 'தேவாரம் சொல்லிக் குடுக்கத் தொடங்கினீர் என்றால் சுகிர்தா ஒரேயடியாய் பிள்ளைகளை இங்கை விடமாட்டாள். பிறகு நாங்க பிள்ளைகளைப் பார்க்கவே முடியாமல்

போய்விடும்.இது தேவைதானா?'கணவனின் கூற்று சரியாகவே தோன்றியதால் அந்த எண்ணத்தை மறந்தாள்.

அமிர்தா பிள்ளைகளைப் பக்கத்திலிருத்தி தலை கோதி அன்போடு பலவிடயங்களுடன் சைவசமயத்தைப் பற்றியும் அவ்வப்போது கூறி விட்டு 'நீங்க வளர்ந்து எது உங்களுக்கு பிடிக்குதோ அதைக் கைக் கொள்ளுங்கோ.உங்கடை மனம் என்ற நிலத்திலை நாங்கள் போடும் விதை அழகிய ஒரு மலராகவோ,அற்புதமான கனியாகவோ வரலாம். எல்லாம் உங்கள் விருப்பம்.ஆனால் எங்களுக்கு நீங்க சைவசமயத்து க்கு வாறதுதான் விருப்பம்'என்பாள்.'அம்மம்மா!அப்பா சொல்றார் சைவ க்காரர் சும்மா நிறைய சுருவங்களை வைச்சுக் கும்பிடுவாங்கள்.அவை யின் சாமிக்கு கன கைளிருக்கும்.அப்பிடி யாருக்கும் இருக்குமா? சைவம் ஒரு சரியில்லாத சமயம் என்கிறார்.சைவக்காரர் சாமிக்கு காசு குடுத்துத்தான் கும்பிடுவினம்.பிறகு சாமிற்றை காசு வேணும் என்று செபம் சொல்லுவாங்க'என்று பத்தே வயதான பெஞ்சமின் சொன்ன போது அமிர்தாவுக்கு கோபம் வந்தது.'இப்பிடித்தான் சுகிர்தாவுக்கும் சொல்லிச் சொல்லி மாத்தினான்.இப்ப பிள்ளைகளையும் கெடுக்கிறான்' என்றாள்.'சைவ சமயத்திலிருக்கிற கன ஓட்டைகள் மற்ற சமயத்தவர் கள் கேலி செய்யக் கூடிய அளவிற்கு கொண்டு போய் விட்டிருக்கி றது.எங்களுக்குள் கடவுளைக் காண்கின்ற வழிமுறைதான் சித்தர்க ளால் கண்டறியப்பட்டது.'எள்ளில் தைலம்போல் எங்கும் நிறைபொ ருளை உள்ளில் துதித்தே உணர்வடைந்து போற்றீரே'என்று உள்ளத் தில் வைத்துப் போற்றுமாறு இடைக்காட்டுச் சித்தரும்,'மனமது செம் மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம்'என்று அகஸ்தியரும் சொன்னதைக் கடைப்பிடிக்க எல்லாரும் முன்வந்தால் சைவசமயம் போற்றத்தக்கதாக இருக்கும்.ஆனால் அது மறக்கடிக்கப்பட்டு காசு குடுத்து கடவுளுடன் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்கிற நிலைக்கு இன்று தாழ்ந்து விட்டது.காலம் ஒரு நாள் மாறும்.உண்மையான வழிமுறைகள் மீண்டும் தலையெடுக்கும்' அமிர்தாவுக்கு ஆறுதல் கூறினார் ஐங்கரன்.

'கடவுளைச் சரியாகப் புரிந்து கொண்டால் மதத்துக்கு முக்கியம் கொடுக்க மாட்டார்கள்.கப்ரியலின் புரிதல் அவ்வளவுதான்.யானைக்கு மட்டுந்தான் மதம் பிடிக்கும். அதேபோலத்தான் கடவுளை உணராமல் வெறும் சமயத்தைப் பிடித்து தொங்கிக் கொண்டிருப்பதால் தான் சமய த்திற்கு மதம் என்று இன்னொரு பெயர் வந்தது என்று நினைக்கிறன். தர்மத்தைக் காப்பாற்ற தான் சமயம் வந்தது.மனிதனை மனிதனாக்கு வதுதான் சமயம். இன்னொருத்தரைக் காயப்படுத்தாதது தான் உண்மை யில் ஆன்மீகம்.இறைஞானம் கிடைக்கப் பெற்றவர்கள் மதத்தைப் பெரிதாகப் பேசமாட்டார்களென்றும் மதத்தைப் பற்றிப் பேசுபவர்கள் இறை அனுபவம் பெற மாட்டார்களென்றும் சுகி சிவம் ஐயா சொல்றதுதான் சரி.எல்லா சமயங்களும் நல்லவற்றை மட்டுந்தான் சொல்கிறது.எந்தச் சமயமும் நல்லதல்லாதவற்றைச் சொல்லவில்லை. பிள்ளைகளுக்கு அதை மெல்ல மெல்லப் புரிய வைத்தால் போதும். அதோடு அவர்கள் கிறீஸ்தவத்தைக் கைக் கொண்டாலும் தப்பில்லை.ஒழுக்கத் தைக் கைக்கொண்டு நேர்மையோடு வாழ்ந்தால் போதும். அது தான் இந்தச் சமூகத்திற்கு தேவை' என்பார் ஐங்கரன். அமிர்தாவுக்கு அவையெல்லாம் போதுமானதாக இருக்கவில்லை. 'உலகத்தில் எத்தனை இலட்சம் பேர் கிறீஸ்தவத்தைக் கைக் கொண் டபோதும் ஏன் இன்னும் மதமாற்றத்தை நிகழ்த்துகிறார்கள்.மத மாற்றம் செய்வதில் ஏன் தீவிரமாக இருக்கிறார்கள்.இங்கு எவ்வளவு சைவக் காரர் இப்படி மதம் மாறீற்றினம்?' என்று கேட்டபடியே இருப்பாள். ஐங்கரன் புரிய வைக்க முயல்வார்.'இங்கை மட்டுமில்லை.தாயகத்தி லும் யெகோவா விற்னெஸ் மற்றும் பௌத்தம்,இஸ்லாம் என்று மாறிக் கொண்டுதானிருக்கினம்.அது ஒவ்வொருத்தருடைய விருப்பம.அவையின் தேடுதல்.கடவுளைப் பற்றிய சரியான புரிதல் வந்தவுடன் இந்த மத மாற்றங்கள் நின்றுவிடும்.'

பிள்ளைகளுக்கு நல்ல ஆற்றலைத் தரக்கூடிய பிராணயாமத்தைப் பலருக்கும் முக்கியமாக பேரப்பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பதில் ஐங்கரனுக்கு ஆர்வம் இருந்த போதிலும் அதைப் பற்றி அறியாத பலர் அதனை சைவசமயத்திற்கானது என்ற எண்ணத்தை மாற்ற முடியாமலி ருந்தார்.அத்தோடு சுகிர்தாவோ,கப்ரியலோ அவற்றைச் சொல்லிக்கொடு ப்பதற்கு ஒரு போதும் அனுமதிக்;க மாட்டார்கள் என்பது ஐங்கரனுக்கு நன்றாகத் தெரியும்.சுகி சிவம் ஒரு சொற்பொழிவில் சொன்னதை மனைவியிடம் அடிக்கடி கூறுவார்'கடவுளைவிட மதம் முக்கியமாகக் கொண்டால் அது பிரச்சனை.தெரு வழியாக வீட்டுக்குப் போகலாம். தெருவே வீட்டுக்குள் வந்தால்?தெரு நிற்குமிடத்தில் வீடு ஆரம்பமாகும். தெரு கடவுளை அடைகிற வழி. அதன்வழியே போய் வீட்டை அடைகி றது தான் நோக்கம்.மதத்தைக் கட்டிப் பிடிப்பது தெருவில் போய்க் கொண்டேயிருப்பதுதான்.அதோடு ஓசோ சொன்னதாகவும் ஒரு தகவல் சொன்னார்.ஒவ்வொரு மதத்தவனும் தன் கோயிலில் தான் இறைவன் இருக்கிறானென்றும், மற்ற மதத்தவரின் கோயில் எல்லாம் வெறும் கட்டிடம் என்றும் நினைக்கிறார்கள் என்று'.இந்துசமயத் தெய்வங்கள் பற்றி சுகிர்தா பேசுவது அமிர்தாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தி அடிக்கடி புலம்பிக் கொண்டுதானிருப்பாள். பிள்ளைகளுக்கு ஏதும் சொல்வதும் பின் மகள் சுகிர்தா வந்து கோபத்துடன் கத்துவதும் அடிக்கடி நடந்து கொண்டுதானிருந்தது. இதைத் தவிர்க்க முடியாமல் ஐங்கரன் திண்டா டினார். சுகிர்தாவும் சைவசமயத்தைப் பற்றிக் குறைவாகவே பேசுவாள். 'விக்கிரகங்கள் சாப்பிடுமென்றுதானே சாப்பாட்டை படைக்கிறீங்க. கற்பூரத்திற்குள் உங்கடை

கடவுள் ஒழிந்திருக்கிறாரா' என்றெல்லாம் கிண்டலாகச் சொல்லுவது அமிர்தாவுக்கு கோபத்தை ஏற்படுத்தும். ஐங்கரன் புரிய வைக்க முயன்று தோற்றுவிடுவார்.'மன ஒருமைப்பா ட்டுக்காகவே உருவங்களை வணங்கத் தொடங்கினார்கள்.கடவுள் தத்துவம் புரியத் தொடங்க உருவங்களை விட்டு தம்முள்ளேயே கடவுளைக் காண்பார்கள்'ஐங்கரனின் இக்கூற்றுகள் அவளுக்குப் புரிவதாயில்லை.

மனைவியை சமாதானப்படுத்துவதற்காக ஐங்கரன் சொன்னார்'மனித னாய் பிறந்தால் எண்ணற்ற குணங்கள் நல்லதும்,கெட்டதுமாய் இருக்க த்தான் போகிறது.அதைக் கண்டுகொள்ளாமல் தண்ணீரைப்போல் மேலோட்டமாக ஒட்டாமல் இருந்துவிட்டுப் போக வேணும்.சும்மா எல்லா த்தையும் தூக்கிப் பிடித்தால் உறவுக்குள் பகைதான் வரும். அந்தக் கப்ரியலைப்போல நீரும் சமயத்தைப் பிடித்து தொங்கிக் கொண்டு இருக்காதேம்.நாங்களும் வேலை வேலையென்று ஓடி பிள்ளைகளுக்கு சரியான சமய உணர்வை ஏற்படுத்தாமல் விட்டிட்டம்.அதுக்காக இப்ப எங்களுடைய சமயத்தைப் பற்றிப் பேரப்பிள்ளைகளுக்கு சொல்லி வருவதும் ஒரு திணிப்புத்தான்.அப்படி நாங்க செய்யக்கூடாது.பிள்ளைக ளுக்குச் சொல்லிக் கொடுக்க எத்தனையோ நல்ல விடயங்கள் இரு க்கு.ஆத்திசூடி,ந ல்வழி,மூதுரை,கொன்றைவேந்தன் இதுகளைச் சொல்லி க்குடும்.உந்த மதத்தை பற்றி கவலைப்படாதேம்.பிள்ளைகள் உயர்ந்த சிந்தனையுடன் நல்லவர்களாக சமூகத்திற்கு தீங்கு செய்யாதவர்க ளாக வளர்ந்தால் போதும்.இப்ப குடி,போதை,புகை அதோடை இந்த சமூகவலைத்தளங்கள் என்று எத்தனையோ கேடுகளுக்குள் விழுந்தி டாமல் அவர்கள் எப்படித் தம்மைக் காத்துக் கொள்வது போன்ற விடயங்களில் கவனம் செலுத்தும்.அது போதும்.வளர்ந்து சமயமென்ற குழிக்குள் விழுந்திடாமல் ஆன்மீகத்தை அவர்களே தேடிக் கொள்வார் கள்.கடவுளை அவர்கள் வியாபாரப்பொருளாக நினைக்க இடங்கொடு க்க கூடாது. கேட்பதைக் கொடுக்கும் வியாபாரியில்லை கடவுள்.தங்கள் தங்கள் மனஅமைதிக்காக மட்டும் கடவுளை நினைத்தால் போதும். அர்ச்சனைச் சீட்டுகளால் எல்லாவற்றையும் அடைந்து விடலாம் என்ற பொய்யான நம்பிக்கையை இளம் சமுதாயத்திடம் விதைத்துக்கொண்டு வருவது பிழையான விடயமென்றுதான் நான் நினைக்கிறேன். அது சைவசமயத்தின் சாபக்கேடு' என்று கூறினார்.

வெள்ளிக்கிழமைகளில் பிள்ளைகளுக்கு கட்டாயமாக மாமிச உணவு கொடுப்பது சுகிர்தாவின் வழக்கம்.அது அமிர்தாவுக்கு மிகவும் கோப த்தை வரவழைக்கும்.'வெள்ளிக்கிழமை ஒருநாள் மச்ச உணவைப் பிள்ளைகளுக்கு கொடுக்காமல் விட்டால் என்ன குறைஞ்சு போயிடு வாளா?' என்று குறைபட்டபடியே இருப்பாள். அதற்குப் பதிலாக ஐங்கரன் சொல்லுவார்'உணவைத் தீர்மானிக்கிற பல சமயங்கள் உணர்வைத் தீர்மானிக்க மறந்து விடுகின்றன.உணவையும்,சமயத்தையும் ஏன்தான் தொடர்பு படுத்துகிறார்களோ?இறைச்சி சாப்பிடுகிறவனும் பக்தியோடு இருக்கலாம்.மரக்கறி உணவு மட்டுமே உண்கிறவனும் பக்தியில்லாமல் இருக்கலாம்.இறை உணர்வுக்கும் உணவுக்கும் என்ன சம்மந்தம் என்று எனக்கு விளங்குறேலை.அளவுக்கு மிஞ்சி உண்டால் உடல் மந்தமாகி ஆன்மீக உணர்வு வராமல் விடலாம். ஆனால் சில நாட்களுக்கு சமயச் சாயம் பூசுவது ஏனென்று தெரியேலை.நாள் ஒன்று சமயஉணர்வைக் குறைக்கவோ அதிகரிக்கவோ செய்யுமா என்ன?மற்ற நாட்களைப்போல் வெள்ளிக்கிழமையும் ஒரு நாள். அவ்வளவுதான்.வியாழனில் சாப்பிடலாம் வெள்ளியில் சாப்பிடக்கூடாது என்பது எனக்கு சின்னப்பிள்ளைத்தனமா கத்தான் இருக்கிறது.உதுகளில் எல்லாம் ஏதும் இருக்கிறதோ எனக் குத் தெரியேலை.உதுகளுக்கெல்லாம் முக்கியம் குடுத்து உம்மடை நிம்மதியைக் கெடுக்காதேம்.ஒரு சமயத்தைப் பற்றி குறை சொல்வத ற்கு முன் அதைப்பற்றி முதலில் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். தெரியாத விடயங்களை மட்டந்தட்ட கப்ரியலுக்கோ,மற்றவர்களுக்கோ உரிமையில்லை.' எவ்வளவுதான் ஐங்கரன் சொன்னாலும் அமிர்தா புலம்புவதை நிறுத்துவதேயில்லை.கண்ணுக்குத் தெரியாத ஒரு போர் அமிர்தாவுக்கும் சுகிர்தாவுக்கும் இடையே நடந்து கொண்டுதானிருந்தது. அதற்குள் மாட்டுப்பட்டு விழி பிதுங்கி நின்றது பேரப்பிள்ளைகளும், கணவன் ஐங்கரனுந்தான்.

ஒருநாள் பிள்ளைகளைப் பக்கத்திலிருத்தி ஐங்கரன் கூறினார் 'ஒரே யொரு கடவுள்தானிருக்கிறார்.ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு பெயர் சொல்கிறார்கள்.அவ்வளவுதான். எந்தச் சமயமும் குறைந்ததில்லை. 'உன்னைப்போல் அயலானையும் நேசி' என்று யேசுவும்,'அன்பே சிவம்' என்று சைவ சமயமும்,இரக்கம்,அன்பு,ஒழுக்கம் வேண்டுமென்று இஸ்லாம் சமயமும் சொல்கிறது.கண்ணுக்குத் தெரியாத கடவுளை நாம் காற்றைப்போல உணர மட்டுந்தான் முடியும்.நீங்க அப்பாஅம்மா வுக்கு பிள்ளை,எங்களுக்கு பேரப்பிள்ளை,உங்கடை ரீச்சருக்கு மாண வன்,தங்கச்சிக்கு அண்ணா,உங்கடை சினேகிதனுக்கு சினேகிதன்.இப் படி ஒரு ஆள் ஒவ்வொரு உறவாக இருக்கிற மாதிரித்தான் சிவன், யேசு,மாதா,அல்லா எல்லாம்.பெயர்கள் மட்டுந்தான் வித்தியாசம்.விளங் கிச்சா' அவருடைய விளக்கம் பிள்ளைகளுக்கு தெளிவைக்கொடுத்தது. 'நல்லாய் விளங்கிச்சுது தாத்தா.அப்பா சொன்னாலும் கேட்க மாட்டார். ஆனால் நாங்க எல்லாச் சமயமும் ஒன்றுதான் என்று விளங்கிக் கொண்டம்'பெஞ்சமின் கூற 'அவ்வளவுதான்' பேரப்பிள்ளைகளைக் கட்டியணைத்து முத்தமிட்டார் ஐங்கரன்.

இரா. மதிராஜ்

# பொய்கால் குதிரை

பணம் யாருக்கு வேண்டுமானாலும்
யார் வேண்டுமாலும்
செலுத்திக் கொள்ளலாம்,
ஆனால்
ஒரு ரூபாய் பணத்தை
எடுக்கும் போது மட்டும்
கையொப்பம் ஒரே
மாதிரி தான் இருக்க வேண்டும்,

வேலை, வெட்டி இல்லாமல்
சண்டைப் போட்டு,
நியாயம் கேக்க
போனால் கூட
ஒரு கோயர்
பேப்பர் ரோட
போக வேண்டியதிருக்கிறது,

கல்வி, வேலைவாய்ப்பு,
ரியல் எஸ்டேட்,
வெளி நாடு என
ஏதேனும் சேவைக்கான
அழைப்பு வரும்போதுதெல்லாம்
அவர்களின் பெயரை
யாரோ ஒருவர் பிராடு
என்று பதிவு செய்திருப்பதை
ட்ரு காலர் காட்டுகிறது,

பத்து பேர்
பணம் கட்ட
வரிசையாக
நிற்க்கும் போது
கல்வி கட்டணத்தைக் கட்ட
காத்திருந்தவரை
முதலாவது அழைத்தார்
காசாளர்.

மலர் மகள்

# கொண்டாட்டம்

மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து ஸ்பரிசங்கள்
மறுக்கப்பட்டு வெறிச்சோடி கிடக்கின்றன
பெரும்பாலான நாட்கள் .

ஆசைகளின் வெளிப்பாட்டில்
காத்திருக்கின்றன
ஒளிரும் விடுமுறை நாட்களுக்காய்.

புவி ஈர்ப்பு அசைவுகளான அந்நாட்களில்
பிரியங்களுடன் குழந்தைகளோடு கூடி
விளையாடி மகிழ்கின்றன

பூங்காக்களில் உள்ள
சறுக்கும் ஊஞ்சலும்
குதிரை யானை பொம்மைகளும்!

ஹரணி தஞ்சாவூர்

இன்பமும் துன்பமும் இல்லாத வாழ்வேது
இன்னலும் கன்னலே இன்புறு-- அன்பில்
ஒழுங்கே உயர்வென ஒத்துயர் சிந்தை
மழுங்கிடா மாண்பே மதிப்பு.

கவிஞர். R .S .பாலகுமார் .M.A

# துளிப்பாக்கள்

தண்டவாளத்தில்
தலை வைத்தனர்
விலைவாசிப் போராட்டம்.

❍

புகையீரதம் வருவதில்லை
ரயில் நிறுத்த போராட்டம்
மாணவர்கள் செய்கிறார்கள்

❍

அவசரமாக நுழைந்த
திருடன் அலமாரியில் நகை அடமானச் சீட்டு
கண்டதும் எரிச்சலானான்

❍

கல்லூரி விழா
குத்தாட்டம் போடுகிறார்கள்
புதுமுக மாணவியர்கள்

❍

அவன் கன்னத்தில்
குங்குமம் பற்றிக்கொண்டது
கூடலும் அணைப்பாள்...

❍

கதவுகளுக்கு
பூட்டு சாவி இல்லை அடையாள
அட்டை வசதி

❍

விரத நாட்களில்
விற்பனை மந்தமானதால்
வெட்டப்படாத ஆடுகள்

அனாவசியமாக
சுற்றுகிறார்கள் இலவசப் பேருந்து வசதி
பெண்கள் ஓட்டு ஆளுங்கட்சிக்கு

❍

குடும்பத் தலைவிகள் மகிழ்வு
அரசின் உதவித்தொகையளிப்பு
பெரும் உபயோகமாகிறது

❍

தெரு நாய்கள் ஏராளம்
நடைபாதையில் பயணிப்பவர்கள்
பயத்துடன் செல்கிறார்கள்

❍

நாய்கள் இடமாற்றும் நிகழ்வு
மனதளவில் பாதிப்பு கூடுது மக்கள்
நடப்பதே சிரமம்

❍

நெருக்கமுடன் பழகினர்
முகநூலில் நட்பு வட்டங்கள்
மீந்தது ஏமாற்றமே

❍

கிரிவலப் பாதை
பக்தர் கூட்டம் நிரம்புகிறது
திருவண்ணாமலையில்.


❍

அனைவரும் வருக
அன்போடு வரவேற்கிறோம்
மகளிர் பல் தொழில் கல்லூரி

❍

மொட்டை மாடிகளில்
தொட்டிச் செடிகள் பூக்கிறதால்
பேத்தி தினமும் பூக்கள் சூடுகிறாள்.

சிறுகதை



# நேர்மை

பட்டுக்கோட்டைராஜா

இடைச்செவல் பெருமாள் இறந்துவிட்டதாய் இன்று காலை இவரது மகன் பிரிட்டோ அலைப்பேசியில் சொன்னபோது சேவியர் செங்கிப்பட்டி மருத்துவமனையில் இருந்தார். மனைவி மேரிக்கு மார்பகப் புற்றுநோய் அறுவை-சிகிச்சை நடந்து அங்கேயே அனுமதிக்கப் பட்டிருந்தாள். இன்னும் பத்துநாட்களுக்குப் பிறகுதான் வீட்டுக்கு அனுப்புவதாய்ச் சொன்னார்கள்.

இந்த நிலையில் ஊருக்குச் செல்வது கடினம். மேரிக்கு உதவிட வேறு ஆட்களும் இல்லை.கடைசியாக பெருமாள் முகத்தைப் பார்க்க இயலாது போனது.

சேவியருக்கு பெருமாள் உடனான நட்பு முப்பது வருடங்களுக்கு மேலானது. சிறிதும் விரிசல் காணாதது. காரணம் பெருமாளின் நேர்மை. அப்போது சேவியர் பெருங்குடி நகர்ப்புறத்தில் சிறியதாய் ஒரு உணவு விடுதி வைத்திருந்தார்.

பெருமாளை, இவருக்குத் தொழில்முறை நண்பர் சேகர்தான் அறிமுகம் செய்துவைத்தார்-'இவர் பேரு பெருமாள்...இடைச்செவல்தான் சொந்த ஊர்... நல்ல மனிதர்...திருமணம் முடிஞ்சி ரெண்டு பிள்ளைங்க இருக்காங்க...அங்கேயே கொஞ்சமா நிலம் இருக்கு... இந்த முறை வானம் பொய்த்துப் போனதால என்கிட்ட உதவி கேட்டாரு...நான் உன்கிட்ட அழைச்சிட்டு வந்திட்டேன்!' என்றார் சேகர்.

'உதவின்னு மொட்டையாச் சொன்னா எப்படிய்யா?... பண உதவியா?-பொருள் உதவியா?...சேதியை விவரமாச் சொன்னாஈத்தானே புரியும்!'

'நானே சொல்றேங்கய்யா...கடந்த ஒருவருசமாவே விவசாயம் சரி இல்லாததால கடலைமிட்டாய், முறுக்கு, பிஸ்கட் எல்லாம் மதுரை- சிவகங்கை போன்ற ஊர்களில் இருந்து மொத்தமாய் வரவழைச்சி இங்கே பக்கத்து ஊர்களில் இருக்கிற பெட்டிக் கடைகளுக்கெல்லாம் சைக்கிளில் கொண்டுபோய் சப்ளை பண்ணுவேன்... வாரக் கடைசியில் போய் பணம் வாங்குவேங்கய்யா... இப்போ என் குடும்பமே அதுலதான் ஓடுது....'உங்க உடம்புல தென்பு இருக்கிறவரை சைக்கிள் ஓட்டுவீங்க... அப்புறம்?.. அதனால நாமளே ஒரு பெட்டிக்கடை வச்சா என்ன?'ன்னு என் பொஞ்சாதி கேட்டாங்கய்யா!'

'நல்ல யோசனைதான்.... அதுக்கு நான் என்ன செய்யணும்னு என்கிட்ட உதவிகேட்டு வந்திருக்கீங்க?'-சேவியர் கேட்டார்.

'உங்களோட உணவுவிடுதி வாசலில் ஓரமா ஒரு பெட்டிக்கடை வைக்க அனுமதி கொடுத்தீங்கன்னா போதுங்கய்யா...நீங்க கேட்கிற வாடகையைக் கொடுத்திடுறேன்.. வெளியில் தனியா கடை வைக்கிறதா இருந்தா எக்கச்சுக்கமா பணம் கேக்குறாங்க.... அதான் இவர்கிட்ட கேட்டேன்...இவரு உங்கள்ட்ட கூட்டிக்கிட்டு வந்தாரு!'

'எங்க விடுதி வாசலில் கடை வைக்கிற அளவுக்கு இடமா இருக்கு...?'- சேவியர் யோசனையோடு கேட்டார்.

'நாம சுவர் எடுக்கப் போறதில்லீங்கய்யா...'ஹார்ட்-போர்டு'ல சுற்றிவரை அடைச்சிட்டு முன்னாடி மறைப்புக்காக ஐந்தடிக்கு ஒரு பலகை வச்சிட்டாப் போதுங்கய்யா... அந்தப் பலகையைக் கீழிருந்து திறந்து மேலே நிறுத்துறதுக்கு ஒரு நாதாங்கி செருகிட்டாப் போதும்... பக்கவாட்டுல நான் கடைக்குள்ளே வந்து நிற்கச் சின்னதா ஒரு திறப்பு... உள்ளே பாட்டில்கள் வைக்க ஓரடியில் ஒரு பலகை...கடை அவ்வளவுதான்... ஆசாரிக்கு அரைநாள் வேலை....!"-என்றார் பெருமாள்.

அவர் விளக்கிய விதமே சேவியருக்குப் பிடித்துப் போனது. கடை வைக்க அனுமதி கொடுத்துவிட்டார். தரை வாடகையாக மாதம் நூறு ரூபாய் கொடுத்தால் போதும் என்றும் சொல்லிவிட்டார்.

அடுத்தநாளே பெருமாளின் பெருமாளின் பெட்டிக் கடை, மேரி உணவுவிடுதி வாசலில் திறக்கப் பட்டுவிட்டது. பாட்டில்களில் கடலைமிட்டாய், முறுக்கு, சாக்லேட், பிஸ்கட் வைத்து விற்பார். வாழைத் தார் கட்டித் தொங்க விட்டிருப்பார். சிறிய அளவில் ஆரம்பித்த வியாபாரம், பெருமாளின் நேர்மையால் நன்றாக வளர்ந்தது. பிஸ்கட், முறுக்கு மொத்த வியாபாரமும் செய்தார். சில்லறை வியாபாரிகள் பெருமாள் கடைக்கே வந்து வாங்கிச் சென்றார்கள்.அதிக லாபம் வைக்க மாட்டார்.

விடுதியில் உணவு சாப்பிட்டுவிட்டு வெளியே வருகிறவர்கள் புகைப்பதற்கு சிகரெட்டோ, பீடியோ கேட்டால் பெருமாள் இல்லை என்று சொல்லிவிடுவார். வெற்றிலை- பாக்கு தருவார், புகையிலை இல்லையென்பார். அதுதான் புற்றுநோயின் ஆரம்பம் என்பார். சொல்லிச் சொல்லிப் பார்த்தவர், 'இங்கே புகையிலை வஸ்துக்கள் எதுவும் விற்பனைக்கு இல்லை!' என்று எழுதிய சிலேட்டுகளைக் கடையின் இரண்டு பக்கங்களிலும் சணலில் கட்டித் தொங்கவிட்டார். காலையில் சைக்கிளில் வந்து கடையைத் திறக்கும் பெருமாள் இரவு பத்துமணிக்குதான் வீடு திரும்புவார். மதியச் சாப்பாடு பெரும்பாலும் கையில் கொண்டுவந்து விடுவார். சிக்கனவாதி.

அந்த நேர்மைதான் பெருமாளை வளர்த்துவிட்டது. ஒரு மகன் முத்து- ஒரே மகள் ராணி. இரண்டும் தங்கமான பிள்ளைகள். எப்போது கடைக்கு வந்தாலும் சேவியரிடம் ஆசீர்வாதம் வாங்குவார்கள். கடையில் எதை எடுத்தாலும் அப்பாவிடம் கேட்காது எடுக்க மாட்டார்கள்.

இப்போது பிள்ளைகளும் வளர்ந்து பெரியவர்கள் ஆகிவிட்டார்கள். இருவருக்குமே திருமணம் முடிந்து அவர்களுக்குப் பிள்ளைகளும் பிறந்து விட்டார்கள். ராணிக்கு ஒரு மகள், முத்துவுக்கு ஒரு மகன். இரண்டு குடும்பத்தாரும் உறவுகளாயினர்.

பெருமாள் வியாபாரத்தில் கிடைத்த பணத்தில், இடைச்செவலில் ஒரு தென்னந்தோப்பும் கொஞ்சம் விளைநிலமும் வாங்கினார்.

அதிகத் தொலைவு சைக்கிள் மிதிக்க முடியாமல் பெருங்குடி விடுதிவாசலில் இருந்த பெட்டிக் கடையை மூடிவிட்டு, இடைச்செவலில் தன் வீட்டை ஒட்டி ஒரு பெட்டிக் கடை வைத்துக் கொண்டார். கடை, விவசாயம் என்று உழைப்பைச் சுருக்கிக் கொண்டவரை இறைவன் ஏனோ சடுதியில் அழைத்துக் கொண்டுவிட்டான்!

மேரியைப் பதினைந்து நாட்கள் கழித்துதான் மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு அனுப்பினார்கள். அதன் பிறகுதான் கேதம் கேட்க சேவியர் இடைச்செவலுக்கு வந்தார்.

பெருமாளின் பெட்டிக்கடை இப்போது முத்துவின் பொறுப்பில் இயங்கியது. இருந்த கொஞ்ச நேரத்தில் நிறையப் பேர் கடைக்குவந்து சிகரெட் வாங்கி அங்கேயே பற்றவைத்துச் செல்வதை சேவியர் கவனித்தார்.

``என்ன முத்து, உங்க அப்பா சிகரெட் விற்பனையே இல்லைனு கடையில் போர்டு எழுதி வச்சிருந்தார்.... நீ விற்கவே ஆரம்பிச்சிட்டியே?''- சேவியர் கேட்டேவிட்டார்.

``அப்பா பழைய பஞ்சாங்கமாவே இருந்து செத்துப் போய்ட்டாரு... அதுக்காக நாமளும் அப்படியே இருந்திட முடியுமாங்கய்யா?''-முத்து எதிர்க்கேள்வி கேட்டான்.

அவனுக்குப் பக்கத்தில் அவனது ஐந்துவயது மகன் பாலா ஸ்டூல் போட்டு உட்கார்ந்திருந்தான். அந்த நேரம் ஓர் இளைஞன் முத்துவிடம் சிகரெட் கேட்டு வாங்கி, அருகில் தொங்கிய கப்பானிக்கயிற்று முனை நெருப்பில் பற்றவைத்து ஸ்டைலாய் புகை விட்டான்.

அதற்குமேல் அங்கிருக்கப் பிடிக்காமல், ``சரி முத்து, நான் கிளம்புறேன்!'' என்று சேவியர் தன் ஸ்கூட்டியில் வீட்டுக்குக் கிளம்பி விட்டார்.

அவர் வந்ததையோ- போனதையோ முத்து பெரிது படுத்தவில்லை. வியாபாரத்தில் கவனமாயிருந்தான். அம்மாவிடமும் சேவியர் வருகையைச் சொல்லவில்லை. இந்த வியாபாரத்துக்கு அடிப்படைக் காரணமாயிருந்தவரே அவர்தான் என்பது முத்துவுக்குத் தெரிந்தும் கண்டு கொண்டானில்லை. முதலாளிப் பட்டம் அவனை அடியோடு மாற்றி விட்டிருந்தது.

அடுத்தநாள் மதியம் பாலாவுக்கு உணவை கேரியரில் எடுத்துக் கொண்டு அந்த ஆரம்பப் பள்ளிக்கு முத்துவே வந்தான். அவன் மனைவி வேறு வேலை இருப்பதாய்ச் சொல்லி இவனை அனுப்பினாள்.

தனக்குத்தான் படிப்பு மண்டையில் ஏறவில்லை- மகனையாவது நன்றாகப் படிக்கவைத்து அரசுவேலைக்கு அனுப்ப வேண்டுமென்கிற கனவு முத்துவுக்கு.

முத்து பள்ளிக்கு வந்த போது பிள்ளைகள் ஆங்காங்கே உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பாலாவைக் காணவில்லை. -``பாலா எங்கப்பா இருக்கான்?''-மற்ற பிள்ளைகளிடம் கேட்டான்.

``அவனும், சங்கரும் கேட்டுக்கு வெளியே போனானுவோ அங்கிள்.''என்றான் ஒருவன்.

`கேட்டுக்கு வெளியே அவனுக்கு என்ன வேலை?... அம்மாகாரி சாப்பாடு கொண்டு வருவான்னு அவனுக்குத் தெரியும்!'- நினைவுகளோடு முத்து வெளியே வந்து அங்கே நின்ற வேப்பமரத்து நிழலில் நின்றான். அப்போது மரத்துக்குப் பின்னால் இருந்து சிறுவர்கள் பேசுவது கேட்டது....

``முத்து, ஏதுடா உனக்கு முழுசா சிகரெட் பாக்கெட்டு?''

``எங்கப்பா கடையிலிருந்து அவருக்குத் தெரியாம எடுத்திட்டு வந்தேண்டா...!''

``எங்க மாமா பொழுதுக்கும் வாயில சிகரெட்டை வச்சுக்கிட்டுதான் ஒர்க்-ஷாப்புல வேலை பாப்பாரு... எனக்கும் இதைப் பற்றவைக்கணும்னு ரொம்பநாள் ஆசைடா!''

``இன்னிக்கு உன் ஆசை என் மூலமாத் தீரப்போகுதுடா.... முதல்ல காட்டமாத்தான் இருக்கும்... பல்லைக் கடிச்சுக்கிட்டுப் புகையை உள்ளே இழுத்திட்டீன்னா அவ்வளவு சுகமாயிருக்கும்!''-பாலாவுக்குப் பலநாள் அனுபவம் இருப்பது பேச்சில் தெரிந்தது.

சற்றைக்கெல்லாம் மரத்துக்குப் பின்னாலிருந்து சிகரெட் புகைவாடை வந்து காற்றில் பரவியது.

முத்துவுக்கு அங்கே நிற்கப் பிடிக்காமல், மகனிடம் கேரியரையும் கொடுக்காமல் மனம் நொந்து வீட்டுக்குக் கிளம்பினான்.இந்தச் சிறுவயதில் மகன் கெட்டுப்போகத் தான்தான் காரணம் என்பதும் அவனுக்குப் புரிந்தது. அப்பாவின் நினைவும்,சேவியர் கேள்வியும் மனதில் வந்தது. இனி புகையிலைப் பொருட்கள் விற்பதில்லை என்ற முடிவுக்கு வந்தான்.




# மகாராசனின் நிலத்தில் முளைத்த சொற்களும் மீள் உருவாக்கமும்.

**கவிஞர் ராணி கணேஷ்**

நிலத்தில் முளைத்த சொற்கள். நிலத்தில் பயிர்கள் தானே முளைக்கும். ஆனால் நிலத்திற்கென்றே சில சொற்களும் இருக்கத்தானே செய்கின்றன. அவை நிலம் சார்ந்த - உழவு சார்ந்த - உயிர் சார்ந்த சொற்கள். அப்படியானால் நிலத்தில் முளைத்த சொற்கள் யாவுமே நிலத்தை மையப்படுத்திதானே இருக்கும். ஆம் நிலம் சார்ந்த, மண்மணம் கமழும் கவிதைகள் தாம் இந்த ஐம்பத்தி ஐந்து கவிதைகளும். நிலத்தை இப்படியெல்லாம் உருவகப்படுத்தி கவிதை எழுத முடியுமா என்று ஆச்சர்யமாய் இருக்கிறது. உயிரை உணரும் தருணத்தில் வரும் மறு உயிர்த்தலை, மரித்துக் கொண்டிருக்கையில் திடீரென மீட்கப்படுவதை உணர்ந்தால்தான் அறியமுடியும். அப்படித்தான் இவர்தம் கவிதைகளை வாசித்து உணரவேண்டும். ஒவ்வொரு கவிதையையும் மீண்டும் மீண்டும் வாசிக்கத்தூண்டும் சொற்றொடர் கொண்டு தேர்ந்த சிற்பியின் கைப்பக்குவத்தில் வடித்துள்ளார். கருப்பம் கொண்ட பிள்ளைத்தாச்சியாய் உயிர்த்தலைச் சுமக்கின்றன நிலம் கோதிய மகாராசன் அய்யாவின் கவிதைகள்.

எழுதப்படாமலே போனது எனதூர்த் தலபுராணம் என்னும் சொற்களின் வேதனை நம்மையும் அசைக்கிறது. இப்படித்தான் எத்தனையோ கோவில்களும் சாமிகளும் நம்மைச் சுற்றிக் கவனிக்கப்படாமலும், களவு போய்க்கொண்டுமிருக்கின்றன. சாமி சப்பரம் ஏறி சுற்றி வரும்பொழுதாவது பார்க்கட்டும் தரிசாய்ப் போன நிலங்களையும், கண்ணீர் வறண்ட விவசாயியின் கண்களையும். முகமற்ற குறிகள் புணர்ந்து கிடந்த கருவறை என்பதைச் சிவன் கோவில் என்றே புரிந்து கொள்கிறேன். வளர்பிறையும் தேய்பிறையும் காலத்தில் கடப்பதை கருநாகம் சட்டை உரிப்பதில் அறியத்தருவதாய்க் கூறிச்செல்கிறார். பாம்புகள் சட்டை உரிக்கக் காலமுண்டா எனத் தெரியவில்லை. நாகமாணிக்கம் குறித்த பல்வேறு கதைகளைப் போல, பாம்பு உரித்த சட்டையை கண்ணால் காணும் வரை அதுவும் பொய்யாய் இருக்குமென்றே நினைத்திருந்தேன். தட்டான், பாம்பு, கெண்டை, நத்தை, தவளை என சிற்றுயிர்களோடு சேர்ந்தது தானே நிலம் சார்ந்த கிராம வாழ்க்கை. கவிதையின் உயிர்கள் எல்லாமே எனது பால்யத்தை ஞாபகப்படுத்துவதாய் இருந்தது.

'மண்மீட்டிய வேர்களின் இசை...' என்ன அழகான கற்பனை. மண்ணை நிலப்பெண்ணின் விரல்களாய் உருவகித்து, வீணையின் நரம்புகளென நீண்டு கிடக்கும் வேர்களை மீட்டுவதான கற்பனை இசை நம் செவிகளுக்குள்ளும் கேட்கத் துவங்குகிறது. 'நனைந்து பசப்படித்த நிலம்' இப்படியான சொல்லாடல்கள் தலை சாய்ந்து கிடக்கும் கதிர்களைப் போல பக்கங்கள் எங்கிலும் காணக்கிடைக்கின்றன. ஒன்றை ஒன்றாய் உருவகிப்பதும், அது பொருந்திப் போவதும், அதனை வாசகன் ஒவ்வொரு அர்த்தம் செய்து உணர்வதும், புதிய கோணத்தை யாரேனும் கண்டு கூறுவதும் கவிஞனுக்கு மகிழ்ச்சியான விஷயம் தானே.

மதுவைப்பற்றிய கவிதை மதுவின் பாவப்பட்ட முகத்தையும் கலங்கமற்ற கண்களையும் மீள் உருவாக்கம் செய்கிறது. மது, பாலசந்திரன் என சமூகத்தில் நடந்த கொடுமைகளைக் கவிதைகளின் வாயிலாகத் தட்டிக்கேட்கிறார். நல்ல கவிஞர் தன் சுக துக்கங்களை, தன் மன உணர்வுகளைக் கவிதைகளில் தான் பெரும்பாலும் வடிப்பார். அப்படி எழுதப்படும் எல்லாக் கவிதைகளையும் நாம் வாசிப்புக்கு வைப்பதில்லை. சிலநேரம் மனம்முண்டி எழுதியவற்றை முகநூலில் பகிரவோ, நண்பர்களுக்கு அனுப்பவோ செய்வோம். கவிஞரானவர் உணர்ச்சிகள் நிறைந்தவர். உடனே எதிர்வினையாற்றக் கூடியவர். அப்படித்தான் கவிஞர்.மகாராசனும் சமூகத்தில் நடந்த அக்கிரமங்களைக் கேள்வியெழுப்பிச் செல்கிறார். எல்லாமும் நிலம் சார்ந்தே திடமாய்ப் பரந்து நிற்கிறது.

நேற்றுதான் "செவ்வாய்க்கிழமை மதியத் தூக்கம்" என்ற திரு.சுகுமாரனது மொழியாக்கக் கதையை, விமலாதித்த மாமல்லன் அய்யா எழுதிய புனைவு என்னும் புதிர்ப் புத்தகத்தில் வாசித்தேன். அதிலும் அப்படித்தான், திருடன் என நம்பி சுடப்பட்ட மகனின் கல்லறைக்கு வரும் தாய் தன் மகன் குற்றவாளி இல்லை எனத் தீர்க்கமாய்க் கூறுவாள். அப்படியான சூழ்நிலையில் யாரோ செய்கின்ற செயலுக்கான / தவறுக்கான குற்றவுணர்ச்சி நம்மையும் பற்றிக்கொள்கிறது. நாமும் அதே மனித இனம் தானே. சமூகப்பொறுப்பு கொண்ட யாருக்குமே இந்த எண்ணம் வரத்தான் செய்யும். செய்யாத தவறுக்கு, தவறான புரிதலில் தண்டிக்கப்படும் ஆத்மாக்களை கடவுள் வேற்றுலகத்தில் என்ன சொல்லி வரவேற்பார்? ஒருவேளை இத்தனை மோசமான மனிதருக்கிடையே நீ இருக்கவேண்டாம் என்று கூறுவாரோ என்னவோ.

ஐந்தாவது கவிதையை, சுய ஆற்றுப்படுத்துதலைக் கவிதையின் வாயிலாகக் கண்டுக்கொள்ளும் தனியனின் சொற்களாய்ப் பார்க்கிறேன். மனிதர்களும் சிலநேரங்களில் நிலத்தில் துள்ளி விழுந்த மீனைப்போல மாண்டு போகின்றனர். மீன் நினைத்திருக்கக் கூடும் மறுபக்கம் பெருங்குளமொன்று இருக்கிறதென்று அக்கரைப்பச்சையென நம்பும் மனிதனைப்போல.

மலைத்தாய்ச்சி, வனத்தாள், வனத்தாய்ச்சி, மரத்தாய்ச்சி, நீர்முலைத்தாய்ச்சி, நீர்ப்பால்தாய்ச்சி, கடல்தாய்ச்சி, மலையாள் இப்படியான வார்த்தைகளை இன்றுதான் வாசிக்கின்றேன். பிள்ளைத்தாய்ச்சி போல வனத்தாய்ச்சியும், மலைத்தாய்ச்சியும் மரங்களோடு, மிருகங்களோடும் மனிதர்களையும் வரித்துக் கொள்கிறார்கள். சமயத்தில் கொல்கிறார்கள். அதைத்தான் இயற்கை அளிக்கும் தண்டனையாகக் கூறுகிறார் கவிஞர். காலத்தில் கரைதலும் வாழ்வின் நிமித்தமானது.

நல்லதொரு சொல்லாடல். அப்படித்தான் வாழ்க்கை தன் பயணத்தைத் தொடர்கிறது எல்லோருக்குமாய்.

விவசாயி நிலத்தில் இறங்க மறுத்தால் வெண்பாதங்களின் கைகள் தொழுதாலே பற்றும் என்று சாடுவதுடன், உழைப்பாளியின் வேதனையைக் கொப்பளங்களின் வழியே அறியத் தருகிறார். கவிதையின் மென்சோகத்தைத் தாண்டி, நினைவின் இடுக்கு, அடை காக்கும் மவுனம், நினைவுக் காலடி, முளைத்த கனவுகள் இப்படியான வார்த்தை அடுக்குகளில் லயிக்கின்றது மனம்.

பதினேழாவது கவிதை அத்தனை அழகு. கூடாக்காதலின் நினைவின் பெட்டகமென விரியும் ஒற்றையடிப்பாதையில் ஒட்டிக்கொள்ளும் நாயுருவி முள் குத்தி வலிப்பதில்லை. நெருஞ்சி முள்ளை மட்டுமே பார்த்துப் பழகிய கண்களுக்கு காதலின் நினைவுகள் நெருஞ்சிப் பூவைப் போல அழகாய் தெரிகிறது.

வாழ்விழந்த விவசாயிகளின் வலியையும், வேதனையையும், கண்ணீர்க்கதையையும் நிலத்தில் முளைத்த சொற்களைக்கொண்டு தூவிச்செல்கிறார் ஏர் மகாராசன் அய்யா. மகிழ்ச்சியும், செல்வமும், செழிப்புமாக அவை தளைக்கட்டும் அவர்தம் வாழ்வில் என்ற வேண்டுதலைத் தவிர வேறு என்ன செய்யமுடியும் என்ற சிந்தனையை விதைக்கிறது அவரது சொற்கள். நிலத்தாளின் தொப்புள் உறவை எப்படி முறிக்க முடியும்? உணவளிக்கும் நிலமுடையான் கையேந்தும் அவலம் இனியாவது நிகழாமல் இருக்க வேண்டும். மறைமுகமாய்ச் சொன்னாலும் மறைக்கமுடியாத சரித்திரத்தின் மிச்சமென எஞ்சி நிற்கிறது விதைப்பிற்குக் காத்திருக்கும் நிலம்.

புயலைக்குறித்த கவிதை வயநாடு நிலச்சரிவையும் அம்மக்களின் நிலையையும் ஒத்திருப்பது சோர்வை அளிக்கிறது. இயற்கை அன்னையின் கோபத்துக்கு இரையாகும் பிஞ்சுகளுக்கு என்ன சொல்லி வழியனுப்புவோம்? சிலநேரம் மற்றவர் துன்பத்தை உணர்த்த ஒரு துன்பத்தைத் தருகிறாளோ என்று கவிதையின் வாயிலாக எண்ண வைக்கிறார். மனிதனால் வீடும் கூடும் இழந்தவர்களின் வலியை இயற்கை நமக்கு எப்பொழுதாவது உணர்த்திச்செல்கிறது. உணர்தல் முக்கியம். நாடற்றவர்களின் வலியை வீடற்றவர்கள் உணரக்கூடும் தானே! அகதிகளாய் வாழும் மக்களின் அவலநிலையை அவர்தம் வாழ்க்கையை கவிதைகளின் வரிகளில் பதிந்திருக்கிறார். சொந்த நாட்டில் இருந்து விரட்டப்படுவதும், இனப்படுகொலையும் இன்றும் ஏதோ ஒரு இடத்தில் நடந்து கொண்டே தான் இருக்கிறது. அண்டைய நாடுகளில் நடப்பதை கண்பொத்தி கடந்து போய்விடலாம், வெகுநாள் வேண்டியிராது அப்படி ஒரு துன்பத்தை எதிர்கொள்ள.

இந்திரர் அமிழ்தமே தான் இந்த மழை... ஒவ்வொன்றுக்கும் ஒரு வாசம் இருக்கிறது இல்லையா? நெற்பயிரோ, காய்ந்த ஓலையோ, தான்தோன்றிப் புற்களோ அவற்றிக்கான மணம், நெடுநாள் ஊடல் என்று குறிப்பிட்டு கார்காலமழையை, மழைதரும் மண்வாசனையை எல்லா வரிகளிலும் புகுத்தியிருக்கிறார். குளுமையை சொற்களில் பரப்பி ஜில்லிட வைக்க நிலத்தில் முளைத்திருந்தால் தானே முடியும்.

இருபத்தி ஏழாவது கவிதை கிராமங்களில் இன்றும் எங்காவது நடமாடிக்கொண்டிருக்கும் குடுகுடுப்பைக்காரனையும், கிராமத்தில் வாழும் குடும்பச்சியையும் குறித்தது, பின் நிலத்தையும். எல்லாக் கவிதைகளிலும் நிலத்தின் தொடுகை இல்லாமல் இல்லை. நிலம் சார்ந்தே எல்லாமிருக்கிறது. தரிசாய்ப் போன நிலத்தினை எண்ணி மாண்டு மண்ணுக்குள் போனவளும் கண்ணீர் வடிப்பாள் என்கிறார். விதைத்த நிலத்தை வெற்றிடமாய்ப் பார்க்கும் கொடுமை யாருக்கும் வரவேண்டாம். மறந்துபோன குடுகுடுப்பைக்காரனை நினைவுபடுத்துகிறது இந்தக்கவிதை. பெரிய மீசையுடன் முண்டாசு கட்டிக்கொண்டு வீட்டுவாசலுக்கு வந்து குறி சொல்வான். நல்லகாலம் பொறக்குது என்று சக்கம்மா வாக்கு சொல்பவனின் சொற்களை உள்ளிருந்தே கேட்டுக்கொண்டிருப்பார்கள். யாரும் அவன் முன்னர் வருவதில்லை. பெரும்பாலும் என்ன சொல்வானோ என்ற பயத்தோடே தான் கேட்பார்கள். மனோரீதியாக அவன் சொல்வது மனதைப் பாதிக்கும் என்றே நினைக்கின்றேன். ஒருமுறை பக்கத்து வீட்டில் முன் நின்று அங்கு ஒரு உயிர் பிரியப்போவதாகக் குறி சொல்லிச் சென்றான் ராப்பாடி. எதிர்வீட்டுப்பெண்ணும் அதைக் கேட்டு என்ன நடக்குமோ என்று தன் கவலையைப் பகிர்ந்தாள். மூன்றாம் நாளில் அந்த வீட்டில் முடியாமல் கிடந்த பாட்டி மரித்துப் போயிருந்தாள். இப்படியான சம்பவங்கள் போதுமாயிருந்தது அவன் மீதான பயத்தை நீட்டிக்க. ராப்பாடியும் குடுகுடுப்பைக்காரனும் ஒன்றில்லை என்றே நினைக்கின்றேன். ராப்பாடி சுடுகாட்டில் உருண்டு சாம்பலைப் பூசிக்கொண்டு அலைபவன். நடுராத்திரியில் தெருக்களில் அலைந்து பாடிவிட்டு , வாக்கு சொல்பவன். மண்டையோடுகளை மாலையாக்கி அணிபவன். காலையில் அரிசி வாங்க வருவான். மேலும் மாட்டோடு வருபவனையும் குடுகுடுப்பைக்காரன் என்றே சொல்வோம். பூம்பூம் மாட்டுக்காரன் குறி சொல்வதில்லை. நல்ல வார்த்தைகள் கூறி பாடல்கள் பாடி நேர்மறை எண்ணங்களை விதைக்கின்றான். மாடும் அவன் சொல்லும் நல்வாக்குக்குத் தலையை ஆட்டி ஆமோதிக்கும். இந்தக் கவிதை மறந்து போன ராப்பாடியை ஞாபகப்படுத்துவதாய் இருக்கிறது.

இருபத்தி எட்டாவது கவிதையில், வேனிற்காலமும் அம்மை நோயுமென நிலத்தின் வெம்மை சார்ந்த நோயினை வேம்பு மரத்தாய்ச்சி எப்படித் தீர்க்கிறாள் என்று சொல்லும் போதே பயந்து முடங்கிக் கிடந்த மனித இனமென நவீன வியாதியான ஒட்டுவாரொட்டி கொரோனாவை ஞாபகப்படுத்தி முடிக்கிறார்.

காதல் காமம் கொண்டும் கவிதை எழுதத் தவறவில்லை மகாராசன் அய்யா. காமமெனும் பெருந்தீயை அடக்கிக் காத்திருக்கும் பெண்ணைப் போல நிலமகள் ஏர் பதியக் காத்திருக்கிறாள் என்று சித்தரிக்கிறார். பசி, தாகம் போன்ற உணர்வு தானே காமமும். அதனை நிலத்திற்குக் கடத்தி, உழப்படாத நிலத்தின் தாகத்தை இறுதி வரிகளில் புரியத் தருகிறார். கைசேராமல் போகும் பொருந்தாக்காதலின் நினைவுகளைப் பெருந்திணைச் சொற்கள் மழையில் கரைவதாய் உருவகித்துக் கூறுகிறார்.

"நீ உதிர்த்துவிட்டுப் போன
மென்னகைப் பூக்களை
காயம்படாமல் கூட்டியள்ளி
மனச்சுருக்குப் பையில்
முடிந்து வைத்திருப்பதை
தெரிந்தும் வைத்திருந்தாய் "

மறைகாலத்தின் களவுப்பூ இந்த கவிதையில் வரும் இந்த வரிகள் தான் எத்தனை அழகு. இருவர் மட்டுமே அறிந்த உணர்ச்சி. அது ஈர்ப்பாகவும் இருக்கலாம், காதலாகவும் இருக்கலாம், ஆசையாகவும் இருக்கலாம். கூடாக்காதலின் வலியைக் கூட இதமான உணர்வாக வெளிப்படுத்தியிருக்கிறார். எத்தனையோ முறைப்பெண்கள் ஆசைப்பட்ட கல்யாணம் கைசேராமல் காணும் இடத்தில் கிண்டல் பேசியும், கண்களால் நலம் விசாரித்தும் மனதை ஆற்றிக் கொள்கிறார்கள். தனக்கு பேசிய மாப்பிள்ளை என்ற பெருமூச்சில் ஒளிந்திருக்கும், கொட்டிவிடமுடியாத மீள்காதல். இந்தக் களவுப் பூ வாடுவதுமில்லை, கசங்குவதுமில்லை. அப்படியே பூத்த தினத்தின் மணத்தோடும், குணத்தோடும் பூஞ்சிரிப்போடு வளைய வருகிறது.

கால்த்தடம் மறைந்த ஒற்றையடிப்பாதையின் வழி மறைந்தாலும் பாதை அங்கேயே தான் இருக்கும் நம் மூதாதையர்களின் கால் படிந்த மண்ணோடு. நாம் செய்யவேண்டியதெல்லாம் அடர்ந்த செடிகளை அகற்றிப் பாதையை கண்டுகொள்வது மட்டுமே... மனப்பறவை உதிர்க்கும் இறகுகளென நினைவுகள் உதிரத்துவங்கும் காலத்திலும் வாழ்தலின் நிமித்தமானது வேடிக்கை மட்டுமே பார்க்க வைக்கிறது. விளைநிலங்களைச் கொல்லும் அரசியல்வாதிகளையும் அவர்தம் உறவுகளையும் சாடுகிறார் கவிஞர்.

மலையாளின் குருதி கலந்த ஆற்றின் ஈரத்தில் கருவுரும் வயல் என்ற ஒப்பீடு எத்தனை அர்த்தகரமானது. தேன்சிட்டின் வாயிலாக வாழ்தலின் பக்குவத்தைச் சொல்லும் கவிஞர், வேர்களுக்கும் இலைகளுக்குமான காதலின் அத்தாட்சியாய் மலர்களை வர்ணிக்கிறார். இறகின் கனமும் பூவின் மணமும் அரும்பிடும் வாழ்க்கை இனிதுதான். கணமற்ற இறகுகள் பறப்பதற்கு ஏதுவானது. தன் வாழ்நாள் எல்லாம் வாசம் மட்டுமே பரப்பி, தேன் பகிர்ந்து, அழகாய் அரும்பிச் சிரிக்கும் வாழ்க்கை யாருக்குத்தான் பிடிக்காது?!

கவிஞர் ஏர் மகாராசனின் நிலத்தில் முளைத்த சொற்கள் களவு போன காணியை, இழவு காணும் குடும்பனை, வற்றிப் போன நதியினை, தரிசாய்க் கிடக்கும் பூமியினை, வறுமை, பசி, துக்கம், கண்ணீர் அத்தனையும் சட்டம் போட்டுக் காண்பித்தாலும் பூமியின் காதலை, காமத்தை, பேறுகாலத்தை, செழிப்பை, அழகை, அத்தியாவசத்தையும் சொல்லிடத் தவறவில்லை. சொந்தமண்ணைத் துறக்கும் அவலம் இனி யாருக்கும் வராது இருக்கட்டும்.

துரோகத்தின் நிழல் எந்த பொழுதிலும் படியாது இருக்கட்டும்.

ஒரு கவிதையில் வரும் வரிகளான, நினைக்க நீயில்லை; தலைதட்டவும் ஆத்தாளுமில்லை. இதில் தலைதட்ட ஆத்தாளுமில்லை என்றிருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும் என்று எண்ணினேன். மொழிப்பெயர்ப்பு செய்ய வேண்டிய முக்கிய கவிதைகள்தாம் இந்நூல். கொஞ்சம் கடினமான பணியாக இருக்கலாம். கவிஞர் கண்டுபிடித்த புதிய அம்மைகளை எந்தப் பெயர் கொண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பார்கள் என்று அறிய ஆவலாய் இருக்கிறேன். கட்டுரை, ஆய்வு என்று களமாடிக்கொண்டிருக்கும் ஏர் மகாராசன் அய்யா கவிஞராகவும் மிளிர்கிறார். இன்னும் இன்னும் கவிதைகள் இயற்றுங்கள். மறைந்து போன சொற்களை மீள் உருவாக்கம் செய்யுங்கள். புதிய சொற்களை உங்கள் அறிவு நிலத்தில் இருந்து அறுவடை செய்யவும், அந்நெல்மணிகளை எல்லோரும் உண்டு களிக்கவும் புதிதாய் எழுதிக்கொண்டே இருங்கள். கவிதைநிலம் மிகச்செழிப்பாக இருக்கிறது. வார்த்தைத் தேர்வுகள் அழகு.

வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். நன்றி!

❍ ❍ ❍

நிலத்தில் முளைத்த சொற்கள், மகாராசன், முதல் பதிப்பு,மே2024, யாப்பு வெளியீடு, சென்னை, பக்கங்கள் - 112, விலை: ரூ100/- புத்தகம் தேவைக்குப் பேச : 9080514506

❍ ❍ ❍

கட்டுரையாளர் : கவிஞர் ராணி கணேஷ், துணை ஆசிரியர், தமிழ்வெளி இதழ். பப்புவா நியு கினியா.

பப்புவா நியு கினி இந்திய சங்கத்தின் துணைத்தலைவர். பப்புவா நியு கினி தமிழ்ச்சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவர். கதை, கவிதை, புத்தக மற்றும் திரைப்பட விமர்சனங்களை எழுதி வருபவர்.

# “வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறையான ஒரு துறவியின் துரோகம்”

**சை.கிங்ஸ்லி கோமஸ்**



ஆண்ட்ரியா அந்தோணிசாமி என்னும் அருட்சகோதரியான நான் இந்தியாவில் இருந்து நாட்டுக்கு நான்கு வருடங்கள் கழித்து எனது சேவைகளின் திருப்தியுடன் தாய் தந்தையரை பார்க்க கொழும்பு வந்து அங்கிருந்து மலையகம் நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

கொழும்பில் இருந்து அட்டன் நோக்கி வந்து ஹட்டனிலிருந்து பொகவந்தலாவை சென்று அங்கிருந்து பெத்துராசி தோட்டம் போவது என்பது மிக கடினமான பிரயாணம் . இலங்கையில் போக்குவரத்து துறையில் துறவிகளுக்கு என்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அவை பௌத்த துறவிகளுக்கு மாத்திரமே வழங்கப்படும் ஏனைய துறவிகளுக்கு யாரும் கொடுப்பதில்லை ஆனால் நான் அன்னை தெரேசாவின் துறவற குடும்பம் காரணமாக எங்கள் ஆடைக்கு ஒரு சிறப்பு மதிப்பு இருக்கின்றது எனவே எனக்கு மதகுருமாறுக்கான ஆசனம் கிடைத்தது.

கொழும்பிலிருந்து அட்டன் நோக்கி வருவது மிகவும் கஷ்டமான பயணமாகும்.

நான் சற்று கண் அயர்ந்து ஜன்னலில் சாய்ந்து இருந்தபோது எனது அருகில் யாரோ அமர்வது போல் உணர்ந்தேன் சற்று தள்ளி அவருக்கு இடம் கொடுத்தேன் சற்று தடிப்பமான பெண்மணி முதுகில் பெரிய பயணப்பை கையில் ஒரு பையுடன் வந்து அமர்ந்து தன்னை ஆசுவாசப்படுத்துவதற்காக கைகுட்டையால் முகத்தை துடைத்துவிட்டு காற்றை விசிறி கொண்டு இருந்தாள் மென்மையான வாசனைத் திரவம் அவர் மீது ஏதோ ஈர்ப்பை ஏற்படுத்தியது. நான் அவளைப் பார்த்தேன் தமிழ் பெண் என்பதற்கு அடையாளமாக நெற்றியில் சிறிய ஸ்டிக்கர் பொட்டும் உச்சியில் குங்குமப்பொட்டும் வைத்திருந்தாள் அழகான கண்கள் அந்த கண்களை எங்கோ பார்த்த ஞாபகங்கள். பின்பு என்னை பார்த்து'' காட் பிளஸ் யூ சிஸ்டர்'' என்றார் நானும் அவரது முகத்தை பார்த்து "காட் பிளஸ் யூ "என்றேன் பின்பு என்னை உற்றுப் பார்த்து "சான்றியா'' என்று ஆச்சரியத்துடன் அழைத்தார் நானும் சற்று சுதாகரித்து "மேரி வின்சி இன்ப மலர் "என்று கூறி அவரின் கைகளை இறுக்கப்பற்றினேன் அவரும் எனது கரங்களை அவரது இரண்டு கரங்களாலும் பற்றி அவரது அன்பை வெளி காட்டினார் பின்பு கூறினார் "இப்பொழுது எனது பெயர் மேரி வின்சி மிலன் பெரேரா கணவர் சிங்களம் தேயிலை தோட்டம் ஒன்றில் முகாமையாளராக இருக்கின்றார் என்றார் எங்கிருந்து வருகின்றீர்கள் சிஸ்டர்'' என்றும் வினவினார் நான் எனது பயணத்தை பற்றி கூறி அவரைப் பற்றி விசாரித்தேன் மூன்று பிள்ளைகள் தனக்கு இருப்பதாகவும் மூத்த மகன் துபாயில் ஐடி கம்பெனியில் வேலை என்றும் இரண்டாவது மகன் ஐ டி கம்பெனியில் இலங்கையில் வேலை என்றும் மூன்றாவது மகள் என்றும் கூறினார் அவர் பேசும் பொழுது சற்று கண்கள் கலங்கி இருந்தது பின்பு தொலைபேசியில் அவர்களின் குடும்ப படத்தை எடுத்துக் காட்டினார் ஸ்மார்ட் ஆன கணவன் தோட்டத்துறைமார்க்கே உரித்தான மிடுக்கோடு இரண்டு மகன் மாறும் கட்டிளம் காளைகளாகவும் மகள் குட்டி பெண்ணாகவும் இருந்தார்கள் "அழகான குடும்பம் வாழ்த்துக்கள் என்றேன்'' நன்றி சிஸ்டர் என்று கூறினார் பின்பு "எங்கு போய் வாரிங்க தனியா'' என்றேன் நீர் கொழும்பு போய் வருகிறேன் ஒரு வேலையாக என்றார் பின்பு பாடசாலை கால நண்பர்கள் பற்றியும் இந்தியா பற்றியும் பேசி வந்தோம் அட்டன் நகரம் வந்ததும் வின்சியை அழைத்துச் செல்ல வாகனம் வந்திருந்தது விடைபெறும் பொழுது கூறினார் உங்களை சந்தித்தது பெரும் மகிழ்ச்சி உங்களோடு பயணித்தது சுகமாகவும் எனது கவலைகளை மறந்து பல மணித்தியாலங்கள் ஆறுதலாக பயணித்த அனுபவமும் மகிழ்வாக இருந்தது என்றார் .பின்பு என்னை கட்டி அணைத்து விடைபெறும் போது கூறினார் எங்கள் வீட்டிற்கு கட்டாயமாக வாங்களேன் நான் வாகனம் அனுப்புகிறேன் என்று கூறி தொலைபேசி இலக்கம் பெற்றுக் கொண்டார் இருவரும் விடை பெற்றோம்.

பெத்துராசி தோட்டமும் சொந்தங்களும் என்னை அன்போடு வரவேற்றனர் மலையக மக்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் இல்லாவிட்டாலும் கல்வியில் சற்று மாற்றமும் நாகரிகத்தில் சற்று மாற்றமும் கண்டேன் ஆனால் அரசியல் ரீதியாக பண்பாட்டு ரீதியாக அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளிலும் எதிர்பார்க்கும் அளவிற்கு மாற்றங்கள் இல்லை என்றே புரிந்தது .

தாய் தந்தையரோடு மூன்று நாட்கள் கழிந்தது நான்காவது நாள் தொலைபேசி அழைப்பொன்று வந்தது "சிஸ்டர் நான் மேரி வின்சி பேசுகிறேன் வாகனம் அனுப்புகிறேன் வீட்டிற்கு பகல் உணவுக்கு வாங்க சிஸ்டர் இன்று முழு நாளும் என்னோடு இருக்க வேண்டும்'' என்றார் வின்சி .

இதனை நான் எதிர்பார்க்கவில்லை இருந்தபோதும் வின்சியை சந்திக்க வேண்டும் அவரது கண்களில் நான் கண்ட கவலைகளின் பின்னால் பல சோகங்களின் சாயலை கண்டேன் எனவே வருகிறேன் என்று பதில் கூறினேன் குறித்த நேரத்தில் வாகனம் வந்தது ஏறினேன் சாரதி அன்போடு அழைத்து சென்றார் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த சில பொருட்களை வின்சிக்காக எடுத்து சென்றேன்.

கூரை மீது ஏற்றப்பட்ட மணல் மூட்டைகளை கிரீடமாகக் கொண்ட லயன்வீடுகளும், குப்பையும், சுத்தம் செய்யப்படாத தேயிலை தோட்டங்களும் , சிற்சில இந்திய வீடமைப்பு திட்டங்களும் நம்பிக்கை இழந்து நடை பிணங்களாக நடந்து திரியும் பல முதியவர்களும் பாடசாலை சென்று கொண்டிருந்த மாணவர்களும், ஆசிரியர்களும் எதிர் காலம் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தியும் ஏற்படுத்தாமலும் எனது மனதுக்குள் பல கதைகள் சுற்றி வந்தன.

வாகனம் தோட்டத்து குடியிருப்புக்களைத்தாண்டி முகாமையாளரின் பங்களா கேட்டுக்குள் புகுந்தது.

அந்த இடம் அந்த தோட்டத்தின் சொர்க்கமோ என்று யோசிக்க வைத்தது பழ முதிர்சோலைகளும் கொய்யா தோடை என்று பழங்களும் பூக்களும் குளிர்ச்சியான சூழலும் புட்தரைகளும் என்று அழகாக இருந்தது.

தோட்டக்காரர் பூக்கண்டுகளுக்கு நீர் பாய்ச்சினார் எனது தந்தையாரும் பங்களா தோட்டக்காரர் தான் பெத்துராசி தோட்ட சின்னதுரை பங்களாவில் வேலை செய்தவர்.

வறட்சி காலம் கீழே தோட்டத்துப் பெண்கள் தண்ணீர் இல்லாமல் அதிக தூரம் சென்று தண்ணீர் சுமந்து வந்தது கண்டேன் பங்களாவில் புட்தரைகளுக்கு தண்ணீர் போடப்படுவதையும் கண்டேன் வித்தியாசம் வித்தியாசம் இன்னும் அதே கட்டமைப்பு .

வின்சி ஓடி வந்து கட்டி அணைத்து என்னை அழைத்துச் சென்றார் எனக்காக பலவகையான உணவுகளும் சிற்றுண்டிகளும் கேக் வகைகளும் தயார் செய்து வைத்திருந்தார் ஒரு பழச்சாற்றையும் சொக்லட் கேக் துண்டையும் மட்டும் எடுத்துக்கொண்டேன்.

நலம் விசாரித்து பேசத் தொடங்கினோம் எங்கே உங்கள் மகன் மகள் என்று வினவினேன் கணவர் ஆபீசில் இருக்கின்றார் பகல் உணவின் போது சந்திக்கலாம் என்றும் மகன் கொழும்பில் என்றும் கூறிவிட்டு மகள் பற்றி எதுவும் கூறாமல் கண்கலங்கி நின்றால் என்ன நடந்தது என்று அவரைக் கட்டி அணைத்து என் மார்போடு அணைத்துக் கொண்டேன் விம்மி விம்மி அழத் தொடங்கினார் பின்பு தண்ணீர் அருந்திவிட்டு வாங்க சிஸ்டர் வெளியில் தோட்டத்தில் போய் உட்கார்ந்து கதைப்போம் என்றார் சரி என்று இருவரும் தோட்டத்தில் சென்று சிமெண்டு இருக்கையில் அமர்ந்தோம் பின்பு எனது கையை எடுத்து அவரது மடியில் வைத்துக் கொண்டார் எனது கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டார் பின்பு கூறினார் எனது கணவர் மிக நல்லவர் தொழில் தொழில் என்று இருப்பார் சற்று அதிகமாக மது அருந்துவார் நான் எனது பிள்ளைகளுடன் கண்டியில் தான் இருந்தேன் பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்தேன் மூத்த மகன் பட்டதாரி இளைய மகன் படித்துக் கொண்டிருக்கின்றார் அடுத்த வருடம் பட்டப்படிப்பை முடித்து விடுவார் மகள் மகள் ….. என்று மீண்டும் கண்ணீர் விடத் துவங்கினார். அவரை எனது தோள்களில் சாய்த்து கொண்டேன்.

சற்று நேரத்தில் கண்களை துடைத்துக்கொண்டு பேசத் துவங்கினார்'' சிஸ்டர் அன்று உங்களை பஸ்ஸில் சந்தித்தேன் நீர் கொழும்பு போய் வந்தேன் ஒரு நம்பிக்கை துரோகி பற்றி புகார் செய்ய சென்றேன்'' என்றார் நான் எதுவும் பேசவில்லை அவரே கதையை துவங்கினார் குறித்த கத்தோலிக்க குருக்களின் சபையொன்றின் பெயரைக் கூறி அந்த சபையின் பணிப்பாளரை பார்த்து குறித்த பாதிரியார் ஒருவன் எனது குடும்பத்துடன் விளையாடிவிட்டான் என்று புகார் செய்துவிட்டு வந்தேன் என்றார் கத்தோலிக்க சமய துறவியான என்னிடம் மற்றுமொரு துறவியைப் பற்றி புகார் செய்கின்றார் இருந்தும் கேட்போம் என்னிடம் பேசி அவரது மன சுமைகளை தீர்த்துக் கொள்ளட்டும் என்று அவரது கண்களை பார்த்தேன் “சிஸ்டர் கண்டியில் ஒரு கன்னியர் மடத்தில் அவரை சந்தித்தோம் அவரது காலில் நகம் உடைந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது எனது வீடு பக்கத்தில் ஓடி சென்று முதல் உதவி பெட்டி எடுத்து வந்து வணக்கத்திற்குரிய தந்தையின் கால் நகத்தை வெட்டி சுத்தம் செய்து மருந்திட்டேன் அவர் என்னை அன்போடு கட்டி அணைத்து நன்றி செலுத்தினார் அவர் வாழ்க்கையில் என்னைப் போன்ற அன்பானவளை சந்தித்ததே இல்லை என்றார் அதன் பின் எங்கள் குடும்பத்தோடு அவர் நெருங்கி பழக ஆரம்பித்தார் என்னை அன்பாக நலம் விசாரித்தார் எனக்கு சுகயினம் என்றால் அவரது வாகனத்தில் வைத்தியசாலைக்கு அழைத்து செல்வார். தமிழ் மொழி கற்பதற்காக எனது வீட்டிற்கு வர துவங்கினார். எங்கள் குடும்பத்தின் எல்லா விடயங்களிலும் அக்கறையோடு இருந்தார் கொரோனா காலத்தில் எங்களை தனியாக இருக்க வேண்டாம் என்று அவர் பொறுப்பாக இருந்து சமூக சேவை நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றார் எங்களை உபசரித்தார், எங்கள் குடும்பத்தின் ஒருவராக வீட்டுக்கு பெய்ன்ட் அடிக்கும் போது அவரும் சேர்ந்து உதவினார், அவரது அன்பிலும் அழகிலும் நான் கட்டுண்டேன். எனது நல்ல நண்பர்களை எனது உற்றார் உறவினர்களை அந்த வணக்கத்திற்குரிய மத குருவானவருக்காக துச்சமாக மதித்து தூக்கி எறிந்தேன் யாருடனும் எனது தொடர்புகளை நான் வைத்துக் கொள்ளவில்லை எனக்கு எல்லாமே அந்த பாதிரியாராகத்தான் இருந்தார் என்று கூறி மௌனமாக இருந்தார் வின்சி. அவர் மீது எனக்கு ஒரு ஈர்ப்பு அது பக்தி கலந்த மரியாதை அத்தோடு இனம் புரியாத அன்பு அதனை காதலா பக்தியா என்று என்னால் இனம் காண முடியவில்லை எனது மகள் அவரை அப்பா அப்பா என்று தான் அழைத்தார் அவர் அதற்கு எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்கவில்லை நானும் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்க வில்லை. அந்த நாட்களில் எனது ஹஸ்பண்டை கூட கூட நான் பார்க்க விரும்பவில்லை ஏனென்றால் இவர் மதுவுக்கு அடிமையாக இருந்தார் ஹஸ்பண்ட் பற்றி கூறிய பொழுதெல்லாம் அந்த பாதிரியார் இந்த குடும்ப உறவை முறித்துக் கொள்வது தான் நல்லது என்று எங்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

மிலன் பெரேரா வாகிய எனது கணவர் நான் வேலை செய்த வங்கியில் என்னைக் கண்டு காதலித்து திருமணம் செய்து கொண்டார் .அவரது குடும்பத்தினர் தமிழ் பெண்ணான என்னை ஏற்க மறுத்தனர் என்னை அவர்கள் அவர்களது குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை நான் தனிமைப்படுத்தப்பட்டேன். எனது கணவர் என்னை விட்டு தூர செல்ல துவங்கினார் மதுவுக்கு அடிமையாகி பிளான்ட்ரஸ் கிளப்பில் அதிகமான நேரத்தை செலவழித்தார் சில காலங்களின் பின் எனது சுகையினும் காரணமாக மிலன் என்னை விட்டு அதிக அதிகமாக தூரப்போக துவங்கினார் நான் தமிழ் பெண் என்ற காரணத்தினால் அவரது குடும்பத்தாரும் என்னை வெறுக்க துவங்கினர் நான் தற்கொலை செய்ய தீர்மானித்து பல முறை நஞ்சு அருந்தி நேன். ஆனால் அந்த வணக்கத்திற்குரியவன் எங்கள் மீது காட்டிய அன்பும் பரிவும் என்னை தளர்ச்சி அடைய வைத்தது நான் அவனில் மயங்கினேன் எனது வீட்டில் அவனுக்கு பூரண சுதந்திரம் கொடுத்தேன்

எனது மகளை அவனது பாதுகாப்பில் விட்டு நான் சுதந்திரம் அடைய நினைத்தேன் கடைசியாக எனது மகள் எனது மகள் என்று திரும்பி திரும்பி அழைத்து வாங்கினார். அந்த நேரம் பார்த்து வின்சியின் கணவர் வாகனத்தில் வந்திரங்கினார் என்னை கண்டதும் கையை கோப்பி வணக்கம் கூறினார் பின்பு ஆங்கிலத்தில் "நீங்கள் பேசிக் கொண்டிருங்கள் நான் அவசரமாக காரியாலயத்திற்கு போக வேண்டியுள்ளது உணவருந்தி விட்டுப் போகிறேன்" என்றார் நானும் தலையாட்டி விடை கொடுத்தேன் வின்சியை உற்றுப் பார்த்த மிலன் "அப்பு அப்பு "என்று சத்தமாக அழைத்துக் கொண்டு பங்களாவிற்கு போனார் சிறிது நேரத்தில் சமையல்கார அப்பு எங்கள் இருவருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தார் இருவரும் தேநீர் அருந்திவிட்டு சற்று அமைதியாக இருந்தோம் மிலன் உணவருந்தி விட்டு விடை பெற்றதும் மீண்டும் கதைத்து துவங்கினார்.

நான் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அந்த வணக்கத்திற்குரியவன் எனக்கு உணவு எடுத்து வருவான் எனது மகளையும் அழைத்து வருவான் ஆனால் மிலன் என்னை வந்து பார்க்கவே மாட்டார். எனது மகளுக்கு ஆங்கிலமும் ஏனைய பாடங்களையும் வணக்கத்திற்குரியவன் கற்பிக்கத் துவங்கினான் அப்போது அவளுக்கு 16 வயது பருவ வயது மிலனிடமிருந்து கிடைக்காத அன்பும் எனக்கும் எனது மகளுக்கும் அந்த பாதிரியாரிடம் இருந்து கிடைத்தது எனது மகளை அவனும் மகளாகத்தான் பார்த்தான் என்றும் நம்பினேன் அவளை அவன் அரவணைத்து அன்பாக பார்த்துக் கொண்டாள் அவன் மீது நான் அதீத நம்பிக்கை கொண்டிருந்தேன்.கிட்டத்தட்ட 35 வருட காலமாக எனது அன்புத் தோழன் சிஸ்டர் உங்களுக்கு தெரியும் ராஜ் எங்கள் அண்ணாவின் கிளாஸ் மேட் பேப்பர்ல எல்லாம் எழுதுவான் அவனுடனும் நான் பேசாமல் விட்டேன் அவனிடம் தான் நான் அதிகமான விடயங்களை பேசி ஆலோசனை கேட்பேன் அவனும் சிறிது நாட்களுக்கு பின் மலேசியா சென்று விட்டான். அந்த வணக்கத்திற்குரியவன் உயர் படிப்பிற்காக அமெரிக்கா செல்ல புறப்பட்டபோது நானும் கதறி அழுதேன் எனது மகளும் அழுதால் அவனோடு அவனின் வீட்டுக்கு சென்றோம் அவனை விமான நிலையத்தில் விடை கொடுத்து வந்து அவனது வயதான பெற்றோர்களுக்கு ஆறுதலாக அங்கு தங்கினோம் அவர்களுக்கு பணிவிடை செய்தோம்.என்று குழுங்கி குழுங்கி அழத்துவங்கினாள் மிலனின் சிங்கள பெற்றோர்கள் என்னை துச்சமாக மதித்த போது இவர்கள் என்னை மிகவும் கௌரவப்படுத்தி கவனித்தார்கள் எனது வாழ்க்கையில் இந்த குடும்பம் கிடைத்தது பெரும் வரப் பிரசாதம் என்று மகிழ்ந்து கடவுளுக்கு நன்றி கூறினேன். அவனை ஒரு புனிதனாக நினைத்தேன் தொலைபேசியில் வீடியோ அழைப்பில் அடிக்கடி கதைப்போம் பல மணி நேரம் கதைப்போம் கதைப்போம் அவனுடன் பேசும் பொழுதெல்லாம் பிரிவு தாங்க முடியாமல் கதறி கதறி அழுதேன் எனது மகளும் அழுதால் அடிக்கடி அவனது பெற்றோரை சென்று பார்த்து வந்தேன் அவர்களும் என் மீது அன்பை காட்டினார்கள் அண்மையில் ஒரு நாள் நான் எனது மகளின் தொலைபேசி பழுதடைந்து அதை பழுது பார்ப்பதற்காக எங்கள் உறவுக்கார பையன் ஒருவனிடம் கொடுத்தேன் அந்த தொலைபேசியில் இருந்த சில படங்களை எடுத்துக் காட்டினான் அந்த படங்களை பார்த்ததும் எனக்கு பூமியை பிளந்து உள்ளே போய் மாண்டு விடலாம் என்று எண்ணம் தோன்றியது ஒரு தாயாக உடனே நான் அவளது தொலைபேசியை அவளுக்கு கொடுக்காமல் குறித்த வணக்கத்திற்குரியவனுக்கு தொலைபேசியில் அழைத்து எனது குடும்பத்தை சோதனை செய்யாதே என் பிள்ளையை விட்டு விடு என்றேன் அவன் கேட்டதாக இல்லை. இன்று என் பிள்ளை என் மீது போலீசில் புகார் செய்துவிட்டு வீட்டை விட்டு சென்று யாரோ ஒரு வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் அந்த தொலைபேசியில் இருந்த அந்த படங்களை தேடி கொடுத்த அந்த உறவுக்கார பையனை பழிவாங்குவதற்காக அவன் வீட்டிற்கு வருவது அவளுக்கு பாதுகாப்பில்லை என்று கூறுகிறாள் அவளை இயக்கும் அந்த வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறையான கத்தோலிக்க மதகுரு தண்டிக்கப்பட வேண்டும் என்று கதறி அழுத வின்சியை எவ்வாறு ஆசுவாசப்படுத்துவது என்று எனக்கு தெரியவில்லை அவள் கரங்களை இறுகப்பற்றி அவளுக்கு சிறிது நேரம் ஆறுதலாக இருந்து புறப்படத் தயாரானேன் பகல் உணவு உண்ணும் படி என்னை வின்சி வற்புறுத்தினால் என்னால் முடியவில்லை. எனது துறவர ஆடை கூட எனக்கு சுமையாக இருந்தது. விடைபெற்றேன் வாகனம் என்னை ஏற்றிக் கொண்டு மேல் இருந்து கீழ் நோக்கி இறங்கியது மாறாத தோட்டங்களின் வாழ்க்கை கண்டு கவலைப்பட்ட எனக்கு உழைக்கும் என் பெற்றோர்கள் 6×6 லயன் அறையிலும் உழைக்காத துரைமார்கள் 500× 500 பங்களாக்களிலும் வாழ்வது எவ்வளவு பிழை என்ற சிந்தனை ஓடியது கனத்த மனத்துடன் வின்சியின் நினைவுகளுடன் வின்சியின் மகளை இந்த சோதனைகளில் இருந்து கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் வீடு நோக்கி புறப்பட்டேன்.

வின்சி என்னும் எனது பாடசாலை நம்பி அன்பிற்காக ஏங்கினாள் ஏங்குகிறாள் ஏங்குவாள் அவள் பிழையில்லை ஆனாலும் பிழை தான் என்ற எண்ணங்களுடன் வீடு வந்து சேர்ந்தேன் அவள் மனக் கஷ்டங்கள் என்னையும் ஆக்ரமித்து...

**சோழன்**

# ஒரு மழைத்துளி

மழை பொழிந்தது
என் வீட்டு கூரை
கொடுத்த
ஒரு மழைத்துளியைப்
பிடிக்க முடியவில்லை

என் இமை திரையில்
விழுந்தது
விழியை நனைத்தது

திருமணத்தின்
போது
புதிதாகப் போட்டது
கூரைக்குப் பத்து வயது

என் குழந்தைக்கு
ஐந்து வயது
வளர்ந்து விட்டாள்

காது குத்துக்கு
புது கூரை
போட வேண்டும்

ஒரு மழைத்துளி
நினைவுகளையும்
கனவுகளையும்
ஒரு நிமிடம்
உருட்டி விட்டது.

# முத்துக்கள் இருக்கும் சிப்பிகள்

சூரியன் வீசிய
வெள்ளிக் காசுகள்
கடலில்
மிதக்க தொடங்கின

வெப்பம் தாங்காமல்
கடலில்
நீந்த தொடங்கின

மூச்சடக்கி
அடி ஆழத்திற்கு
சென்றன

வண்ண பவளப்
பாறைகளில்
மோதி
முத்துக்களாக

உயிர்ப் பெற்று
சிப்பிகளில்
படுத்துக் கொண்டன
வெண்முத்துக்கள்.

# கோவை ஆனந்தன் கவிதைகள்

விதைத்தவனுக்கு மட்டுமல்ல
வேடிக்கை பார்த்துவனுக்கும்
சேர்த்துத்தான் கனிகிறது
என்றோ ஒருநாள்
மண்ணிலிடப்பட்ட விதை.

❍

அமாவசை
திதி நாட்களில் வரும் காக்கைகளை
மூதாதையர்களாய் நினைத்து வழிபடுவோர்க்கு
முதியோர் இல்லத்தில் அமர்த்தப்பட்டுள்ள
அப்பாவும் அம்மாவும்
நினைவுக்கு வராமலே கடந்துவிடுகிறது
முன்னோர்களின் நினைவுகள்.

❍

பரணிலிருந்து இறங்கிய
தாத்தாவின் புகைப்படம்
வரவேற்பறையில் -அவர் அமர்ந்திருந்த
மர நாற்காலிக்கு அருகிலேயே
விரிக்கப்பட்ட தலை வாழை இலையை முறைத்து
பார்த்தபடியே இருக்க

தாத்தாவுக்கு பிடிக்காத
சடங்கு சம்பிரதாயங்கள்
பூ மாலையோடு ஊதுபத்தியாய் மணக்க

தாத்தாவுக்குப் பிடித்தமான
கறிச்சோறும் குடல்கறியும் கூரையின் மேல் விழ
நீண்ட யோசனைக்குப்பின்
வந்து தின்ற காக்கையும் மரக்கிளையில்

தாத்தாவுக்கு பிடிக்காதை
தனக்குப் பிடித்ததாக்கி
தனக்குப் பிடித்ததை
தாத்தாவுக்கும்
பிடித்ததாக்கிய பேரன்
கண் இமைக்காமல்
பார்த்துக்கொண்டே இருக்கிறான்

படையலருகே நிமிர்த்தி வைக்கப்பட்டிருக்கும்
குவார்ட்டர் பாட்டிலை.

❍

மறதி என்ற
ஒற்றைச் சொல்லினால்
வலிமை வாய்ந்த உண்மைகளையும் பிணங்களாக்கி
நழுவிக்கொள்கிறீர்கள்
மெல்லிய புன்னகையின்
துணையோடு.

❍

சிக்கி முக்கி கல்லிலிருந்து
வந்தாலென்ன
சிறு தீக்குச்சியிலிருந்து வந்தாலென்ன
இருட்டை விரட்டும் தீப்பொறி
எதிலிருந்து வந்தாலும்
வெளிச்சம்தானே தரப்போகிறது.

❍

நாட்டில் ஓடும்
எல்லா நதிகளையும்
புனித நதிகளிகளென்றோம்
கையிலிருந்த மக்கும்
மக்காத கழிவுகளை
நீரில் வீசிய
பாவங்களுக்குப் பிறகு....

❍

முட்டி மோதி மண்ணைப்பிளந்து வெளியேறும்
ஒற்றை விதையின் மீது
செடியா! மரமா! என்று
ஆராய்வதைத் தவிர்த்து
கொஞ்சம் அன்பை ஊற்றுங்கள்
பச்சையங்களால் நிறையட்டும்
அன்பின் நிழல்.



# வெறுப்பும் இருப்பும்

**கந்தர்மடம் அ.அஜந்தன்**

காரிருள் சூழ்ந்த இரவுப்பொழுது வாகன இரைச்சல்களும் மனித நடமாட்டங்களும் ஓய்ந்திருந்தவேளை ஊரே அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கிறது. ஆரணி தனது வேலையில் பகல் முழுவதும் ஈடுபாட்டோடு இருந்ததால் மிகவும் சோர்வோடு படுத்துறங்கினாள். தந்தையின் கொறட்டைச் சத்தம் அவளைத் தொந்தரவு செய்தது தலையணையால் தனது காதுகளை மூடிக்கொண்டு உறங்கிப் பார்க்கிறாள் அவளால் முடியவில்லை. சினம்கொண்டு அடிக்கடி எழுந்தாள் எப்பொழுதும் மங்கலாக எரிந்துகொண்டிருக்கும் நைற்லைற்றில்; தாயைப்பார்த்தாள். தாய் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தார். ஆரணிக்கு கோபம் வந்தது தாயை எழுப்பினாள்

"என்னம்மா எனக்கு இந்த இடத்தில கிட்டக் கிடக்க நித்திரையே வருகிதில்லை. வேலையாலை பிந்திவந்த களைப்புக்கு நித்திரை தூக்கியடிக்கிது. ஆனால் இந்தக் கொறட்டைச் சத்தத்திலை நித்திரைகொள்ளவே ஏலாமலக் கிடக்குது. நாங்கள் அறைக்குள்ள போய் படுப்பமோ ? அப்பா என்ன எழும்பவே போறார் ?" என்றாள் ஆரணி.

"இல்லைப் பிள்ளை நீ வேணுமெண்டால் போய்ப்படு எனக்கு இதிலை படுத்தாத்தான் இப்பவெல்லாம் நித்திரையே வருகுது. அப்பான்ர கொறட்டைச் சத்தம் கேட்காட்டித்தான் எனக்கு நித்திரை குழம்பி பயமே வருகிது". ஏன்றார்; தாய்.

கோபத்தில் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டு உறங்கிவிட்டாள். மறுநாள் சனிக்கிழமை என்பதால் தாமதமாகவே எழுந்தாள் ஆரணி. பல்துலக்கிக் குளித்தபின் தாயோடு சமையலறையில் உதவிபுரியச் சென்றாள்.

"இரவு நல்ல நித்திரைபோலக் கிடக்கு?" என்றார் தாய்.

"எப்பிடியம்மா இவ்வளவு நாளா பொறுத்துக்கொண்டு இருக்கிறியள்? எனக்கும் அப்பாவில உயிர்தான் ஆனாலும் அவரிட்டை எனக்குப் பிடிக்காதது இந்தக் கொறட்டை ஒண்டுதான்". ஏன்றாள் ஆரணி.

"எங்கட வீட்டையும் எதிர்த்துத்தான் நானும் அப்பாவும் லவ் மாறேஜ் பண்ணினனாங்கள். உனக்கு ஒரு வயசாகும் வரைக்கும் எங்களை அவையள் வீட்டை சேர்க்கவே இல்லை. அவற்றை கொறட்டைச் சத்தத்தில எத்தின நாள் நித்திரையால எழும்பி வெளியில போய் எல்லாம் இருந்திருப்பன். ஆனாலும் இதை ஒரு பிரச்சனையா எடுத்தால் வீட்டை எதிர்த்துக் கலியாணம் செய்த நான் தோற்றுப்போனவளாயிடுவன். அதாலையே பொறுத்துக்கொள்ளப் பழகிட்டன். என்ன அடிக்கடி எனக்கும் அப்பாக்கும் இந்தக் கொறட்டையாலையே சண்டைவரும். அந்தச் சண்டைக்கு கொறட்டைச் சண்டை எண்டே பெயரும் வந்திட்டுது". என்றார் தாய்.

"ம்ம்...... உங்கடை லவ் ஸ்ரோறியில இந்தப் பார்ட்டை மட்டும் இவ்வளவு நாளா மிஸ்பண்ணீட்டனோ? என்றாள் கிண்டலாக.

"மற்றவைக்கு முன்னுக்கு அவரை விட்டுக்கொடுக்கக் கூடாதெண்டு பொறுத்துக்கொள்ளப் பழகிட்டன். இருந்தாலும் ஆரும் விசிற்றேஸ் வீட்டுக்கு வந்து தங்கினால் சங்கடமாத்தான் இருக்கம். ஏன் இப்பவும் அம்மம்மாக்கள் இந்தக் கொறட்டையைப் பற்றியும் அதால வாற சண்டையையும் சொல்லி நக்கலடிப்பினம். என்ன செய்யிறது எங்கட பெற்றோருக்கு முன்னுக்கு வாழ்ந்து காட்டவேணுமெண்ட ஓர்மத்தில மனுசன் இரவு பகலா வேலை செய்து அதில வாற களைப்பில இன்னும் கொறட்டை கூடிக்கொண்டு போட்டுது. நீயும் வளர வளர பாவம் அவர் உன்னைக் குழப்பக்கூடாதென்டு வெளிக் கோலில படுத்து நித்திரைகொள்ளத் தொடங்கிற்றார். நானும் உன்ரை சாட்டில நிம்மதியா நித்ரை கொள்ளத் தொடங்கிப் போட்டன்". என்றார் தாய்

"பாவம் களைப்பிலதான் இப்பிடி அவர் கொறட்டை விடுறார் எண்டு தெரியுது. அதுக்கு மருந்துமில்லை ஏதோ சமாளிச்சுக்கொண்டுதான் போக வேணும். நேற்று எனக்குச் சரியான களைப்பு அதுதான் கோபம் வந்தது". என்றாள் ஆரணி

“இதே களைப்புத்தான் அவருக்கும் இவ்வளவு நாளா இருந்தது அதின்ர வெளிப்பாடுதான் இந்தக் கொறட்டை. ஆதாலைதான் நானும் சண்டைபிடிக்காமல் விட்டடிட்டன்”. என்றார் தாயார்

“இம் இதெல்லாம் பெண்களின்ரை தியாகம்தான் என்னம்மா?. நானா இருந்திருந்தால் அடுத்த நாளே டிவோஸ்தான் பண்ணியிருப்பன். என்றாள் ஆரணி

“அப்பாவும் பாவம் கொறட்டைப் பயத்திலதான் சொந்தக்காரரற்ற வீட்டிலகூடப் போய்த் தங்கிறதில்லை. அதை மற்றவை அந்தாளுக்கு ஏதோ தலைக்கனமெண்டு நினைக்கினம். இந்தக் கொறட்டை விசயத்தை புதையல் இரகசியமாக் காத்துவந்திட்டம். என்றார் தாய்

“நல்லா காத்தியள் இரகசியத்தை. அதுதான் இப்ப வீட்டை கோமாவில இருக்கிற அப்பாவைப் பார்க்க வாற ஏல்லாருக்கும் தெரிஞ்சிட்டுதே அப்பாவோட கொறட்டை இரகசியம்” என்றாள் ஆரணி

சட்டென்று மாறிய தாயின் முகத்தை அச்சத்தோடு பார்த்தாள் ஆரணி

“உன்னையும் என்னையும் இரவு பகலாக் காத்த மனுசன் இப்போ மூச்சுப் பேச்சில்லாமல் கோமாவில கிடக்கிறார். நீ ஒரு வேலைக்குப் போகும்வரைக்கும் ஓடி ஓடி உழைக்கவேணுமெண்டு ஆசைப்பட்டவர். வெண்ணை திரண்டுவர பானையை உடைச்ச கதையா உனக்கு வேலை கிடைக்கிறக்கு கிட்டவா இப்பிடியா விபத்தில சிக்கவேணும். டொக்ரேசும் இனி இவ்வளவுதானெண்டு கை விட்டிட்டீனம். அந்த மனுசனை ஆக்கள் வந்து பாக்கிறது உனக்கு நக்கலாக் கிடக்கோ? என்று விம்மியழுதார் தாய்

செய்வதறியாமல் திகைத்துப்போனாள் ஆரணி “இல்லையம்மா எனக்கும் அப்பாவில அன்பு இருக்கு. நான் ராத்திரி நித்திரைக் குழப்பத்தில இருந்ததால இந்தக் கதையைத் தொடக்கினனான் நீங்கள் அழவேண்டாம்” என்றாள்

“வாழ்க்கையில எவ்வளவு விசயத்தை நாங்கள் கடக்கவேணும். அதில இந்தக் கொறட்டையை ஆரம்பத்தில நானும் பெரிய பிரச்சினையாத்தான் பார்த்தனான். நீ சொன்னமாதிரி விட்டிட்டுப் போகலாமோ எண்டுகூட யோசிச்சதுண்டு. ஆனால் அண்டைக்கு அருவெருப்பாகவும், இடைஞ்சலாவும், வெறுப்பாவும் இருந்த கொறட்டைதான் அப்பப்போ எனக்கு ஆறுதலையே தருகுது உனக்கு அது தெரியுமே?” ஏன்றார் விம்மியபடி

தனக்கு ஆறுதலாகக் கதைத்த தாய் திடீரென தன்மீது கோபம் கொண்டதன் காரணம் தெரியாமல் குழப்பத்தில் நின்றாள ஆரணி;.

“ஏனம்மா இவ்வளவு சீரியசா கதைக்கிறியள். நீங்களும்தான் முந்தி கொறட்டை விடேக்க அப்பாவை பேசிறனீங்கள்” என்றாள் ஆதங்கத்துடன்


“ ஓம். அது எவ்வளவு பெரிய தப்பெண்டு இப்பத்தான் விளங்கிது. நீ வேலை வேலையெண்டு போடுவா. அப்பாவை நான்தானே பார்க்கவேணும். சமையல் கட்டுக்கும் அப்பாட கட்டிலுக்குமிடையில எத்தினை தடவை ஓடியோடிப் பார்த்திருப்பன். உயிர் இருக்கிதோ இல்லையோ எண்டு எத்தினை நாள் இப்பிடி அலைஞ்சிருப்பன். கடைசியாத்தான் எனக்கு ஒண்டு விளங்கினது அவற்றை கொறட்டைச் சத்தம் கேட்டால் அவர் உயிரோடை இருக்கிறர் எண்டு சமையலறையில இருந்துகொண்டே தெரிஞ்சு கொள்ளுவன். அண்டைக்கு எனக்கு வெறுப்பா இருந்த அதே கொறட்டை கனநேரமாக் கேக்காமல்ப்போனால் மனம் பதறும். திரும்பவும் கொறட்டைச் சத்தம் கேட்டா மனம் எப்பிடி ஆறுமெண்டு தெரியுமே?. அப்பா கோமாவில இருந்தாலும் அவற்றை கொறட்டைச் சத்தம் எனக்குள்ளை ஒரு பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்தும்”. என்று அழுதார் தாய்

ஆரணிக்குத் தன் தவறும் தாயின் கோபத்தில் இருந்த அந்த நியாயமும் புரிந்தது. தன் தந்தையின் கொறட்டைச் சத்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டாள். விட்டு விட்டுக் கேட்ட கொறட்டைச் சத்தம் முதல் முறையாக ஆரணிக்கும் ஆறுதலைக் கொடுத்தது, தாயின் தவிப்பும் வேதனையும் அவளையும் சிந்திக்க வைத்தது. தந்தையிடம் சென்றாள் கோமாவில் இருக்கும் தந்தையின் கால்களைத் தொட்டு வணங்கி கண்ணீர் சிந்தினாள். அவளின் மனதிற்குள் கேள்விகளின் போராட்டம் வாழ்வைத் தெளிய வைத்தது. தாயும் தகப்பன் முன் வந்து நின்று கண்ணீர் சிந்தினார். தாயை அணைத்தபடி

“அம்மா ஒரு சின்ன விசயத்துக்காக அப்பாவ நீங்கள் வெறுத்திருந்தால் இப்பிடியொரு அப்பா எனக்குக் கிடைச்சிருக்க மாட்டார். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிற சின்னச் சின்ன குறையளை நாங்கள் பெருசு படுத்திட்டமெண்டால் வாழமுடியாது. அண்டைக்கு உங்கடை நித்திரையைக் குழப்பின கொறட்டை இண்டைக்கு அவர் உயிரோடை இருக்கிறாரா என்று தெரிஞ்சுகொள்ளப் பயன்படுகிது. கொறட்டைச் சத்தம் கேட்க்காதா எண்டு ஏங்கவைக்குது. அதைக் கேட்டதுக்குப் பிறகுதான் நீங்கள் நிம்மதியா தூங்கிறியள் எண்டதின்ர அரத்தம் இப்பதான் அம்மா புரியுது. இனி அப்பா உயிரோடை இருக்கும் வரைக்கும எனக்கும் அவற்றை கொறட்டைதான் பாதுகாப்பாகவும், தாலாட்டாகவும் இருக்கும்;”. என்று கூறியவாறு அப்பாவின் தலைமாட்டில் அமர்ந்து அவரின் தலையைக் கோதிவிட்டாள் ஆரணி..

சி முத்தரசன் அரியலூர்

# எந்தையும் தாயும்



உங்கள் எண்ணங்களின்
வண்ணங்களால் வார்த்து எடுக்கப்பட்டவன்

உங்கள் சொற்களால்
செதுக்கப்பட்டவன்

பிரகாசமான வெளிச்சங்களை
தந்து விட்டு
தன்னை இழந்து விடும்
மெழுகுவர்த்தியில்

வெளிச்சத்தை கிரகித்தோமே தவிர
நீங்கள் கரைந்து கொண்டு இருப்பதை
கவனிக்கவில்லை!

சில நேரங்களில் - உங்கள்
கடும் சொற்கள்
சுடும் வெயிலாகலாம்

ஆனால்
அந்த வெயிலை எதிர்பார்த்துதான் அந்த விடியலே
காத்துக் கொண்டிருக்கிறது!

அறிவுரையானாலும் சரி
அடித்து உரைப்பதனாலும் சரி
அப்பாவின் அரவணைப்பிற்கு
ஈடு ஏது!

ஏதோ தெரியவில்லை - உங்கள்
கம்பீர நடையில்
காந்தமாய் கவரப்பட்டவன் நான்

தூரத்தில் கேட்கும் - உங்கள்
காலடி சத்தத்தை கண்டு
வீட்டிற்கு விரைந்து
புத்தகத்தை எடுத்து
படிப்பதாய் அமர்ந்தது
அழகிய நினைவுகள்....!

நீங்கள் சிரித்து சிரித்து
விளையாடும் போதெல்லாம் நான் பயந்து பயந்து தான்
விளையாடி இருக்கிறேன்!

கோபத்தில் அய்யனாராய்
கண்கேளே பயமுறுத்தும் !
விளையாடி மகிழ்கையில்
அந்தக் கண்கேளே
குழைந்து நிற்கும் !

காலனுக்கு என்ன அவசரமோ
கண்கலங்க வைத்து விட்டான்
தாயே தந்தையாக மாறிய பொழுது
தடுமாறியது வாழ்க்கையின் தடங்கள்

பள்ளிப் படிப்பிற்கே படாதபாடு
தாயார் வாங்கும் கூலியானது
எங்களுக்கே காலியானது

நாற்று நட்டு கொண்டே
நான்கு ஊரை கடந்த
நாட்கள் எல்லாம் ஏராளம்
என்றாலும் என் தாயாருக்கோ....
படிக்கவே தெரிவதில்லை!

எப்பாடு பட்டாலும்
படிப்பை விடவில்லை!
பட்டினியாய் கூட
இருந்திருக்கிறேன்
படிக்காமல் இருந்ததில்லை!

அந்த நாளின் அந்திப்பொழுது
அதுவரையிலும் ஆகாரம் இல்லை!

அமைதியாக தான் இருக்கிறாய்!
கண்ணீராய் வடிக்கிறாய்!
எப்படி கேட்பது என்று
தயங்கி தயங்கி
கேட்டே விட்டேன்
அம்மா பசிக்கிறது என....

அதுவரை அமைதியாக
அழுது கொண்டிருந்தவர்
ஓவன கதறி அழுகிறாள்

அழாதே அம்மா
தண்ணீர் கொண்டு
வயிற்றை நிரப்புகிறேன்

பசிக்காது அம்மா...
என்று கூறிய
அடுத்த நொடியில்

ஐயோ .... என
நெஞ்சில் அடித்து அழுதாய் !
பிஞ்சு நெஞ்சில் இன்றும் பதிந்திருக்கிறது
இதை எழுதுகையில்
கண்ணீரும் நிறைந்திருக்கிறது!

அதன் பிறகு தான் வைராக்கியமானாய் - எங்களை வைரமாக்கினாய்...!

கலங்கி நிற்கையில்
கலங்கரை விளக்கம் ஆனாய்

மையத்தில் நெருப்பு
குழம்பாய் கொதித்துக் கொண்டிருந்தாலும்
வெளியே குளிர்ந்து
அனைத்து உயிர்களையும்
அன்பாய் சுமக்கும்
பூமியை போல

அனைத்தையும் பொறுத்துக் கொண்டு
புன்னகைத்து நிற்கிறாய் - எங்களை
காத்து நிற்கிறாய்
தலை கோதும்
உம் விரல்களால்
எம் தலை எழுத்தையே
மாற்றி வைத்தாய்....
இன்று தலை நிமிர்ந்து வாழ்கிறேன்
என்றாலும் என்னை
தாங்கி கொண்டு தான் இருக்கிறாய்!
என் அன்பு தாயிக்கு ...
ஆயிரம் முத்தங்கள் !!!

த. ரவீந்திரன்...

# நிராகரிப்பு..

*என் முகம் காட்ட*
*மறுக்கும் கண்ணாடியில்*
*விலகியோடும் பாதரசத்தின்*
*இமைகளில் தெரியும்*
*நகக்கீரலில் உன் நிராகரிப்பு.!*

*என்னை கண்டதும்*
*முகம் திருப்பி சென்ற*
*நின் செய்கையில்*
*நெருஞ்சி முள் குத்திய*
*பரிதவிப்பு.!*

*இந்த சாலையெங்கும்*
*பயணம் மட்டும் உன்னோடு*
*நானற்ற என்னோடு நீ.!*

திக்குவல்லை கமால் (இலங்கை)

# மேய்ப்பு

*பரந்து விரிந்து கிடந்தது*
*நிலம்*

*பழம்...கிழங்கு...தானியம்*
*இதில் எதை விதைப்பது ?*

*புல் விதைப்பதென்று*
*தீர்மானமாயிற்று*

*புசித்தன...*
*அசைபோட்டன...*
*துள்ளிக் குதித்தன மந்தைகள்*

*ஒரு சிந்தைக் கூட்டம்*
*ஏதோ முணுமுணுத்தது*

*வெகுண்டெழுந்த மந்தைகள்*
*முட்டிமோதி*
*குத்திக் குதறி*
*அவற்றை விரட்டின*

*மந்தைக் கூட்டமும்*
*மேய்ப்பர் சிலரும்...*
*மாற்ற முடியாத வரலாறா?*

*மாற்றம் ஒன்றுதானே மாறாதது?*

க. புனிதன்

# திசைகளை வளர்ப்பவன்

ஐந்தாறு பறவைகளை
வளர்ப்பதன் மூலம்
திசைகளை வளர்ப்பவன்
நான்
திசைகளை முட்டை இட்டு
திசைகளை அடை காத்து
திசைகளை பொறிப்பவை
என் பறவைகள்
வண்ண தொட்டியில்
இரு திசைகளில் மட்டும்
நீந்தும் வண்ண மீன்கள்
போல அல்ல நான் வளர்க்கும் பறவைகள்
காற்றை காதலிப்பவை
பழங்கள் மீன்கள்
புழுக்கள் பூச்சிகள் என உணவை தேடி
சுதந்திரமாக
பறந்து தன் திசையை
வளர்ப்பவை
வளர்ந்து கிளை பரப்பி
பூக்கள் பூத்து கனிகள் காய்த்து
காற்றில் அசைந்து
எல்லா திசையையும் அழிக்கும்
மரம் எனும் ஓவியத்தின்
வித்து போடும் என் சாகச பறவைகள்
வானத்தை கடலாகவும்
கடலை வானமாகவும்
தாண்டுபவை.

அருணோதயா

இக்கணமே
இக்காதலை
கொண்டறழித்துவிட்டு...
போ...
ஒரு பறவையென
இரைத்தேடி
கூடு திரும்புகையில்
உனை தேடும் பொருட்டல்லாது
உடற்சோர்வின் அழற்ச்சியில்
சற்றே உறங்கி எழுந்து
ஒரு தேநீர் பருகி
பிறகு, ஆசுவாசமாய்
ஒரு நீண்ட குளியல்
இதற்க்குள்
மறத்து போயிருக்கும்
பெயரிடாத அந்த வலி!

தவறேதும் நிகழவில்லை
தவறில்லை என்பதாலே
மனிதர்களாய்
சபிக்கப்பட்டோம்
எனவே வா...
சபிக்கப்பட்ட
வாழ்வினை
சமன் செய்ய
ஆதாம் ஏவாளாய்
ஆசீர்வதிக்கப்பட்டு,
படைக்கப்பட்ட
அத்தனை
கனிகளையும்
புசிப்போம்!

முஷ்தாக் அஹ்மத், அக்குறணை

# மழை

மண்ண குளிர்விக்கிற மழ
ஏன்ட மண்வீட்ட மழச்சோறா ஆக்கிவிட்டதே
செம்மண்ணெடுத்து செக்கச்சிவப்பா ஊடுமொழுகி
காரவெயில் வந்தவுடனே காயவெச்சி கனபக்குவமா
கட்டிக்காத்த வீடய்யா இது
காத்துமழ வீரியமா வீசக்கொல காரியம்தான்
முடிஞ்சிதோன்டு
கையில உசுருபுடிச்சிக்கிட்டே
கட்டிய மனுஷியோட கண்ணுரெண்டும் கலங்கி
நிக்கிறப்போ
அடிவயிற்றில் இடிவிழுந்திருச்சி
மெல்லப் பெய்த மழ
மொல்ல மொல்ல
எல்லை கடக்குறதுபோல
சொல்லாமலே என் ஊட்டு
வராண்டவ தாண்ட
ஏன்ட அல்லாஹ்வே என்டு
அழுது புலம்பி அணகட்ட பாத்தேன் வெறும்
கம்புகட்ட கொண்டு
நான் பெத்த புள்ள வந்து
தண்ணி வடிக்க அத பாத்து
என் தொண்டதண்ணியெல்லாம் வத்திபோச்சி
கத்திப்பேசுற தூரத்துல சுத்துவட்டாரத்துக்கு
யாருமில்ல அடமழக்கும் குடபுடிக்க
அவசரத்துக்கும் ஒதவிஒத்தாசைக்கு ஒருபயலும்
இங்கில்ல

நான், என் பொஞ்சாதியும்
பெத்த புள்ளயும் மட்டும்தான்
பத்திரமா ஆசயா கட்டி வாழ்ந்த ஊட்ட,
சுட்டி மகள் ஓடித்திருந்த கூட்ட
கலச்சிப்போட்ட மழைக்கு
நான் என்ன சாபம் உட?
சாபத்த விட கோரிக்க தான்
என்னால வெக்கலாம்

நம்ம ஆச ஊட்ட தந்துறச்சொல்லி மழையை
கேக்கவா?
ஈரஞ் சொட்டசொட்ட நடுமழையில் நனைந்து
அழும் மனுஷியோட மனச நெறக்க சொல்லி
கேக்கவா?
பாசப்புள்ள எந்தப் பாசாங்குமில்லாம நடுராத்திரி
பெய்கிற பேய்மழயில போய்படுப்பதெங்கே
என்கிறாளே அவளுக்கு படுத்துறங்க
எடங்கொடுக்கச்சொல்லி கேக்கவா?

எதை கேக்க ஏன்ட அல்லாஹ்வே...
என்னத்த செய்வேன் ஏன்ட ரப்பே...

சொத்துசொகம் உள்ளவனுக்கெல்லாம் மழ
மெத்தைசுகம்
ஒட்டுத்துணி சொந்தமில்லாத நமக்கெல்லாம் மழ
சாபம்
ஏன்ட ஒரே ஊட்ட ஒரே ராத்திரில
ஒடச்சிநொறுக்கின மழயே
அடக்கிகொள் உன் கோபத்த
என் கோபம் தெரியாம
அது ஓன்ட மேல இல்ல
நீ வந்தா இரிக்க
ஒரு கொங்கிரீட் ஊட்ட கேட்டு மிச்சகாலமா ஊர்
மந்திரிமார்ட்ட சொல்லியும்
தாரேண்டு ஒரே தல புள்ள கெடச்ச நாள்லிருந்தே
தகவல் மட்டுமே தார அவங்க மேலதான்
ஏன்ட கோபம் இனிமே மழயாகும்.

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

# ஹைக்கூ கவிதைகள்

அழுகை ஓசை
படலை அடைப்பு
குடிசை அருகில் மிட்டாய்க்காரன்.

❍

ஒரே நிலம்
ஒரே நீர்
எப்படி பலவண்ணப் பூக்கள்?

❍

அடகுப்பணம்
மீட்கப்படுகிறது
அம்மாவின் ஏக்கம்

❍

பூக்கும் பூக்கள்
காய்க்கும் கனிகள்
அதைவிட ஆறுதலாக நிழல்

❍

ஓயும் பறவைக்கு
சிறகுகள் தருகின்றன
மரத்தின் கிளைகள்

❍

என்ன பாவம் செய்தது?
செடியோடு வளர்ந்த
சிறுகளை

❍

உடையாத பலூன்
ஊரெங்கும் ஒளி
கோபுரக்கூரில் நிலா

❍

கடவுளின் ஆலயம்
கையேந்தி நிற்கிறார்
யாசகர் மனிதரிடம்

❍

கண்ணீர் துளி
சிதறி விழுந்து உடைகிறது
சோகம்

❍

பெருவானவெளி
பற்பல திசைகள்
ஒரே கூடு பறவைக்கு

❍


லாந்தரின் மெல்லிய வெளிச்சம்
பிரகாசமான அழகில்
இரவின் மறையிருள்

# முந்தைய இதழ்கள்


ஆவணி
2024
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2023


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி - 2023